OFFICE OF THE ... BOOKS,
REGISTERED
7- APR 1910
MADRAS.

# விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி II } ஸௌம்யஹு பங்குனிமீ 1910–ஹு மார்ச்சுமீ { பகுதி 9

## பரிசுத்தம்

### PURITY

முன்னர் எடுத்துக் கூறிய ஆராதனைகளை ஸரிவரச் செய்வதற்குப் பரிசுத்தமே ஒருவனிடம் அவசியம் இருக்கவேண்டியது. இந்தப் பரிசுத்தத்தின் ஸ்வரூபத்தை எடுத்து இங்கு விஸ்தரிப்போம்.

பரிசுத்தம் மூன்றுவிதம், நிஜபரிசுத்தம், அகப்பரிசுத்தம், புறப்பரிசுத்தம் என்பவைகளே. ஸாதாரணமாகப் புறப்பரிசுத்தமே பரிசுத்தம் என்ற பதத்திற்குப் பொருளாக எல்லோராலும் மதிக்கப்படுகிறது. பல்விளக்கல், ஸ்நானம் செய்தல், மடிவஸ்திரம் உடுத்தல், அசுத்தவஸ்துக்களைத் தொடாதிருத்தல், தேகத்தைக் கழுவுவது, ஆராதனைக்கு வேண்டிய வஸ்துக்களைச் சுத்தப்படுத்தல், சுத்தமாக இருந்து சேகரித்தல் ஆகிய இவைகளே புறப்பரிசுத்தத்தின் ரூபபேதங்கள். வெளிவித ஆராதனையின் நோக்கம் எதுவோ அதுபோன்றதுதான் இதன் நோக்கமும். மனிதன் மனதை ஆராதனைசெய்ய தகுதியாக்குவதற்கு இவைகள் ஸாதனமாக இருக்கும். மனிதன் ஸாதாரணமாகத் தொழிலற்று இருக்குங்கால் பழகிக் கெட்டுப்போகக்கூடிய விஷயங்களிலிருந்து இந்தப் புறப்பரிசுத்தம் அவனைத் தப்புவிக்கிறது.

இப்படிப் புறப்பரிசுத்தம் மாத்திரம் கவனிக்கப்பட்டால் மனிதன் தன்னை அறியாது கர்வியாகிவிடுவான். 'கோபம் சண்டாளம்,' 'ஆறுவது சினம்,' என்ற அரியவாக்கியங்களை அவன் மறக்கும்படி நேரிடும். அசுத்தமாக இருப்பவன்மேல் வெறுப்பும் தன்மேல் பெரியவிருப்பும் அவனுக்கு உண்டாகிவிடும். புறப்பரிசுத்தத்துடன் மாத்திரம் ஒருவன் ஆராதனை செய்துவருவானாகில் வரவர அகம்பாவம் மற்றையவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற இவ்வித எண்ணங்கள் பலப்படும். இதை நீக்கத்தான் அகப்பரிசுத்தம் ஏற்பட்டிருப்பது. இது புறப்பரிசுத்தத் தொழில்களைச் செய்யுங்கால் கூறும் மந்திரங்கள், பிரபஞ்சம் அனந்தமாயும் தான் அதனுள் சிறியாரில் சிறியனாயும் இருத்தல், தேகநிலையாமை, ஆத்மாவின் பெருமை இவைகளைப் பற்றி விசாரித்தல் ஆகிய இவைகள் ரூபமாக இருக்கும். இதுவும் முன்னதும் கூடியிருந்தால்தான் மனிதனை உள்ளபடி ஆராதனம் செய்து மேன்மை அடையும்படி செய்யும். வேலி எவ்வாறு நல்ல செடியைக் காக்குமோ அவ்வாறு புறப்பரிசுத்தம் ஒருவனைக்காக்கும். அகப்பரிசுத்தமோ, எருமுதலிய வஸ்துக்கள் எவ்வாறு செடியை நேரிட வளர உதவிசெய்யுமோ அவ்வாறு ஒருவன் செய்யும் ஆராதனையை ஓங்கச்செய்து அவனுக்கு அடக்கத்தையும் கொடுக்கும்.

பரிசுத்தமான சர்க்கரை, அல்லது வஸ்து என்றால் அது தனிமையாக வேறொன்றோடும் ஸம்பந்தப்படாது இருக்கிறது என்பது பொருள். ஆகவே பரிசுத்தம் என்பதில் தனிமை, கலப்பற்று நிற்றல் என்ற அர்த்தபாவம் இருக்கிறது. இந்த உட்பொருளை நோக்கில் பக்தன் உலக விஷயங்களில் மனதைக்கலைய விடாது தனிமையாகப் பரம்பொருள் ஒன்றிலேயே செலுத்த எண்ணுவதே நிஜபரிசுத்தம் என்ற பதத்தின் ஸ்வரூபம் என்பது விளங்கும். இந்தத்தனிமை, அதாவது, பரம்பொருளிடம் மாத்திரம் மனஞ்செலுத்தல், ஆராதனைக்கு ஸாக்ஷாத் ஸாதனம், நேரானவழி. இதுவிரையின் வளரும் சக்திக்கு நிகர். விரைக்குவளரும் சக்தி குறைந்தவிடத்து நல்ல வேலியும் எருவும் எவ்வாறு அதைத்தழைக்கும்படி செய்யமாட்டாவோ, அவ்வாறே இந்த நிஜபரிசுத்தம் இல்லாது வேறு முற்கூறிய பரிசுத்தங்கள் இருப்பின் ஆராதனையின் முடிவு கைகூடாது. ஆகவே உண்மையாக ஆராதனை செய்வதற்கு முக்கியமானது பகவத் ஸ்வரூபத்தை மாத்திரம் நாடிச் செல்லுதல் என்ற நிஜபரிசுத்தமே. மற்றைய பரிசுத்தங்கள் யாவும், இந்தத் தன்மையை உண்டாக்கக்கூடிய ஸாதனங்களே.

விவேக போதினி

தொகுதி 2] ஸௌம்யஞூ பங்குனிமீ [பகுதி 9

## கர்மகாண்டம்:

## ஆக்ஷேபஸமாதானங்கள்

### KARMA KANDA
### OBJECTIONS AND ANSWERS

வேதபாஹ்யர்களுக்கும், வேதங்களின் அந்தரங்க நோக்கங்கள் இப்படிப்பட்டவை என்று அறியாதவர்களுக்கும், வேத விஷயங்களை அரைகுறையாக அறிந்த வெளி நாட்டார்களுக்கும் கர்மகாண்டம் மிகுந்த தாழ்ந்தபாகமாகத் தோற்றலாம். இதுபற்றியே மேனாட்டவர்களில் சிலர் வேதங்களை "குழந்தைப் பருவத்திலுள்ள ஜனங்களது மழலைச்சொற்கள்" என்றும், "வேறே எந்த நாட்டாரது சாஸ்திரங்களிலும் காணப்படாத பௌரோஹித்ய விஷயங்களைப்பற்றிய நிஸ்ஸாரமும் கல்விமதம் நிறைந்ததுமான தர்க்கவாதங்களும், யுக்தி விரோதமான மனோராஜ்ய விசேஷங்களுமே வேதங்களில் நிறைந்துள்ளன," என்றும் மனம்போன போக்கே அபிப்பிராயப்படுகின்றனர். இவர்கள் அறியாமை அதிகப்பட இவர் அபிப்பிராயங்களும் அதிக குரூரமாகவே வெளிவரும். அறியாமை மனிதனைக் கழுதையாக்கிவிடுகிறது என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம். இவ்வபிப்பிராயம் கூறுவோர் மூதாதைகள் உழத்தெரியாமலும், நெருப்பென்று ஓர் வஸ்து இருக்கின்றது அது இவ்வாறு மனிதனுக்கு உபயோகப்படும் என்பதை அறியாமலும், கிடைத்ததை அப்படியே உண்டு மிகுந்த கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், மிகுந்த நாகரீகத்துடன் இருந்து பரம்பொருளது சிறப்பை உள்ளபடி உணர்ந்து உலக இன்பங்களில் சிக்கிவருந்தாது தேறியிருந்த ஆரியரது வேதத்தை இக்காலத்தில் கற்றுக்குட்டிகளாக இருக்கும் மேனாட்டவர்கள் குற்றங்கூறுவது கொசு யானையை எதிர்ப்பதுபோலவே இருக்கின்றது. மிகச்சிறந்ததாகிய வேதத்தைக் குற்றங்கூறி, ஒருவருக்கும் தீங்கு நினைக்காத ஹிந்துக்களை அவமதிப்பதால் வெளிநாட்டாரது சிறுமை நன்றாக வெளியாகின்றது. இங்கு இவர்கள் அபிப்பிராயம் அறியாமையால் உண்டாகின்றது என்பதை நன்றாக எடுத்துக்காட்டி அவர்கள் வாயை மூடிக்கொள்ளும்படி செய்வோம்.

முன்னர் கூறியபடி கர்மகாண்டம் பின்வரும் வேதரஹஸ்யமாகிய ஞானகாண்டத்தை விடத் தாழ்ந்ததாகிலும் அகங்காரிகளான வெளிநாட்டார் கூறுவதுபோல அவ்வளவு கேவலமான பாகமல்ல. வெளிநாட்டார் கூறுவதுபோல அவ்வளவு தாழ்ந்த விஷயங்கள் கர்மகாண்டத்தில் காணப்பட்டபோதிலும், வேதம் இவ்வாறு மனிதனை அவைகள் மூலமாக மேலான ஞானகாண்டத்துள் புகும்படி செய்யவேண்டும் என்றகருத்துடன் அந்தத் தாழ்ந்த பாகங்களையும் விட்டுவிடாது எடுத்து ஆளுகின்றது என்பதை நாம் மறவாதிருந்தால் வெளி நாட்டார்கள் போல நமக்கு முதலில் உண்டாகும் அபிப்பிராயத்தை கண்மூடித்தனமாக வெளிவிடாது தகுந்தபடி உள்ளேயே மாற்றிக்கொண்டு அறிவுடையோராக விளங்கலாம். வெளி நாட்டாரோ இதை உணராது தமது கல்வி மதத்தில் உலக மதங்கள் எல்லாம் தமக்கு நன்கு விளங்கிவிட்டதாக எண்ணி இறுமாப்புடன் அவஸரமாகத் தமது முதல் அபிப்பிராயங்களை வெளியிட்டார்களே ஒழிய வேறில்லை. நிதானித்திருந்தால் அவர்கள் இவ்வாறு செய்தேயிருக்கமாட்டார்கள். இப்பொழுது யோசிப்பார்களாகில் அவர்கள் தமது அவஸராகாரியத்தை நோக்கி

வெட்கம் அடைவார்கள் என்பதற்கு ஸந்தேகம் இல்லை.

முதலில் கர்மகாண்ட பாகத்தில் ஸாதாரணமாக நுணிப்புல் மேயும் தன்மை உடையவர்களுக்குத் தாழ்ந்தவை என்று காணப்படும் விஷயங்களை எடுத்துக் காட்டுவோம். கர்மகாண்டத்தில் சிற்சில விஷயங்கள் ஸர்வ ஸாதாரணமாயும், விருத்த விஷயங்களாயும், அஸம்பாவிதங்களாயும், கூறியது கூறலாயும், அபூதகல்பனைகளாயும் காணப்படும். ஒரே கர்மவிஷயத்தில் அநேகவித விரோதமான விதிகளும், அநேகவித விரோத வர்ணனைகளும், காணப்படும். இதில் சிற்சில கதைகள் காணப்படுகின்றன. பார்ப்பவர்களுக்கு இவைகளை அடக்கியுள்ள வேதம் சிறந்தது என்று எவ்வாறு கூறுவது என்ற சங்கை உண்டாகும்படி இவைகள் செய்யும். ஆதலால் நாம் நமது வேதத்தின் சிறப்பை நிலைநிறுத்த வேண்டுமாகில் இத்தகைய தாழ்ந்த பாகங்கள் உண்மையில் இவ்வாறிருப்பனவல்ல; இவைகளுள் மிகச் சிறப்பான அர்த்தங்கள் மறைந்து கிடக்கின்றன என்று நன்ருக விளக்கவேண்டும்.

முற்கூறிய விஷயங்களுள் ஒன்றை உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம். சதபத பிராம்மணத்தில் பர்வகாலயஜ்ஞங்களைப் பண்ணத்தொடங்கும் யஜமானன் ஒருவன் முதலில் கார்ஹபத்ய, ஆஹவனீயாக்னிகளின் இடையில் நின்றுகொண்டு சுத்த ஜலத்தால் தனது கையைத் துடைத்துக்கொண்டு, அக்னியை நோக்கி, "ஏ, அக்னி! நான் யாகதீக்ஷிதனுகிவிட்டேன். யாகத்தை முடிக்க எனக்கு அவசியம் வேண்டிய பலத்தைக்கொடு. யாகம் ஸரிவர முடிந்து எனக்குப் பூர்ணபலனை அளிக்கும்படி அனுக்கிரஹி. இந்தத் தீக்ஷையால் யான் அஸத்யத்திலிருந்து ஸத்யத்துள் பிரவேசிக்கிறேன்." என்ற மந்திரத்தையும், இந்த யாகம் முடிந்ததும் யஜமானன் 'யாகத்தை முடித்துவிட்டேன். முன்னிருந்தபடியாகிவிட்டேன்.' என்ற பொருள் உள்ள ஓர் மந்திரத்தையும் கூறுகிறுன். ஆஷாடர் என்ற ரிஷி இந்த யாகத்தைப் பற்றிக் கூறுங்கால் இந்த யாகங்களில் முதலிலிருந்து முடிவு வரையில் சுத்த பட்டினியே தீக்ஷையின் முக்கிய பாகம் என்று கூறுகிருர். வேறு சிலர் ஆஹாரம் செய்தும் செய்ததற்கு ஸமானமாகாத சிற்சில ஆஹாரங்களை உட்கொள்ளுவது நியாயம் என்று கூறுகின்றனர். யாகத்திற்கு முந்திய இரவு யஜமானன் கட்டில் மெத்தைமுதலியவைகளில் படுக்கக்கூடாது. வெறும் தரையிலே யாகஅக்னிகள் இருக்கும் இடத்தில் படுத்துறங்கவேண்டும். அதிகாலையில் எழுந்து நித்ய கர்மானுஷ்டானங்களை ஒழுங்காக முடித்துவிட்டு ஆஹவனீயாக்னியின் வலது புறத்திலிருக்கும் பாத்திரத்தில் காணப்படும் தீர்த்தத்தின் மூலமாக யாகத்தை ஒழுங்காகத் தொடங்க வேண்டும். அக்னிக்கும் இந்தப் பாத்திரத்திற்கும் இடையில் ஒருவரும் போகவேகூடாது, போனல் மிகுந்தபாபம் ஸம்பவிக்கும். இந்த யாகத்திற்கு இரட்டை இரட்டையாக இருக்கும் பத்துகருவிகள் (பாத்திரங்கள்) அவசியம் வேண்டியது. இவைதான் யாகஆரம்பத்தில் அவசியம் செய்யவேண்டியவை.

இவைகளின் நோக்கத்தை பிராம்மணங்கள் நன்கு வெளியிடுகின்றன. தண்ணீர் சுத்தப்படுத்தும் வஸ்துவாதலால் அதைத்தொட்டுக்கையைத் துடைத்துக்கொள்ளவேண்டும். இதைச் செய்வது அவன் அந்தரங்க நோக்கமாகிய மனஸ் சுத்தியை அவனுக்கு ஞாபகப்படுத்துகின்றது. அக்னிக்கு விருததேவதை என்று பெயர். அதனுடைய திவ்ய தேஜஸ்ஸாலும், அசுத்தங்களை அற எரிக்கும் சக்தியாலும் அதற்கு இப்பெயர் வந்தது. உலகில் தேஜோவான்களான தேவதைகளை அக்னிதான் ஒருவாறு குறிப்பிக்கும் அடையாளம்.

ஆகையால் தேவதைகளை அக்னி மூலமாக ஆராதித்து யாகங்கள் நடத்தப்படுகின்றன. யாகம் தொடங்கி முடியும்வரையில் தேவதைகளை ஆராதிக்கும் யஜமானனுக்குத் தெய்வத்தன்மை வந்து விடுகின்றது. ஏனெனில், மனது எதை ஊன்றி யோசிக்கின்றதோ அதே உருவத்தை அது அடைகின்றது. அதாவது மனிதன் எதை நினைத்து நிலைபெறுகிறானோ அதன் நிலையை அடைகிறான். மனிதர்களைவிட தேவர்கள் நெடுங்காலம் அழியாதிருப்பதால் அவர்கள் உண்மையில் இருப்பவர்கள் என்றும், மனிதர்கள் உண்மையில் இருப்பவர்கள் அல்லர் என்றும் மதிக்கப்படுகிறார்கள். இதனால்தான் யஜமானன் யாகத்தொடக்கத்தில் 'இந்தத் தீக்ஷையால் நான் அஸத்யத்திலிருந்து ஸத்யத்துள் பிரவேசிக்கிறேன்'' என்று பொருள்படும் மந்திரத்தைக் கூறுகிறான். இம் மந்திரத்துள் அதிரஹஸ்யமாயும் சிறந்ததாயும் உள்ள உட்பொருளும் மறைந்துகிடக்கிறது. அதாவது, 'தேவதைகள் மூலமாக ஆராதிக்கப்படும் நித்யமான பரம்பொருளது சிறப்பால் யான் நிலையற்றதாயும் பொய்யாயும் உள்ள உலகம் விஷயப்பற்று முதலியவைகளிலிருந்து விடுபட்டு நித்யத்வத்தை அடைந்தேன்' என்பதே. யஜமானனது வீட்டிற்கு உபஸதா என்று பெயர். இதன் பொருள் சேர்ந்து வஸிக்கும் இடம் என்பதே. யாககாலத்தில் தேவதைகள் யஜமானனுடன் சேர்ந்துவஸிப்பதால் அவன் வீட்டிற்கு இப்பெயர் வந்தது. தேவதைகள் அதிதிகளாக வந்திருக்கையில் அவர்களுக்கு உணவளிக்காது யஜமானன் புஜிப்பது நியாயமல்ல. ஆகையால் யாகம் முடியும் வரையில் அவன் ஆஹாரம் உட்கொள்ளக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன்மேல் அதிகாரிபேதம், தேகவலிமை இவைகளுக்குத் தக்கபடி இன்னவஸ்துக்களை உண்டால் யஜமானனுக்கு உண்ட பாபம் வாராது என்று விஸ்தாரமாகக் கூறிவிட்டு, தேவர்கள் இருக்கையில் அவர்களுக்கு மரியாதை செய்வதற்காக யஜமானன் கட்டில் முதலிய ஸுக ஸாதனங்களை அங்கீகரிக்கக் கூடாது என்ற விஷயத்தை பிராம்மணங்கள் எடுத்துக் கொள்ளுகின்றன. யாக காலங்களில் தண்ணீரை அதிகமாக உபயோகப் படுத்துவதற்கு, பூமி திரவஸ்திதியிலிருந்து கடின ஸ்திதிக்கு வந்து நமக்கு இப்பொழுது பலன் கொடுக்கின்றது என்பதைக் குறிப்பித்து அதன் மூலமாக யஜமானனுக்கு வரக்கூடிய சிறந்த பலனைக் காட்டவேண்டும் என்பதே உட்கருத்து. யாகம் நடந்துகொண்டிருக்கையில், 'யஜமானன் இன்னான் என்று குறிப்பிடமுடியாது, இந்த யாகத்திலிருந்து வரக்கூடிய பலனை இவ்வளவென்று அளவிடமுடியாது' என்று பொருள்படும் மந்திரத்தைக் கூறுவது வழக்கம். இவை முறையே ஸகலமும் பிரம்மம், ஆகலால் யஜமானன், ஆராதிக்கப்படும் வஸ்து இவைகளோடு இரண்டறக் கலந்திருக்கும் பரம்பொருளது கருணை விசேஷத்தால் யாகமூலமாக யஜமானனுக்கு வரக்கூடிய பலன் ஏராளமானது, என்பவைகளைக்குறிக்கின்றன. அக்னியும் ஜலமும் அருகாமையிலிருந்து யஜமானனை சுத்தப்படுத்திச் சிறந்த பலன்கள் உண்டாகும்படி செய்வதால அவைகள் இடையில் ஒருவரும் போகவே கூடாது. யாகத்திற்கு அவசியமாகிய பத்துப் பாத்திரங்கள் விசுவரூபியாகிய பகவானை ஆராதிக்க ஏற்பட்டுள்ள சிறந்த மந்திரத்தினது பத்து எழுத்துகளையும் குறிப்பிக்கின்றன. இம்மாதிரிப் பிராமணங்களில் கூறியபடி உட்கருத்தை அறிந்து கொண்டால் முற்கூறிய வேடிக்கையான செயல்கள்யாவும் சிறந்தவைகளாக மாறிவிடும். இதனால் உண்மையில் யாகமே பரம்பொருள் என்பதும் அதை உள்ளபடி அறிந்து செய்பவர்கள் பரம்பொருளை ஆராதித்தவர்களாவார்கள் என்பதும் விளங்

கும். இம்மாதிரியே 'குழந்தைப் பருவத்தி லுள்ள ஜனங்களது மழலைச்சொற்களே, வேத ங்கள்' என்று பதட்டத்துடன் வீண் குற்றங் கூறும் அவஸரக்காரர்களுக்குப் புத்தி மட்டு, என்பதை அவர்கள் தமக்கு ஆதாரமாக எடு த்து ஆண்டிருக்கும் வேதபாகங்கள் மூலமாக வே நாம் நன்ருக ஸ்தாபிக்கலாம். இத்தகைய எல்லா விஷயங்களும் பரம ரஹஸ்யத்தை அறிவதற்கு ஏற்பட்டுள்ள படிகளே ஒழிய வேறல்ல.

'கர்மகாண்ட பாகங்களில் காணப்படும் கதைகள் சிறுபிள்ளைத்தனமானவைகளாக இருக்கின்றன,' என்ற அவஸா அபிப்பிராயத் தைஎடுத்துக்கொள்ளுவோம். வைதிககதைகள் பொதுவாக மூன்று விதமாகக் காணப்படுகின் றன. முதல் விதம், நிஜமாக நடந்த விஷயங் களைக் கூறுவன. இவைகளைச் சரித்ர கதைகளா கவே மதிக்கலாம். இரண்டாவதுவிதக் கதைக ளில் உண்மையான சரித்திரங்களுடன் வரம்பு கடந்த கற்பனைகள், உண்மையாக நடவாதன முதலிய விஷயங்கள் கலந்திருக்கும். மூன்ரு வது விதங்களில் முழுவதும் நடவாதனவாக வே காணப்படும். பின் இரண்டுவித கதைகளுக் கும் அர்த்தவாதங்கள் என்று பெயர். இவை சிறந்த உண்மைகள் கேட்போர் மனதில் லகு வாயும் நன்ருயும் பதியும்படி செய்யும் தன்மை வாய்ந்தன. புராணகதைகள் பெரும்பாலும் இத்தகையவே. இம்மாதிரிக் கதைகளின் சிறப் பை நமது ரிஷிகள் எவ்வளவோ மேன்மை யாகக் கூறி இருக்கின்றுர்கள். ஆதலால் இக் கதைகளை முழுவதும் உண்மை எனக்கருது வது மூடத்தனமாயினும், இக்கதைகள் நன்கு மதிக்கத் தக்கவைகள் அல்ல, இவைகளை அல க்ஷியம் செய்யவேண்டும் என்று எண்ணுவது முழுமூடத்தனமே ஒழிய வேறல்ல. இங்குக் குறிப்பிட்டிருப்பவைகளை நன்கு விளக்கச் சத பத பிராம்மணத்திலிருந்து ஓர் கதையை எடுத் துக் கொள்ளுவோம்.

முன்காலத்தில் தேவாஸுரர்களுள் பெரிய யுத்தம் உண்டாயிற்று. எங்கே அஸுரர்கள் ஜயித்து விடுவார்களோ என்ற பயம் தேவர்க ளுக்கு வந்துவிட்டது. அஸுரர்களுக்கு ஸகல லோகங்களும் நம்மதே என்ற இறுமாப்பு வந்துவிட்டது. உடனே அவர்கள் தமது ஸேனைகளுடன் பூமியைக் கவர்ந்துகொண்டு பாகம் போட்டுக்கொள்ளத் தொடங்கினர். தமது கை களைப்பதைக் கண்ட தேவர்கள் வாமன உருவத்துடன் வந்த விஷ்ணுவை முன் னிட்டுக்கொண்டு அஸுரர்களிடம் வந்து பூமி யில் தங்கள் பாகத்தைக் கொடுக்கும்படி கேட் டார்கள். அஸுரர்கள் ஒப்புக்கொள்ளாதது கண்டு தங்களோடு வந்திருக்கும் குட்டை யர், படுத்துக்கொள்ள அவசியம் வேண்டிய இடத்தையாவது கொடுக்கும்படி கேட்க அவர் கள் இசைந்தார்கள். இப்படி இசைந்த தும் விஷ்ணு தமது விசுவரூபத்தை எடு த்து பூமிமுழுவதும் மறையும்படி படுத்துக் கொண்டார். அப்பொழுது தேவதைகள் விஷ் ணுவை யாகத்தின் ரூபம் என்றே கருதி யாக த்தால் ஆராதிக்கத்தொடங்கினர். அவரைக் காயத்ரி விருத்தத்திலிருந்த மூன்று மந்திரங் களால் மூன்று பக்கங்களிலும் கட்டி, அவர் தலையிருந்த கிழக்குப்புறத்தில் ஆஹவனீயாக் னியை ஆதானம்செய்தனர். இக்காரியங்க ளால் அஸுரர்கள் தடுக்கப்பட்டுப் பாகத்தை இழக்கும்படி நேர்ந்தது. இவைகளால் களை ப்பு மிகுந்த தேவதைகள், சற்றுக்களைப்பாற, அப்பொழுது விஷ்ணுவுக்குத் தாம் செலுத்த வேண்டிய கடன்களை மறந்துவிட்டனர். முற் கூறியபடி கட்டுண்ட விஷ்ணு தம்மை விடு விக்கவேண்டும் என்று பிரியப்பட்டார். தேவ தைகள் தம்மைக் கவனியாமல் போனதும், மந்திரங்களைச் சிதற அடிப்பதற்கு மனம்வராத வராய் விஷ்ணு வாமன உருவுடன் பூமியுள் மறைந்து பச்சிலைகளின் வேர்பாகங்களில் செ ன்று அமர்ந்தார். தேவதைகளுக்கு மயக்கம்

தெளிய தமது அஜாக்கிரதையை எண்ணித் துக்கித்துவிட்டு விஷ்ணுவை எங்கும் தேடிப் பார்த்தனர். தங்கள் சிரமங்கள் எல்லாம் வீணானது கண்டு, ஒருவேளை அவர் தாம் இருக்கும் பூமியுள்ளேயே மறைந்திருப்பாரோ என்ற சங்கை பிறந்தது. உடனே அங்கே இயற்றிய சிறு வேதியில் ஓர் யாகம் செய்து பூமியை மூன்று அங்குலம் தோண்டிப் பார்த்தனர். அங்கே பச்சிலைகள் வேரில் விஷ்ணு வாமன உருவத்துடன் இருப்பதைக் கண்டார்கள். ஆதலால் ஆதியில் தேவதைகள் பூமி முழுவதும் வேதியாகக்கொண்டு யாகம்செய்த போதிலும், மனிதன் அவன் சக்திக்கு ஏற்ப தேவதைகள் பின்னர் செய்ததுபோல சிறிதான வேதிகளில் மூன்றங்குல ஆழத்தில் யாகம் செய்யலாம்.

இது ஓர் வைதிக கதை. இது ஸாதாரணமான ஜனங்களுக்குச் சிறுபிள்ளைத்தனமான கதையாகத் தோன்றலாம். ஆனால் வேத நோக்கத்தை உள்ளபடி உணர்ந்தவர்களுக்கு இதன் உட்பொருள் உடனே வெளியாகும். அது பின்வருவது.

தேவாஸுர யுத்தம் பிரபஞ்சத்தில் ஸதா இருக்கும் நன்மை தீமைக்கு உள்ள விரோதத்தைக் காட்டுகின்றது. இது இருந்தால்தான் பிரபஞ்சத்தில் சுறுசுறுப்பும் தொழிலும் காணப்படும். பூமியைத் தேவாஸுராள் கவர எண்ணுவது மனிதனது மனது இவ்வாறு நன்மை தீமைகளால் தாக்கப்படுகின்றது என்பதைக் குறிப்பிக்கும். தேவதைகள் மனிதனது நன்மைக்கே இவ்வாறு செய்ய எண்ணுகின்றனர். பகவான் முன்னர் வருவது அவர் நன்மை அல்லது தர்மத்திற்கு அதிபதி என்பதைக் காட்டுகிறது. அஸுரர்கள் விஷ்ணுவைக் குட்டை ஆளாகமதிப்பது, பகவான், 'பொய் வளரும் நெஞ்சினர் காணாத காட்சியே' என்பதையும், காயத்ரீ மந்திரங்களால் பகவான் பிடிபடுவது, உண்மையையே விடாது கூறும் வேதத்தில் பகவான் ஈடு படுவார் என்பதையும், அவர் தலைப்புறம் வளர்க்கப்பட்ட ஆஹவானீயாக்னி பகவானது திவ்ய தேஜஸ் பரமசுத்தம் ஆகிய இவைகளையும், குறிப்பிக்கின்றன. பகவான் பெரிய உருவம் தரிப்பது அவரது ஸர்வாந்தர்யாமித்வத்தையும், சிறிய உருவம் தரிப்பது எங்கும் ஒரே மாதிரியாக இருக்கும் திறத்தையும், காட்டுகின்றன. அதிகப் பழக்கத்தால் தேவதைகளிடம் உண்டான அசிரத்தையை நீக்க உண்மையாகிய வேதங்கள் அவருக்கு ஏற்படுத்தியிருக்கும் வரம்புகடக்காது மறைந்தார். இதனால் தேவதைகளுக்கு அசிரத்தையால் விளையும் தீங்கைக்காட்டினர். தேவதைகளுக்குப் பகவத் ஞாபகம் வந்து பூமியுள் இருப்பாரோ தங்கள் நாதன் என்ற எண்ணம் பிறந்ததும், அங்கேயே அவர் காணப்பட்டார். இதனால் தம்மை எங்குப் பக்தர்கள் துதித்தபோதிலும் அங்கேயே அவர்களுக்குக் காட்சி கொடுப்பதே தம் ஸ்வபாவம் என்பதைக் குறிப்பித்தார். வேதிகள் விஷயம் பார்த்தால் அவரவர்கள் தமது சக்திக்கு ஏற்றபடி பகவத் ஆராதனம் செய்யலாம் என்று மனிதர்களை ஆராதனைகள் செய்யும்படி தூண்டுவனவாகக் காணப்படும். இதனால் பகவான் ஆராதனையின் ஆடம்பரத்தைக் கவனியாது உள்ளன்பைக் கவனிக்கும் நிஷ்பக்ஷபாதி என்பது வெளியாகும்.

வைதிக கதைகளில் அடங்கியிருக்கும் உட்பொருளைப் பாருங்கள்! ஒருவேளை சிலர் நாமாக நமது மனோதர்மத்திற்கேற்ப வைதிக கதைகளை அர்த்தம்பண்ணுகிறோம் என்று குற்றங் கூறலாம். இவ்வாறு பொருள் படுத்துவதற்கு வேதமே ஆதாரம். அதுவே அநேக இடங்களில் தன் வாக்கியங்களில் ஆழ்ந்த பொருள்கள் அடங்கியிருக்கின்றன என்று கூறுகின்றது. இதுபோல வைதிக கதைகள் ஒவ்வொன்றிலும் சிறந்த உண்மைகள் அடங்கியிருக்கின்றன என்பதை நன்கு விளக்கலாம். ஆகவே கர்மகாண்ட விஷயமாக வெளிநாட்டார் கூறும் அவஸர அபிப்பிராயங்கள் யாவும் முழுத் தவறேயல்லது வேறல்லஎன்பது திண்ணம்.

# முந்திரி மரம்

## CASHEW TREE

முன்னுரை.—இது நமது இந்தியாவில் நெடு நாளாகவுள்ளதோர் பயிர். இதன் பெயர் பழைய நூல்களில் உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. இதை ஒரு பழவகைப் பயிராகக் கொள்ளலாம். இது சாதாரணமாய்ச் சமுத்திரக்கரையோரத்திலும், மணல்பாங்கான விடத்திலும் அதிகமாய் இருக்கிறது.

பூமி.—மணற்சாரி பொருத்தமானது. சற்றுக்களிவாயும் உரித்தானது. தண்ணீர் தங்கும் படியான பள்ளத்தாக்குப் பிரயோஜனமில்லை.

பூமிதிருத்தல்.—இந்த ஒரு ஏக்கர் நிலத்தை நன்றாய் இரண்டு மூன்று சால் உழுது அதின் கண்ணுள்ள புல் பூண்டு முதலியவைகளை நீக்கல் வேண்டும். பிறகு இருபது அடிக்கு ஒரு குழி வீதம் மூன்று அடி ஆழம் குழி வெட்டல்வேண்டும். ஒருவாரம் ஆறும் படி விட்டுவிடவேண்டும். அக்குழிகளில் மாட்டெருவு ஆட்டெருவு தழைகள் மடித்ததினால் உண்டாகும் எரு, சாம்பல் முதலியவைகளில் கிடைத்ததைக்கொண்டு இரண்டடி உயரம் குழிகளில் நிரப்பவேண்டும். பிறகு அரையடியுயரம் சுற்றுப் பக்கங்களிலுள்ள மணலைத் தள்ளி நிரப்பிப் பின்னர் நன்றாய்க் கொத்தி ஒருவாரம் சும்மாகப் போட்டுவிடல் வேண்டும்.

விதை போடல்.—ஒரு குழிக்கு இரண்டு வீதம் குழிகளில் விதையைப் போடல்வேண்டும். சிலர் விதை போடுவதற்கு இரண்டு மூன்று நாள் முன்னரே ஜலத்தில்ஊறப்போட்டு பிறகு ஊன்றுகிறார்கள். சிலர் ஊறப்போடாமலும் ஊன்றுகிறார்கள். இது ஏழுநாள் முதல் 20-நாள்வரையில் முளைக்கும். விதைபோட்ட நாளிலிருந்து இரண்டு மாசம் வரைக்கும் தினம் தண்ணீர் ஊற்றிக்கொண்டு வரல்வேண்டும். பிறகு, இரண்டு நாளைக்கு ஒரு தண்ணீர் விட்டுக் கொண்டும், 6-மாதம் ஆனவுடன் நான்கு நாளைக்கு ஒரு தண்ணீரும், மரம் ஒரு ஆள் உயரம் வளர்ந்த பிற்பாடு ஒருவாரத்திற்கு ஒரு தண்ணீரும் விடல்வேண்டும். இவ்வரையறையின்றிக் கோடைக்காலத்தில் அதிகமாய் ஊற்றிக்கொண்டும் மழை பெய்த காலத்தில் நிறுத்திக்கொண்டும் வரல்வேண்டும். சிலர் நிலத்தையுழுது படைச்சாலிலேயே கொட்டைகளைப் போடுகிறார்கள். இது அவ்வளவு சிலாக்கியமானதல்ல.

மரங்காய்ப்புக்கு வருதல்.—மூன்று வருஷத்தில் பூக்கும். ஒன்றிரண்டு காய்களையும் காணலாம். ஐந்து வருஷத்தில் நன்றாய்க் காய்ப்புக்கு வந்துவிடும்.

மரத்தின்வளரும் சுபாபம்.—இது 10-அல்லது 15-அடி உயரம் வளரும். இது நிலத்தில் கொடி போல் படரும் ஸ்பாவமுள்ளது. இது மரத்தைச்சுற்றி நாலா பக்கங்களிலும் கிளைகள் ஓடி நன்றாய்ப் பரந்திருக்கும்.

பூ.—வருஷத்தில் இரண்டுதரம் பூக்கும். இப்பூ சில ஏழை ஜனங்களால் தின்னப்படுகிறது.

காய்.—கறி வகைகளாகச் செய்யப்பட்டுச் சாப்பாட்டுக்கு உபயோகப்படுகிறது.

பழம்.—இது நம் நாட்டு ஜனங்களால் அதிகமாகத் தின்னப்பட்டு வருகிறது. ஒரு பைசாவுக்கு நான்கு பழம் விற்கிறது. இதைக் கூலிக்கார ஜனங்களல்லாமல் ஏனையோர் தின்றால் தொண்டையைக் கட்டிக் கொள்ளுகிறது. இதன் ரசம் உஷ்ணம். இப்பழத்தினின்றும் சாராயம் காய்ச்சுகிறார்கள்.

கொட்டை.—இந்த ஒருவகை பழத்திற்குத்தான் கொட்டை வெளியிலிருக்கிறது. இக்கொட்டை பிஞ்சாக விருக்கும். அதன் பருப்பு நமக்கு ஆகாராதிகளுடன் சம்பந்தப்பட்டும் தனியாயும் உபயோகப்படுகிறது. கொட்டையி

விருந்து எடுக்கும் பருப்பும் நமக்கு ஆகாராதிகளுடன் சம்பந்தப்படுகிறது. இதற்கு ரத்த விருத்தி குணமுண்டு. ஆனால் சற்று உஷ்ணமானது. கொட்டையிலிருந்து பச்சையாகவும் பருப்பெடுக்கிறார்கள். வறுத்தும் சுட்டும் எடுக்கிறார்கள். இது பண்ணுருட்டி திருவெண்ணெய்நல்லூர் முதலிய விடங்களில் அதிகம். மற்ற இடங்களில் சுமாராக இருக்கின்றது. இதை ரெயில்வே ஸ்டேஷன்களில் சேர் இரண்டணாவாக விற்கிறார்கள். இந்தப் பருப்பிலிருந்து ஒருவித எண்ணெய் எடுக்கிறார்கள். முந்திரிக்கொட்டை யோட்டினின்றும் எண்ணெய் எடுக்கிறார்கள். இது பூச்சி வைக்கும் புண்ணுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

பிசின்.—இம்மரத்தினின்றும் ஒருவிதமான பிசின் எடுக்கிறார்கள். அது வார்னீஸ் கொடுக்க உபயோகப்படுகிறது.

பட்டை.—இது துவர்ப்பானது. இதன் கஷாயம் தோல்பதனிட உபயோகப்படுகிறது.

மரம்.—விறகாக உபயோகப்படுகிறது. ஆயினும் புகையுந் தன்மையுள்ளது.

இலை.—எருவாகப் பிரயோஜனப்படுகிறது. இதைத் தைத்துச் சாப்பாட்டுக் கலன்களாகவும் உபயோகப்படுத்துகிறார்கள். இதன் இலை உதிரும் நிலம் கொழுப்படைகிறது.

மாசூல்.—நன்றாய்ப் படர்ந்து இருக்கும் மரம் சராசரி 10000-கொட்டைகள் வரையில் கொடுக்கிறது. ஆயிரம்எட்டணாவாகவிற்கிறது. மாதத்துக்கு ரூபா 5-கிடைக்கும். இது நல்ல பலன் கொடுக்கும் மரமே.

கற்பனை.—நமது சென்னைபிராஜதானியில் ஏராளமாய்ப் புஞ்சையிருக்கிறது. இது பயிரிடும்படியான நிலம் அதிகம். நம்நாட்டு ஜனங்கள் காலத்திற்கு ஏற்றவாறு பயிர் செய்து தக்கபலனையடைந்து நம் வறுமையை நீக்க முயலவேண்டும்.

பு. து. இரத்தினம் பிள்ளை.

# ஸ்ரீ காலடி க்ஷேத்திரமும் ஸ்ரீ ஆதிசங்கராசார்ய மூர்த்தி பிரதிஷ்டையும்

## ADI SANKARA'S TEMPLE AT KALADI

இக்காலடி க்ஷேத்திரம் ஸ்ரீமத்-ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகள் திருவவதாரமெடுத்த புண்ணிய ஸ்தல மென்பது யாவருக்குந் தெரிந்த விஷயமே.

"க்ருதே ஸதாசிவோ விஷ்ணு:
ப்ரஹ்மா சேந்த்ரோ குரு: ஸ்ம்ருத:!
ராமோ வஸிஷ்டோ தூர்வாஸா:
வால்மீகிச்ச த்விதீயகே !!
சக்தி: பராசரோ வ்யாஸ:
ஸ்ரீக்ருஷ்ணோ த்வாபரே யுகே!
கலௌ சுகோ கௌடபாதோ
கோவிந்தச் சங்கரார்யக:!!"

என்று 'பிருஹத் சங்கரவிஜயத்தில்' கூறியிருப்பதுபோல், ஸதாசிவன், விஷ்ணு, பிரஹ்மா, இந்திரன் கிருதயுகத்திலும், ஸ்ரீராமபிரான், வஸிஷ்டர், துர்வாஸர், வால்மீகி திரேதாயுகத்திலும், சக்தி, பராசரர், வியாஸர், ஸ்ரீகிருஷ்ண பகவான் துவாபரயுகத்திலும், சுகர், கௌடபாதர், கோவிந்த பகவத் பாதர், சங்கராசார்யர் கலியுகத்திலும் வேதாந்தோபதேசத்தினால் அத்துவைத ஞானத்தைத் தெரிவித்து ஸநாதந தர்மத்தை ஸ்தாபித்த பரமாசார்யர்கள் ஆவர். அவர்களுக்குள் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் பெயரை அறியாதவர் இப்பூவுலகில் ஒருவருமிலர். இவருடைய புத்தி கோசரத்தைக்கண்டு மயங்கி ஆச்சரியப்படாதவர் எங்குமில்லை. தத்துவ தர்சநத்தில் இவருக்குச் சமாநமானவர் ஒருவருமில்லையென்பது நமது தேசத்துப் பண்டித சிகாமணிகளின் அபிப்பிராய மாத்திரமேயன்றி, இவருடைய பாஷ்யாதி கிரந்தங்களைப் பரிசீலநஞ் செய்த யூரோப்பு, அமெரிக்கா முதலிய மேல்

# விவேக போதினி

ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை 1908-ம் ௵ முதல்

பிரசுரமாகிவருகிறது. யாவராலும் சிலாகிக்கப்பெற்றது

இப்பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோர்களைக்கொண்டே, இதன் பெருமையை நன்கு அறியலாம். மிகவும் சுலபமான நடையில் எழுதப்படுகிறது. சிறுவர்கள் சிறுமிகள்கூட உத்ஸாகத்துடன் வாசிக்கக்கூடியது. ஒவ்வொரு மாதமும் ஒழுங்காகப் பிரசுரமாகிறது. சித்திரப்படங்கள் ஒவ்வோர் சஞ்சிகையிலும் உபயோகிக்கப்படுகின்றன. எத்திறத்தாரும் வாங்கி வாசித்து நற்பயனடையும் பொருட்டே சந்தாத்தொகையும் மிகவும் ஸுலபமாய் வைக்கப்பட்டிருக்கிறது. [இம்மாதிரி யாவருக்கும் உபயோகத்தையும் உத்ஸாஹத்தையும் கொடுக்கக்கூடிய பத்திரிகை இன்னமும் எவராலும் பதிப்பிக்கப்படவில்லையென்று தைரியமாய்ச் சொல்லுவோம்.

## இப்பத்திரிகையில் பிரசுரமாகும் விஷயங்கள்

1. நீதிகளைக் கற்பிக்கக்கூடிய பொது விஷயங்கள்.
2. பொது நன்மைக்காகப் பாடுபட்ட மஹான்களின் ஜீவிய சரிதைகள்.
3. இயற்கை அற்புதங்கள்.
4. உலக ஒழுக்கங்கள்.
5. கல்வியபிவிருத்திக்குரிய பாஷா விஷயங்கள்.
6. வியவஸாயம், கைத்தொழில், வியாபார விஷயங்கள்.
7. தக்க நிபுணர்களைக்கொண்டு எழுதப்பட்டு வரும் உயர்தரமான நாவல்கள், நாடகங்கள்.
8. சிறுவர்க்காகவென்று எழுதப்படும் நீதியைப் புகட்டும் சிறந்த கதைகள்.
9. ஸ்திரீகளுக்கேற்ற நற்போதங்கள்.
10. சாஸ்திரீகமான விசேஷ வர்த்தமானங்கள்.

## தபாற்கூலி உள்பட சந்தா விபரம்

| இந்தியா, பர்மா, சிலோன், | | | | | பினங்கு, சிங்கப்பூர், நேடால், ஆ இடங்களுக்கு | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒரு வருஷத்துக்கு | ரூ | 3 | 0 | 0 | ஒரு வருஷத்துக்கு | ரூ | 4 | 8 | 0 |
| ஆறு மாதத்திற்கு | ,, | 1 | 12 | 0 | ஆறு மாதத்திற்கு | ,, | 2 | 4 | 0 |
| தனிப்பிரதி | ,, | 0 | 5 | 0 | தனிப்பிரதி | ,, | 0 | 6 | 0 |

☞ சந்தாத்தொகை முன்பணமாகத்தான் அனுப்பவேண்டும். அல்லது, முதல் ஸஞ்சிகையை ஒரு வருஷத்துக்கு, அல்லது ஆறு மாத சந்தாவுக்கு வி. பி. மூலமாய் அனுப்பிப் பெற்றுக்கொள்ளப்படும்.

இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு மட்டுமே எங்களிட சொந்தப்புத்தகங்களும், இன்னும் அநேக தமிழ்ப் புத்தகங்களும் குறைந்தவிலைக்கு அனுப்பப்படும். ஆகையால், இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு எப்பொழுதும் நஷ்டமில்லை. பத்திரிகையின் அபிவிருத்தி விஷயமாய் எழுதப்படும் நிருபங்களை எங்களால் இயன்றமட்டில் கவனித்து, முடிந்தவரையில் சீர்திருத்தமுயலுவோம். மற்றும் வேண்டிய விபரங்கள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர், "விவேக போதினி" ஆபீஸ்

மைலாப்பூர், மதராஸ்.

# நமது பத்திரிகைக்கு விஷயதானம் செய்யும்

## கனவான்களில் சிலர் :—

ம-ா-ா-ஸ்ரீ, மஹா மஹோபாத்யாயர் பண்டித-ஸ்ரீ வே. சாமிநாதய்யரவர்கள்.

,, மஹா மஹோபாத்யாயர் பண்டித-ஸ்ரீ சந்திரசேகர சாஸ்திரிகளவர்கள்.

,, கனம் ஆர். ரகுனாதராவ் அவர்கள், திவான் பஹதூர், ஸி.எஸ். ஐ.

,, பண்டித-ச. ம. நடேச சாஸ்திரியாரவர்கள்.

,, டி. செல்வகேசவராய முதலியார் அவர்கள், எம்.ஏ.

,, த. கனகஸுந்தரம் பிள்ளை அவர்கள், பி.ஏ.

,, டி. ஏ. கோபிநாத ராவ் அவர்கள், எம்.ஏ.

,, வ. சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள், எம்.ஏ.

,, பி. வி. ஸ்வாமி ராவ் அவர்கள், எம்.ஏ.

,, எஸ். குப்புஸாமி சாஸ்திரிகள் அவர்கள், எம்.ஏ.,

,, டி. எஸ். சுப்பிரமணிய அய்யரவர்கள், எ.ம்.ஏ., எல்.டி.

,, ஏ. பஞ்சாபகேசய்யர் அவர்கள், எம்.ஏ., எல்.டி.

,, வி. அப்பாஸாமி அய்யர் அவர்கள், எம்.ஏ.

,, மஹேச குமார சர்மா அவர்கள்.

,, ஏ. எஸ். கஸ்தூரிரங்கய்யர் அவர்கள், பி.ஏ., எல்.டி.

,, வ. சேஷகிரி சாஸ்திரியார் அவர்கள்.

,, வி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், பி.ஏ.

,, ஜே. ஆர். ரங்கராஜு அவர்கள்.

,, ஏ. மாதவய்யா அவர்கள், பி.ஏ.

,, எஸ். சிதம்பர அய்யர் அவர்கள்.

,, கே. நாராயண அய்யர் அவர்கள், பி.ஏ., எம்.பி., ஸி.எம்.

,, பண்டித-ஸ்ரீ கோபாலகிருஷ்ண அய்யர் அவர்கள்.

,, ஜ. வே. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், பி. ஏ.

,, ஸி. ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள், பி. ஏ.

,, வி. ஜி. சுப்பய்யர் அவர்கள், பி. ஏ., எல்.டி.

,, ஜீ. சுந்தரேச அய்யரவர்கள், பி.ஏ., எல்.டி.

,, ஜீ. தாதாசாரியாரவர்கள், பி. ஏ.

,, ப. சம்பந்த முதலியாரவர்கள், பி.ஏ., பி.எல்.

,, ஆ. நரஸிம்மய்யங்கார் அவர்கள், பி.ஏ., எம்.எல்.

,, ப. கிருஷ்ணஸாமி சாஸ்திரி அவர்கள், பி.ஏ., பி. எல்.

,, டி. எஸ். நாராயண சாஸ்திரியாரவர்கள், பி.ஏ., பி.எல்

,, எஸ். ஈ. சங்கர அய்யர் அவர்கள, பி.ஏ., பி.எல்.

,, என். ஆர். கே. தாதாசாரியார் அவர்கள், பி.ஏ., பி.எல்.

,, ஸி. சுந்தரம் அய்யர் அவர்கள், பி.ஏ.

,, ஸி. எஸ். சுந்தரம் அய்யர் அவர்கள், பி.ஏ., எல்.டி.

,, த. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி.ஏ.

,, ஸி. பி. வெங்கிடராமய்யரவர்கள், பி.ஏ.

குறிப்பு:—இன்னும் அனேகம் நிபுணர்களும், ஸ்திரீகளும் நமது பத்திரிகைக்கு வியாஸங்கள் எழுதுகிறார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டபடியாலும், இங்கு இடம் இல்லாமை பற்றியும் அவர்கள் பெயர்கள் இவ்விடம் அச்சிடப்படவில்லை.

# 'சூரியோதயம்'

இஃது பூஸ்திதியுடைய ஓர் பிரஞ்சு ராஜ தந்திரியால் நடத்தப்பெறும் சித்திர விளக்க முள்ள வாராந்தப்பத்திரிகை.

இதில் பாரத ஜாதீய தர்மம், ராஜரீகம், சரித்திரம், கைத்தொழில், விவஸாயம், விகடம் முதலியவை நிறைந்து வெளிவரும்.

விஷயதானஞ் செய்வோர்:—

ஸ்ரீ நீலகண்டம்

ஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதி

ஸ்ரீமதி கமலநாயகி முதலியவர்கள்.

வருட சந்தா ரூ 3 0 0

ஆறு மாதத்திற்கு ரூ 1 12 0

ஏஜெண்டுகள் தேவை.

மானேஜர்,

'சூரியோதயம்' பத்திரிகாசாலை,

புதுச்சேரி.

---

## குளிர்காலத்தில்

சரீரத்தைப் பாதுகாக்க பிரியப்படுகிறீர்களா? முந்துங்கள்! அப்படியானால், முந்துங்கள்!!

உடனே எழுதுங்கள்!!!

6-முழ நீளம் 3-முழ அகலமுள்ள கலப்பில்லாத கம்பளி ரோமத்தால் நெசவு செய்ததும், நேர்த்தியும், அழகுமுள்ள போர்வைகள் பலவித நிறங்களிலும் உண்டு. விலை 1-க்கு ரூ. 5.

## காஷ்மீர் "கழுத்துப்பட்டி"

இது கலப்பற்ற கம்பளி ரோமத்தால் நெசவானது. அழகான வேலைப்பாடுள்ளது. குளிர்காலத்திற்கு மிகவும் பிரயோஜனமானது. 6-இஞ்சி அகலம் 4-அல்லது 5-முழ நீளம் விலை ரூ 2 8 0 முதல் ரூ 10 வரையில்.

"மடிதாவளி" வைதீகர்கள் மடியாக அணிந்து கொள்ளும்படியான கலப்பற்றவெண்மை நிறமுள்ள கம்பளிரோமத்தால் நெசவுசெய்தது. 24, 29, 37, 40; இஞ்சு அகலமுள்ளதும் 5, 6, 7, 8, 9, 10. 15-முழம் நீளமுள்ளதும் விலை 1-க்கு கிரமமாக, 0-12-0. 1-0-0, 1-4-0, 1-12-0, 3-0-0, 3-12-0, 4-8-0 வரை,

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,

பட்டு பீதாம்பர வர்த்தகம், ஸ்ரீகாசி.

BENARES CITY.

---

## அருமையான தமிழ்ப் புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| போஜனப் பந்தலில் போர் விளைந்தகதை அல்லது ஒழுங்கற்ற சமஸ்தானம் | 0 | 10 | 0 |
| தாயுமான சுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மூலமும், நூதனமாக எழுதிய மெய் கண்ட விருத்தியுரையும (புதியபதிப்பு) | 3 | 8 | 0 |
| கல்யாணப் பாட்டுகள் (தமிழ்) ... | 0 | 4 | 0 |
| அழகு சுந்தரி ... | 0 | 8 | 0 |
| படுக்கையறையில் பாசாங்கு செய்த பங்கஜவல்லிக் கதை ... | 0 | 8 | 0 |
| மோகன சுந்தரி ... | 0 | 6 | 0 |
| தனேசுவரி 1-ம் பாகம் ... | 0 | 6 | 0 |
| நீதிநூற்றிரட்டு விருத்தியுரை 1-ம்பாகம் | 1 | 2 | 0 |
| டில்லிபாக்ஷா கதைகள் ... | 0 | 5 | 0 |
| பூலோகரம்பை நாடகம் ... | 1 | 0 | 0 |
| விசித்ர வினாவிடை ... | 0 | 4 | 0 |
| சுந்தராங்கி ... | 0 | 6 | 0 |
| மைனாவதிக்கதை ... | 0 | 12 | 0 |
| மனோரஞ்சனி ... | 0 | 12 | 0 |
| ஜெயங்கொண்ட சவுந்தரவல்லிக் கதை | 1 | 0 | 0 |
| இல்லற சார சங்கிரகம் ... | 0 | 8 | 0 |
| மஹாபாரதச் சுருக்கம் வசனம் (தின் காகிதம்) ... | 2 | 0 | 0 |
| ஸ்ரீராம கோடி ... | 2 | 0 | 0 |
| சகலகலாபூஷணம் ... | 2 | 0 | 0 |
| ஆசாரத்திரட்டு ... | 0 | 4 | 0 |
| பரிமளா (நாவல்) ... | 0 | 10 | 0 |
| தர்க்கபூஜை அல்லது கமலம் ... | 0 | 8 | 0 |
| சாவித்திரி சரிதை ... | 0 | 1 | 0 |
| முருகக்கடவுள் துதிமஞ்சரி ... | 0 | 3 | 0 |
| தேசிகப் பிரபந்த மூலம் ... | 0 | 8 | 0 |
| பூர்வாசாரியர்கள் அருளிச்செய்த கோயிலொழுகு ... | 0 | 4 | 0 |
| ஸ்ரீ மணவாள மாமுனிகள் உபதேச ரத்நமாலை வியாக்கியானம் ... | 0 | 14 | 0 |
| திருப்பாவை வியாக்கியானம் படங்களுடன் (கித்தான்) ... | 0 | 12 | 0 |
| ஷை மார்பில் பயிண்டு ... | 0 | 8 | 0 |
| திருக்கழுக்குன்றம் பக்ஷிதரிசன தேவ ரகசிய படம் ... | 0 | 1 | 0 |
| திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் படம் ... | 0 | 0 | 6 |
| நாமாவளிகதம்பம் 1ம் பாகம் படத்துடன் | 0 | 4 | 0 |
| ஷை கித்தான் பயிண்டு ... | 0 | 5 | 0 |
| இங்கிதமாலை உரை .. | 0 | 8 | 0 |
| சங்கரவிஜயம் வசனம் 2-படமும் ... | 1 | 0 | 0 |

[ஷை புஸ்தகங்களுக்குத் தபாற்கூலி பிரத்தியேகம்.]

அ. மஹாதேவ செட்டி,

நெ. 288, இலிங்கசெட்டி வீதி,

முத்தியாலுப்பேட்டை, சென்னை.

*Luxurious Writing*

# Fountain Pens.

*Fountain Pen Clips assorted Sizes from As. 2 to As. 12*

## *British and American Manufacture.*

The 'WATERMAN'S IDEAL,' with Cone cap holder, fitted with No. 2 Gold Nib and spoon-feed – Very reliable writing instrument ... ... ... ... ... ... ... ... **Rs. 7-14**

The "IMPROVED FORTUNE." Made specially to our order by one of the best Makers of Fountain Pens, is fitted with a high class 14-Carat Gold Nib, and fitted with Silver Regulator. A very Reliable Writing Instrument, with box, filler, directions, &c, complete. Appreciated by one and all ... ... **Rs. 3-8**

Do. do. No. 3 cone Cap holder, with large Nib ... ,, **4-8**

"JEWEL" Fountain pen, has a chased barrel is fitted with a large 14 Carat Gold Nib ... **Rs. 3-12**

The "CALTONIAN."—Same as above but with no spiral.—Has a chased barrel. Is fitted with 14-Carat Gold Pen and double feed,—with box, directions, &c., complete ... ... ... ... ... **Rs. 2-12**

"Supplies" Fountain Pen same as above with plain reservoir and fitted with 14-Carat Gold Nib **Rs. 2-8**

"FISCAL."—Fountain Pen—has a plain barrel and fitted with a 14-Carat Gold Nib and double feed—a Reliable Writing Instrument and is very popular ... ... ... ... ... ... **Rs. 2-0**

"RED GIANT STYLO."—Same as illustration—Fitted with a Spring Needle—works beautifully well—Tan color, ... ... ... ... ... ... ... ... ... ... **Rs. 2-12**

"WEE-MITE."—A Vest Pocket Fountain Pen, suitable for presentation, gives perfect satisfaction, Tan color ... ... ... ... ... ... ... ... ... ... **Rs. 2-4**

The "COUNTY" PEN—Fitted with screw section and duplex feed but has a Metal Nib ... **As. 12**

Spare Nibs for this pen, per dozen ... ... ... ... ... ... **As. 6**

We have also in stock, Swan Pens, Moore's Non-Leakable Fountain Pens, Efficient, Warren. All these are fitted with high class Gold Nibs—we have also very attractive and durable Stylographic Pens, Spare gold Nibs and parts.

We have 'Swan' Inks in Blue-Black, Blue, Green, Violet, Red—Each Bottle of ink has a thick Glass filler.

Leather pockets to hold single and double fountain pens As. 6 and 9 only.


**Fountain Pen Inks—As. 8**

## FIREFLY PENS

Have

## TEN GOOD POINTS

- DURABILITY
- FLEXIBILITY
- Write in any position
- Glide over any paper
- Give character to writing
- Prevent writers' cramp
- Are Incorrodible
- Are better boxed
- Better advertised
- And better liked than any other pens in the world




## FIREFLY PEN

ARE

OBLIQUE, POINTED AND ARE SPECIALLY ADAPTED FOR

## RAPID WRITING

*Per Box containing 12 doz., Rs. 2-8*

*Per dozen ... ... As. 4*

*POSTAGE EXTRA*

# The General Supplies Co.

*Stationers, Etc., MYLAPORE, MADRAS.*

நாட்டுப் புலவர்களின் துணிபுமேயாம். "அவர்களின் மனத்தின் பெருமையும், ஹ்ருதயத்தின் காம்பீர்யமும், எண்ணத்தின் உறுதியும், விஷயங்களை எடுத்துரைப்பதில் அவர்களின் பக்ஷபாதமின்மையும், அவர்களின் தெளிவான நடையும், இவைகள் ஒவ்வொன்றுமே நமக்கு அவர்களிடத்துள்ள கௌரவத்தை அதிகரிக்கச் செய்கின்றது,' என்று விசிஷ்டாத்வைதியான பாஷ்யாசாரியர் என்னும் ஓர் பண்டிதர் (Age of Sankaracharya) "சங்கராசாரியர்காலம்" என்னுமாங்கில கிரந்தத்தில் கூறியுள்ளார். விஷயங்களை யுள்ளவாறுணர்ந்து தத்துவாராய்ச்சி செய்வதிலும், பூர்வபக்ஷோபந்யாஸ பூர்வகமாய் ந்யாயப் பிரமாணங்களைக்கொண்டு விஸ்தாரஞ்செய்வதிலும், உள்ளத்திற் கருதியதை யாவருங் கேட்டமாத்திரத்தில் ஐயந்திரிபின்றி எளிதிலறிந்து கொள்ளும்படி தக்கமொழிகளைக்கொண்டு எடுத்துரைப்பதிலும் இவர்கள் இயற்றிய கிரந்தங்களுக்கு நிகரான கிரந்தத்தை ஸம்ஸ்கிருத பாஷையிலாயினும் மற்ற பாஷைகளிலாயினும் யாம் இதுவரை கண்டதில்லை. இம்மஹான்களுடைய அவதார விசேஷமும், இவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட அத்துவைததர்சநத்தின் மஹிமையும், இவர்கள் தாம் பூமியில் ஜீவித்திருந்த முப்பத்திரண்டு வயதிற்குள்ளாக இயற்றிய ஸர்வோத்தமமான கிரந்தங்களும், புரிந்த அத்புதமான கிருத்தியங்களும், இவைகள் ஒவ்வொன்றுமே இம்மஹாபுருஷர் ஸ்ரீபரமாத்மாவின் ஓர் விசேஷ அவதாரமென்பதைத் தெள்ளென விளக்கும்.

இத்தன்மைய அமாநுஷப் பிரஜ்ஞையோடு கூடிய ஸ்ரீமத் ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகளுடைய சரித்திரத்தைப்பற்றி அநேக கிரந்தங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஆசார்ய ஸ்வாமிகளுடைய முக்கிய சிஷ்யர்களான ஸ்ரீசித்ஸுகாசார்யர், ஸ்ரீமதாநந்தகிரி யதீந்திரர் இயற்றிய பிராசீந சங்கரவிஜயமும், பிருஹத் சங்கரவிஜயமுமே புராதநமாயும் பிராமாணிகமாயுமுள்ளவைகள். பிறகு ஸ்ரீவியாஸாசல கவியினால் இயற்றப்பட்ட வியாஸாசலீயமென்னும் சங்கராப்யுதயமும், ஸ்ரீகோவிந்தநாதரால் இயற்றப்பட்ட கேரளீய சங்கர விஜயமென்னும் ஆசார்ய சரித்திரமும், அநந்தாநந்த கிரியினால் இயற்றப்பட்ட குருவிஜயமும், ஸ்ரீஸதாசிவபிரஹ்மேந்திரரால் இயற்றப்பட்ட குருரத்நமாலிகையும் மத்தியகாலத்தில் ஏற்பட்ட கிரந்தங்கள். ஸ்ரீ சித்விலாஸயதீந்திரர் இயற்றியதாக அச்சிடப்பட்ட சங்கரவிஜய விலாஸமும், ஸ்ரீ மாதவாசாரியர் பெயரால் அபிநவகாளிதாஸர் இயற்றிய சங்கர திக்விஜய காவ்யமும், ஸ்ரீ சதாநந்த ஸ்வாமிகளால் இயற்றப்பட்ட சங்கரதிக்விஜயஸாரமும், அவைகளின் வியாக்யாநமாகிய ஸ்ரீ சங்கராசார்ய விஜயடிண்டிமமும், அத்வைதராஜ்யலக்ஷ்மியும், துந்துபியும், தற்காலத்து மடாபிமாநிகளால் இயற்றப்பட்ட கிரந்தங்களே. இவைகள் பெரும்பாலும் கலியுகம் 2593-வது வருஷத்தில் காலடியில் ஸ்ரீ சிவகுருவுக்கும் ஆர்யாம்பாளுக்கும் பிறந்து, பூமியில் முப்பத்திரண்டு வருஷமிருந்து துவாரகையிலும், பதரிகாச்ரமத்திலும், சிருங்ககிரியிலும், ஜகந்நாதத்திலும் காளிகாபீடம், ஜ்யோதிஷ்மதீபீடம், சாரதாபீடம், விமலாபீடம் என்னும் நான்கு பீடங்களை ஏற்படுத்தி அவற்றில் தமது சிஷ்யர்களாகிய பத்மபாதரையும், தோடகாசார்யரையும், விச்வரூபாசார்யரையும், ஹஸ்தாமலகரையும் ஸ்தாபித்து, ஸ்ரீ காஞ்சியில் தமக்காக ஸ்ரீ காமகோடி பீடத்தையும் ஸ்தாபித்து, ஸ்ரீ காஞ்சியில் ஸ்ரீ காமாக்ஷியம்மன் ஸந்நிதியில் கலியுகம் 2625-ம் வருஷத்தில் தேஹத்தியாகஞ்செய்த ஸ்ரீமதாதி சங்கராசார்யருடைய சரித்திரத்தையும், கலியுகம் 3889-ம் வருஷம் சிதம்பரத்தில் விச்வஜித் ஸோமயாஜிக்கும் விசிஷ்டாதேவிக்கும், பிதா இறந்து

இரண்டரை வருஷங்களுக்குப்பின் பிறந்து ஸ்ரீ காமகோடி பீடத்தில் 38-வது ஆசார்யராய் விளங்கி, சிவாநந்தலஹரி, ஸௌந்தர்ய லஹரி முதலிய பற்பல அற்புதக் கிரந்தங்களை யியற்றி ஸ்ரீமத் ஆதிசங்கராசார்யரைப்போல் திக்விஜயம் செய்து பட்டோத்படவாக்பதி, அபிநவகுப்தர், முதலிய வித்வான்களை ஜயித்து, ஷண்மத ஸ்தாபனஞ் செய்து, ஸ்ரீ காச்மீரத்தில் ஸர்வஜ்ஞபீடம் ஏறி, தத்தாத்திரேயர் குஹைக்குச் சென்று, தமது 52-வது வயதில் கலியுகம் 3941-ம் வருஷத்தில் கைலாயஞ் சென்று சீனர்களாலும், துருஷ்கர்களாலும் பாஹ்லீகர்களாலும் பரமாசார்யராக மதிக்கப் பட்டிருந்த அபிநவ சங்கராசார்ய சரித்திரத்தையும் கலந்து காலதேச வர்த்தமாநங்களை யுணராது எழுதப்பட்ட கிரந்தங்களே. இவைகளன்றியும் ஸ்ரீ காஞ்சீகுருபரம்பரை, ஸ்ரீ சிருங்கேரி குருபரம்பரை, ஸ்ரீ துவாரகா குருபரம்பரை, புண்ணியசுலோகமஞ்ஜரி, ஸுஷுமை, சிவரஹஸ்யம், பத்மபுராணம், ஸ்காந்தபுராணம், விமர்சம், பதஞ்ஜலி விஜயம், ராஜதரங்கிணி முதலிய கிரந்தங்களிலும், ஜிநவிஜயம், மத்வவிஜயம், மணிமஞ்ஜரி முதலிய அந்நிய மதஸ்தர்களின் கிரந்தங்களிலும் இவ்வாதி சங்கராசார்யருடைய சரித்திரத்தையும் அபிநவ சங்கராசாரியருடைய சரித்திரத்தையுங் கலந்து எழுதப்பட்ட ஓர் வகை சரித்திரமு மிருக்கின்றது.

ஆகலின் ஸ்ரீமத் ஆதிசங்கராசார்யருடைய திவ்விய சரித்திரத்தைப்பற்றி இங்கு விரிவாய் எழுதுவது அநாவசியமே. உலகமெங்கும் ஸ்ரீபகவான் வேதவ்யாஸர் இயற்றிய பிரஹ்ம ஸூத்திரத்தின் உண்மைப் பொருளை மறந்து சார்வாகம், ஜைநம், பௌத்தம் என்னும் வேதபாஹ்ய தர்சநங்களாலும், வைசேஷிகம், நியாயம், ஸாங்கியம், யோகம், மீமாம்ஸை முதலிய வைதிக தர்சநங்களாலும், பாசுபதம், பாஞ்சராத்திரம், சாக்தம் முதலிய பாஷண்ட மதங்களாலும், ஆரியர்களுக்குப் பரமநிதியாய் தொண்டு தொட்டு வழங்கிவந்த ஸநாதந தர்மம் பல மதங்களாக விரிந்து, நல்வேள்வி யென்பதொழிந்து, நரகமென்பது தழைந்து, அதர்மம் மேலிட்டு, தர்மம் குலைந்து மிகவும் கோரமான கிருத்தியங்களெல்லாம் மதமென்கிற பெயரைக்கொண்டு நடத்தப்படவே, அக்காலத்தில் பிரஹ்மாத்துவைத ஞானத்தைப் பூமியெங்கும் பரவச்செய்து, துராசாரங்களை யெல்லாம் குலைத்து, பாஷண்ட மதங்களைப் பறக்கடிக்கச் செய்து, வைதிகமார்க்கத்தை நிலைநாட்டி, ஸநாதன தர்மத்தை ஸ்தாபித்துப் பிறவிக்கடலில் மூழ்கி யிருக்கும் நம்போன்றவரை ஞானோபதேச நாவத்தைக் கொண்டு கரையேற்று நிமித்தம் கேரளதேச மென்னும் மலையாளநாட்டில், பூர்ணாநதியென்றும், சூர்ணீநதி யென்றும் வழங்கிவந்த ஆல்வாய் நதிக்கரையில் சசலகிராமமென்று வழங்கிவந்த காலடி க்ஷேத்திரத்தில் ஆத்திரேய கோத்திரத்தில் ஸ்ரீவித்யாதிராஜர் வம்சத்தில் மஹாபண்டிதராய் அவதரித்த ஸ்ரீசிவகுருவென்னும் பிராஹ்மணோத்தமருக்கு அவர்களுடைய தர்மபத்நியாகிய ஸ்ரீமதார்யாம்பாளின் பவித்திரமான கர்ப்பத்தில் வர்த்தமான கலியுகாப்தம் 2593ம் வருஷத்துக்குச்சரியான கி. மு. 509-ம் வருஷம், நந்தந ஸம்வத்ஸரம், உத்தராயணம், வைசாகமாஸம், சுக்லபக்ஷம், பஞ்சமிதிதி, புநர்வஸு நக்ஷத்திரம், தநுர்லக்கினம் கூடிய இந்தச் சுபதிநத்தில் ஸ்ரீமத் ஆதிசங்கராசாரிய ஸ்வாமிகள் அவதரித்தார் என்பது பிராசீந சங்கரவிஜயத்தாலும், பிருஹத் சங்கரவிஜயத்தாலும், குருரத்நமாலிகையாலும், புண்யச்லோகமஞ்சரியாலும், ஸுஷுமையாலும், ஜிநவிஜயத்தாலும், ராஜதரங்கிணியாலும், கதாஸரித்ஸாகரத்தினாலும், பதஞ்ஜலி விஜயத்தாலும், விமர்ச கிரந்தத்தினாலும்,

OFFICE OF THE REGI... REGISTERED 7- APR 1910 MADRAS.

துவாரகாதி பீடங்களின் குரு பரம்பரைகளாலும், ஸ்ரீ ஸுதர்ம ஸார்வபௌம தாம்ரபத்திராநுசாஸநத்தினாலும், இன்னும் பற்பல பிரமாணங்களாலும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் யாவருக்கும் விளங்கும்.

ஆகவே இம்மஹாபுருஷருடைய பெயரையும் புகழையுங் கொண்டாடுவதற்கு இவர்களது ஜந்மபூமியாகிய காலடி க்ஷேத்திரத்தில் ஓர் ஆலயமும் மடமுமமைத்து அவர்களது பெருமைக்கேற்றப் பிரதிஷ்டையொன்று செய்யவேண்டுமென்று ஆரிய மதாபிமாநிகளின் மநதில் வெகுநாளாய் ஓர் எண்ணங் குடிகொண்டிருந்தது. ஆனால் இக்காலடி என்னும் க்ஷேத்திரம் எங்கேயிருக்கின்றது, எந்த ஸ்திதியில் இருக்கிறது என்பதுகூட பலருக்குந் தெரியாமலிருந்தது. ஆதியில் இக்காலடி க்ஷேத்திரம் ஓர் அநாதி ஸ்வயம்புலிங்கக்ஷேத்ரமாய் ஏற்பட்டிருந்ததென்றும், ராஜசேகரன் என்னும் ஓர் அரசனால் சூர்ணீ நதிக்கரையில் ஒரு பக்கத்தில் விருஷாத்ரிநாதருடைய ஆலயத்துடனும் மற்றொரு பக்கத்தில் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஆலயத்துடனும் ஒரு பெரிய பிராஹ்மணாக்கிரஹாரமாக அமைக்கப்பட்டிருந்ததென்றும், அதனுள் வேத வேதாங்க பாரங்கதர்களான அநேகம் பிராஹ்மணோத்தமர்கள் நமது ஆசார்ய ஸ்வாமிகளின் காலத்தில் வஸித்து வந்தார்களென்றும் நாம் புஸ்தகங்களில் படித்திருக்கின்றோமேயன்றி அத்தகைய பிராஹ்மணாக்ரஹாரம் இக்காலத்தில் ஒன்றும் காணப்படவில்லை. சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன் இக்காலடி என்னும் ஊரைக்கவனித்தவருங்கூட இல்லை. முன் பிரபல அக்கிரஹாரமாயிருந்த இடம் சில மாசங்களுக்குமுன்வரையில் பெருங்காடாயிருந்ததாகத் தெரியவருகின்றது. ஏதோ தெய்வாநுகூலத்தினால் ஸ்ரீமதாசார்யஸ்வாமிகள் பால்யத்தில் திருவிளையாடல்கள் ஆடின கிருஹமும், பின்பு தமது தாயாராகிய ஆர்யாம்பாளைச் சுவாமிகள் தஹநஞ்செய்த ஸ்தலமுமாகிய ஓர் இடம் மாத்திரம் தொண்டுதொட்டு பரம்பரையாய்க் குறிப்பிக்கப்பட்டு வந்தது. அந்தவிடத்தையுங்கூட, ஊரை ஆக்கிரமித்துக்கொண்டதுபோல, துலுக்கர், கிருஸ்துவர் முதலிய அந்நிய மதஸ்தர்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கியதை கேள்வியுற்று என்ன செய்வோமென்று சில ஆரியமதாபிமானிகள் துயரமுற்றிருக்குங்கால் ஜகதீசனது அம்சம்போல் அவதரித்திருந்த பிரஹ்மவித்தியாபத்திராதிபராய் பலகாலம் விளங்கி வந்த எமதாசிரியர் பிரஹ்மஸ்ரீ பாஸமய பஞ்சாநந பாஞ்ச ஜந்ய பண்டித ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் சில கனவான்களுடன் இக்காலடி க்ஷேத்திரத்திற்குச் சென்று, ஸ்ரீமதாதி சங்கராசார்ய ஸ்வாமிகளுடைய கிருஹமும் ஸ்ரீமதார்யாம்பாளுடைய தஹந ஸ்தலமுமாகிய அந்த விடத்தை மாத்திரம் வெகு பிரயாசைப்பட்டு, அந்நிய மதஸ்தர்களின் கையினின்றும் மீட்டி, அவ்விடத்தில் ஒரு குடீரமுமேற்படுத்தி சென்ற விகாரி வருஷம் முதல் ஆசார்ய ஸ்வாமிகளுடைய பிறந்த நாளாகிய வைசாக சுத்த பஞ்சமியில், வித்வஜ்ஜநங்களைக்கூட்டி, ஆசார்யருடைய சரித்திர விஷயமாயும், அவர்கள் ஸ்தாபித்த அத்துவைத மதவிஷயமாயும், பற்பல உபந்நியாஸங்களைச்செய்து ஆசார்ய ஜயந்தி மஹோத்ஸவத்தை விமர்சையுடன் தாம் உயிருடனிருந்தவளவும் நடத்தி வந்தார்கள். அச்சமயங்களில் ஸ்ரீமத் ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகளுக்கு அவ்விடத்தில் ஓர் ஆலயமும் மடமும் பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்கிற அவருடைய பிரார்த்தனையைக் கேட்டிருப்பவர் அநேகர் உளர். அக்காலடியில் ஒரு பிராஹ்மணர்கூட வஸிக்காமல் மிலேச்ச பூயிஷ்டமாய் இருந்ததைப்பற்றி அவர் வருந்தியதையும் அநேகர் கேள்வியுற்றிருக்கின்றனர்.

அந்தோ! இக்காலடி க்ஷேத்திரத்தின் மஹி

மையையும், ஜீவநதியாய் விளங்கும் சூர்ணீநதிக்கரையில் அது அமைக்கப்பட்டிருக்குந் தன்மையையும், பிராஹ்மணாக்கிரஹாரத்திற்கே உரித்தான அதனது ஸந்நிவேசத்தையும், அங்கு அமரிக்கையுடன் பிரஸந்நமாய் வளைந்து பிரவஹிக்கின்ற சூர்ணீநதியின் அழகையும், அதன் கரைகளிலுள்ள மரச்சோலைகளின் வனப்பையும் வர்ணிக்க யாவரால் ஆகும். இவ்வதிசயங்களையெல்லாம் கண்ணாரக்கண்டே ஸ்ரீ ஸ்ரீநிவாஸசாஸ்திரியார் அவர்கள் சென்ற விகாரிவருஷத்தில் ஸ்ரீமதாசார்ய ஜயந்தி மஹோத்ஸவ ஸமயத்தில் "ஸ்ரீஜகத்குரு தாமஸேவாசதகம்" என்னும் ஓர் அழகிய பிரபந்தத்தை ஸ்ரீமதாசார்ய ஸ்வாமிகளின் ஜநநபூமியாகிய இக்காலடி க்ஷேத்திரத்தின் பெருமையைக் குறித்து எழுதியிருக்கின்றனர். ஆனால் சாஸ்திரியார் அவர்கள் தமது கோரிக்கை முடிவுபெறாமலே திடீரென்று விண்ணுலகம் சென்றதற்கு யாம் வருந்துகின்றோம். ஆயினும் பரமகருணாநிதியாகிய ஸ்ரீபகவானுடைய கிருபையினாலும், ஸ்ரீமதாதிசங்கராசார்ய சுவாமிகளின் பரம்பரையைச் சேர்ந்த ஸ்ரீசிருங்ககிரி மடத்தைத் தற்காலம் அலங்கரிக்கும் ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகேத்யாதிபிருதாங்கித ஸ்ரீ சாரதா பீடாதிப ஸ்ரீசங்கர நவாவதார ஸ்ரீ ஜகத்குரு ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிஹ்ம பாரதீ ஸ்வாமிகளின் அநுக்கிரஹத்தாலும், நமது தேசத்தவர் செய்த பாக்கிய விசேஷத்தினாலும், அச்சாஸ்திரியாரின் கோரிக்கை இப்பொழுது நிறைவேறியதைப்பற்றி யாம் மிகவும் ஸந்தோஷத்துடன் பரமாத்மாவின் பாதாரவிந்தங்களுக்கு வந்தனம் புரிகின்றனம். ஸ்ரீ சிருங்ககிரி ஜகத்குரு ஸ்வாமிகள் தமது தேஹச்சிரமத்தைப் பாராமல், பெருமையைப் பாராட்டாமல் தக்ஷிணதேசத்தில் இதற்கென பலவிடங்களில் யாத்திரையாய் விஜயஞ் செய்து மைசூர் ரிடையர்டு ஹைகோர்ட்டு ஜட்ஜி திவான்பஹதூர் ம-ா-ா-ஸ்ரீ ஏ. ராமசந்திரய்யரவர்களுடைய விசேஷ ஸஹாயத்தினாலும் இன்னும் பற்பல மஹாராஜாக்களுடைய உதவியினாலும், ஜமீன்தாரர்களுடைய உதவியினாலும், மற்றுமுள்ள கனவான்களுடைய ஆதரணையினாலும், விசேஷ திரவியம் செலவழித்து ஸ்ரீகாலடி க்ஷேத்திரத்தில் ஸ்ரீமதாசார்ய ஸ்வாமிகளுக்கு ஓர் ஆலயமும், அவர்கள் பூஜித்துவந்த ஸ்ரீசாரதாம்பாளுக்கு மற்றொரு ஆலயமும், தமக்கு ஒருமடமும் நிர்மாணமாய் முடிவாகிவந்ததை யாம் முன்னரே கேள்வியுற்று ஆநந்தஸாகரத்தில் முழுகியிருந்தோம். அப்படியே சென்ற 1910௵ பிப்ரவரி௴ 21௳க்குச் சரியான நிகழும் ஸௌம்ய௵ மாசி௴ 10௳ மஹா சுத்தத்திரயோதசியாகிய திங்கட்கிழமை தினம் பகல் பன்னிரண்டு மணிக்கு ஸ்ரீ மதாசார்ய ஸ்வாமிகளுடைய மூர்த்தியும், ஸ்ரீ சாரதாம்பாளுடைய மூர்த்தியும் அவ்வாலயங்களில் ஸ்ரீசிருங்ககிரி ஜகத்குரு ஸ்வாமிகளால் வைதிக விதானத்துடன் பிரதிஷ்டை செய்யப்பட்டு, அவ்வாலயங்களுக்கு மஹா கும்பாபிஷேகமும் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டதைக் கண்ணாரக்கண்டு களிப்புற்றனம். இக்கும்பாபிஷேக மஹோத்ஸவத்தின் பெருமையையெடுத்துரைக்க ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேஷனும் வல்லவரல்லர். இத்தகைய மஹோத்ஸவத்தை யாம் இதுவரை கண்டதுமில்லை, இனிக் காணப்போகிறதுமில்லை. ஆயினும் யாம் நேரில் கண்டவற்றுள் சில விஷயங்களை மாத்திரம் அடுத்த ஸஞ்சிகையில் எடுத்துரைப்பாம்.

டி. எஸ். நாராயண சாஸ்திரி, பி.ஏ., பி.எல்.

"தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாம் தொழும்"

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்"

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்."

# நாம் முன்னுக்கு வருவதெப்படி

## THE SECRET OF SUCCESS

உனக்குச் சம்பளம் ஆறு ரூபாயாயிருந்தாலும் சரி, ஆயிரமாயிருந்தாலும் சரி, உனக்குக் கிட்டும் பொருள் நீ சம்பாதிக்கும் பொருளாயிருந்தாலும் சரி, அல்லது மற்றவர்கள் தானங் கொடுத்த பொருளாயினும் சரி, நீ மட்டும் முன்னுக்குவர மனமுள்ளவனாகவிருந்தால் அவசியம் மேற்கூறியபடி பாதியோ அல்லது மூன்றிலொன்றோ மிகுத்தே தீரவேண்டும். நமது நாட்டில் மட்டும் இக்குணம் இல்லவேயில்லை. எத்தனையோ பெயர்கள் தங்களுக்குத் தகப்பனார் கொடுத்த லட்சக்கணக்கான ஆஸ்திகளைத் தலை தெரியாமல் மைவிழியார் மனைகளிலும் மற்ற விதமாயும் ஒரே வருஷத்தில் அழித்துவிட்டு எல்லாராலும் இகழப்பட்டு முச்சந்தியில் நிற்கின்றார்கள். ஆனால் இக்குணம் அமெரிக்கா தேசத்தில் வெகு சாஸ்திரோக்தமாய் விளங்கி வருகின்றது. அவ்விடத்தில் தான் ஸ்ரீதேவியும் கூத்தாடுகிறாள்.

பணவிஷயத்திலும் "காலம்" என்பதின் கீழ் நாம் சொன்னதுபோல் ஏற்பாடுகள் சட்டதிட்டங்கள் என்பது செலவு விஷயத்திலும் வேண்டும். "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" என்றபடி எந்தச்செலவுக்கும் நாம் கணக்கு வைக்கவேவேண்டும். சிறுவர்களாய் சிறுபள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டு நமது தந்தை முதலானவர்கள் நமக்கனுப்பும் பணத்தைச் செலவிடும் பொழுதும், கலாசாலைகளில் பெரிய படிப்பு படிக்கும்பொழுது செலவிடும்பொழுதும், நமக்குத் தானமாகக் கிட்டியபொருளை நாம் செலவிடும் பொழுதும், நாம் ஒவ்வொரு சிறுகாசு செலவிட்டதற்குக்கூடத் தப்பாமல் கணக்கு வைக்கவேண்டும். அப்படி நாம் மட்டும் செய்வோமேயானால் நாம் எந்த விஷயத்தில் அதிகமாகச் செலவிட்டோம், எவ்வாறு சிறு செலவிலிருந்து சில விஷயங்களில் நமக்கு அதிகச் செலவு ஸம்பவித்தது என்ற ஸங்கதிகளைப்பற்றி நாம் ஆலோசித்துப் பார்க்க வகை ஏற்படும். நாம் புத்திசாலிகளாயிருந்தால் எந்த விஷயத்தில் நாம் நமது செலவைக் குறைக்கலாம், எதில் அவசியம் அதிகம் பண்ணியே தீரவேண்டும் என்பது நமக்கு நன்கு விளங்கும்.

ஒவ்வொருவனும் தன் விஷயமாய் எவ்வளவு மட்டும் அத்தியாவசியமாய்ச் செலவு செய்ய வேண்டும் என்பதற்கு ஒரு வரம்பு ஏற்படுத்துவது ஒருபொழுதும் முடியாது. ஏனெனில், ஒவ்வொருவனுடைய செலவு வெவ்வேறு மாதிரி, வெவ்வேறு போக்காக விருக்கும்; ஆனால் செலவு விஷயமாய் இரண்டொரு சித்தாந்தங்கள் நாம் திட்டமாய்ச் சொல்லலாம். உனக்குச் சம்பளம் வரும் முன்னதாகவே வரவுக்குத் தக்க செலவு: இவ்வளவுமிகுக்கவேண்டும்; இவ்வளவு செலவிடவேண்டும் என்ற கணக்கை முதலிலேயே ஏற்படுத்திக்கொண்டு அக்கணக்குப்படி நடக்கவேண்டும். இது முதல் சித்தாந்தம்.

"உபயோகமற்றவைகளில் நீ எவ்வளவு செலவிடுவாயோ அதைப்போல் உபயோகமுள்ளவைகளில் இரட்டிப்பு மடங்கு செலவிட வேண்டும்." அவ்வாறு செலவிடுவது சொற்பமாயினும், கடைசியில் கணக்குப் பார்க்கும் பொழுது ஒரு ஸ்திரமான ஆஸ்தியாய்விடும். ஓர் உதாரணம்! நமக்கு ஒரு குரு இருந்தார், அவருக்கு 8 ரூபா பென்ஷன். அவர் மாதந்தோறும் ஒரு ரூபா வர்த்தமான பத்திரிகைகளுக்கும் இரண்டு ரூபா புஸ்தகங்களுக்கும் செலவிடுவார். 20, 22-வருஷம் பென்ஷன் வாங்கினார். கடைசியில் அவர் 500 ரூபா

விலையுள்ள கோசம் தனக்கு மிகுந்திருந்ததைக் கண்டு ஸ்திரமாய் நமக்குக் கையில் அழியாமல் நிற்கும் அழகான புஸ்தகங்களில் நான் மாதம் ஒன்றுக்கு இரண்டு ரூபா தான் செலவிட்டேன் என்றாலும் ஐந்நூறு ரூபா விலையுள்ள கோசம் என் குழந்தைகளுக்கு ஆஸ்தியாக்கிவிட்டேன். அதாவது மாதம் இரண்டு ரூபா மிகுத்து ஐந்நூறு ரூபா கோசம் சேர்ந்ததைக் கண்டு களியுங்கள்.

எவனொருவன் கண்டபடி கணக்கில்லாமல் வரம்பின்றித் தன் பொருளைத் தோன்றியபடி எல்லாம் செலவிடுகின்றானே அவன் வருஷக் கடைசியில் கணக்குப்பார்த்து ஐயோ! இத்தனைப் பணம் எங்குப் போயிற்று! எவ்வாறாயிற்று! என்று பரிதவிப்பான்.

நாம் ஒப்புக்கொள்ளும் காரியத்தைச் சரிவர முடித்து அதில் கீர்த்தியும், புகழும், வெற்றியும், பதமும் பெறவேண்டும் என்பது நமக்குள் ஒவ்வொருவனுக்கும் இருக்கவேண்டிய நியாயமான ஆசையல்லவா? அப்படியிருக்கும்பொழுது பலர் தாங்கள் மேற்போட்டுக் கொண்டு செய்ய எத்தனிக்கும் கருமங்களில் வெற்றியின்றித் தோற்பானேன்? அதற்கு முக்கிய காரணம் அக்கருமங்களைச் செய்யப் புகும்பொழுது நடுவில் உண்டாகும் சங்கடங்களை வெல்ல அவர்கள் வகையறியாமலிருப்பதேயாம். அச்சங்கடங்கள் யாவை? அவைகளை வெல்ல ஏன் நமக்கு வகை தெரியாமற் போகவேண்டும் என்ற கேள்விகள் உண்டாகலாம். வகைதெரியாமற் போவதற்கு முக்கியமான காரணம் அவ்வித சங்கடங்கள் உதித்தவுடன் நாம் அவைகளைத் தீரத்துடனும் தைரியத்துடனும் கைப்பற்றி அவைகளை அப்பொழுதேவெல்லாமல் மேலெழுந்தவாரியாக அவைகளைச் சங்கடங்களாகவே காட்டிக்கொள்ளாமல் கையாண்டு மறைத்துவைத்து ஒளித்து அப்பொழுது அதைவிட்டு நீங்கி எவ்வண்ணமாவது ஒருவிதம் காரியத்தை முடித்துவிட முயலுவதேயாம். கலெக்டர் நாளைக்கு கஜானா சோதிக்க வருகிறார் என்ற சமாசாரம் தெரிந்தவுடன் ஒரு சாது சராப்பு பணங்களை எண்ணி கணக்குப்பார்த்துப் பைகளைக் கட்டிவைக்கும் பொழுது இரண்டு ரூபா குறையவே அந்த இரண்டு ரூபாயையும் தன் கையிலிருந்துபோட்டுப் பைகளைக்கட்டி அழகாய்வைத்து விட்டார். இதா நியாயம்? எப்படிக்குறைந்தது? எண்ணினது பிசகா என்னவென்று இவர் மறுபடியும் சோம்பலின்றி எண்ணவேண்டாமா? சங்கடத்தை நியாயமான வழியாய் வெல்லாமல் மறைப்பதில் என்ன லாபம்? இந்த ஸராப் வெகு யோக்கியர்; அப்படியிருந்தும் மறுநாள் கலெக்டர் வந்து சோதிக்கும் பொழுது இருக்கவேண்டிய பணத்துக்கு மேல் இரண்டு ரூபா அதிகமாயிருந்ததைக் கண்டு அந்த ஸராபுக்கு வேலை தெரியாதென்று தண்டிக்கவே தண்டித்தார். ஆகையால் சங்கடங்களை எளிதில் ஒளித்து வெல்ல நாம் ஒருபொழுதும் பிரயத்தனப்படவே கூடாது. நீ செய்யும் தொழிலில் எப்பொழுதாவது ஒரு கஷ்டம் வந்தால் அதை உடனே கைப்பற்றி எப்படி இந்தக் கஷ்டம் வந்தது, எப்படிச் செய்தாலிதை வெல்லலாம், எது நியாயமான வழி, எது நியாயமான யுக்தி என்று நீ நன்றாக யோசிக்கவேண்டும். நீ பள்ளியில் படிக்கும்பொழுது ஒரு கணக்கு உனக்கு உன் உபாத்தியாயர் கொடுக்கிறார், அல்லது ஒரு சிறு உபந்நியாஸம் எழுதச் சொல்லுகிறார். அவ்வேளைகளில் உனக்குச் சரியானவழி தெரியாது. அடுத்தபையன் சொற்பம் உன்னைவிட சமர்த்தனாகவிருப்பான். அவன் வழியைப் பார்த்து அப்படியே நீ எழுதிவிடலாம். அல்லது திருட்டுத்தனமாக அக்கணக்கும் உபந்நியாசமும் வேறு புஸ்தகங்களிலிருப்பதாக நீ கேள்விப்பட்டு அவைகளிலிருந்து எடுத்து எழுதிக்கொள்ளலாம். நீ உத்தியோகத்திலிருக்கும்பொழுது நீ எழுதும் நிருபங்களில் ஒரு கஷ்டமான சங்கடம் ஏற்படலாம்; அவ்விடம் என்னமாய் நிருபம் எழுதுகிறது என்பதை உனக்கு அடுத்த உத்தியோகஸ்தனைக் கேட்டால் சொல்லிவிடுவான் அரைக்கால் நாழிகைகூடப் பிடிக்காது. உனக்குச் சிரமமே இருக்காது. ஆயினும் உண்மை

யாய் உழைத்து நீ அறிவதிலும், மற்றொருவர் சொல்லுவதில் கண்மூடியாக நம்பி நடத்தலிலும் வேறுபாடில்லையா? தன் உணர்ச்சி இருந்தால் பிழையுண்டாகும் இடமெல்லாம் நன்கு அறியலாம். ஆதலால் தன்னைத்தானறிந்து வரவுக்குத்தகுந்த செலவு செய்து முன்னும் பின்னும் யோசித்து பொருள் சேகரித்து வாழ்வதாலன்றி நாம் முன்னுக்கு வருவதெப்படி?

பண்டித நடேச சாஸ்திரி.

பாபமில்லாத தொழில் முயற்சியால் பணம் ஸம்பாதித்தல்.—பணம் ஸம்பாதிப்பதற்கு உலகத்தில் அநேக தொழில்கள் இருந்தாலும், அவற்றுள் எது பாபமில்லாததாயும் ஒருவருக்கும் வருத்தத்தை உண்டாக்காததாயும் இருக்கிறதோ அந்தத் தொழிலையே நாம் கைப்பற்றவேண்டும். பாபத்தை உண்டுபண்ணும் களவு சூது மோசம் முதலானவைகளால் நமக்குப் பணம் சீக்கிரத்தில் அதிகமாகப் பெருகினாலும் அந்தத் திரவியம் விரைவில் நம்மைவிட்டு நீங்கிப்போகும். நாம் செய்த அத்தீத் தொழில்களால் உண்டான பாபமாத்திரம் நம்மைவிட்டு நீங்காது அதைக்குறித்து கடவுளால் தண்டிக்கப்படுவோம். உலகத்தில் அநேகர் தாங்களிருக்கிற மேலான அதிகாரத்தினால் ஏழைகளை வருத்திப் பணத்தைப் பறிக்கிறார்கள். அதனால் அவர்கள் ஸௌக்யம் அடைகிறதும் அதை அனுபவிக்கும் அவர்கள் ஸந்ததி விருத்தியடைகிறதும் இல்லை. ஹிம்ஸை செய்து பொருள் ஸம்பாதிப்பவர்கள் உயிருடன் இருக்கிறவரைக்கும், தாங்கள் செய்யுங் கொடுமை எவ்விஷயத்தில் வெளியாகுமோ, அதனால் தமக்கு என்ன தண்டனை ஸம்பவிக்குமோ என்று இரவும் பகலும் மனவருத்தம் கொண்டிருப்பதுமன்றி, அந்தப் பொருளையாரிடத்திலாவது கொடுத்துவைக்கத் துணிகிறார்கள். வாங்கிவைத்துக் கொண்டவர்கள் அதை அபஹரித்துக்கொண்டு தங்களிடத்தில் கொடுத்தவர்களையாவது அல்லது அவர்களுக்குப் பின்பு அவர்கள் வம்சஸ்தர்களையாவது வஞ்சிக்கிறார்கள். எவர்களும் வருத்தமுறும்படி ஸம்பாதிக்காமல் நாம் சரீரப்ரயாசைப்பட்டுப் பொருள் ஸம்பாதித்தால், அதை நாம் ஒருவருக்கும் அஞ்சாமல் அனுபவிக்கலாம். அதை அனுபவிக்கும் நமது வம்சஸ்தர்களும் நன்றாக விருத்தியடைவார்கள் அந்தப் பொருளை ஒருவரும் அபஹரிக்கமாட்டார்கள். ஒருவேளை அபஹரித்தாலும் அது நமது ஸொந்த முயற்சியினால் ஸம்பாதிக்கப்பட்டதாகையால், நியாயஸ்தலத்தில் பிராது முதலானதுகளும் செய்து அதைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கமாட்டோம்.

# ஆசாபாசம்

## FETTERS OF FAMILY LIFE

புண்ணியம் தழைக்கும் இப்பாத கண்டத்தில் வட இந்தியாவில் ஒரு கிராமத்தில் முன்னொரு காலத்தில் ஒருவன் அறுசுவை அமைக்கப்பெற்ற தின்பண்டங்களைச்செய்து விற்று ஜீவனம் செய்து வந்தான். அவன் வீடும், வீட்டுக்கடுத்த பெயர்பெற்ற கடையும், கிராமத்திற்குச் சற்று விலகியிருந்தன. கடையில் வரும் லாபத்தில் தன் வீட்டுச் செலவுக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டு மீதியை ஒருவரும் அறியாத விதம் தினம் தினம் சேகரித்து வந்தான். அவன் குடும்பம், அவன் ஸம்ஸாரமும் இரண்டு சிறிய பிள்ளைகளும்தான்.

ஒருநாள் பகலில் அவன் கடையில் உட்கார்ந்து கொண்டிருந்தபொழுது, ஒரு கிழிந்த ஆடையைத் தரித்தவரும், நல்ல தேஜஸுடையவருமான ஒரு ஸன்னியாஸி வெயிலினின்றும் தங்கி இளைப்பாறுவதற்காக அங்கே வந்தார். சிறிது சிரமம் தீர்ந்ததற்பின் தன் தாகத்தைத் தணிப்பதற்கு நல்ல ஜலம் கேட்க, அந்தக் கடைக்காரன் ஒரு பாத்திரத்தில் குளிர்ந்த நீரும், கொஞ்சம் தித்திப்பான பக்ஷணமும் கொடுத்தான். பசியும் தாகமும் அடங்கினவுடன் அந்தச் சாதுவானவர் அவனைப் பார்த்து தன்னுடைய ஆடை மிகவும் கிழிந்திருப்பதினால் கொசுவின் உபத்திரவத்தினால் தனக்கு இரவில் தூக்கமேயில்லையென்று சொல்லி, அதைச் செம்மையாக்கும்படி அவனைக் கேட்டுக் கொண்டார். நல்ல மனிதனான அந்த வியாபாரி மூன்று மணிநேரம் அவ்வாடையோடு பாடுபட்டுக் கடைசியில் அதைத் தரிக்கத் தக்கதாகச் செய்துகொடுத்தான். அன்றிரவு அவர் நன்றாய்த் தூங்கினார்.

மறுநாட் காலையில் அந்த மஹான் அவன் கடையிலிருந்தபோது அவன் எதிர்முன் வந்தார். இச்சமயத்தில் அவனிடத்தில் ஒன்றும் யாசிக்கவில்லை. ஆனால் அவன் தனக்கு முன்பு செய்த நன்றிக்குப் பிரதி செய்ய நினைத்து, துறவியாதலின் அவனுக்குத் திரவியத்தைக் கொடுக்க மனமில்லாமல் அதனினும் அதிக மேலான இன்பத்தைக் கொடுக்க கருதினார் மஹா தத்துவங்களை உணர்ந்த ஞானி ஆனபடியால்

அவரால் ஆகாதது என்னவுண்டு? இவரைப்போன்ற ஸாதுக்கள் இவ்வுலகத்தில் பற்றற்றவராயிருந்தும், மாயையினல் மூடப்பட்ட ஜனங்களுக்கு உதவி புரிவதற்கும், நன்மார்க்கத்தைப் போதிப்பதற்கும் சஞ்சரிக்கிருர்கள். இந்த வியாபாரிக்கு உலகவாழ்க்கையில் வாஞ்சை அதிகரித்திருப்பதையும் கடவுளை வந்தனஞ்செய்து மேன்மையான பதவியை அடையவேண்டுமென்கிற எண்ணம் அவனுக்குச் சிறிதும் இல்லாதிருப்பதையும் கண்டார். அவர் அவன்மேல் கருணைகூர்ந்து அளவற்ற பதத்தைக்கொடுக்கும் மோக்ஷலோகத்திற்கு வருவாயாவென்று அவனைக் கேட்க அவன் சிறிதுநேரம், தயங்கி, ஆலோசித்து "ஸ்வாமி, யார்தான் அந்தவிடத்திற்குப் போகவிரும்பார். மனிதர்கள் இவ்வுலகத்தில் செல்வத்தையும், பதவியையும் துறந்து இந்த ஜன்மம் நீங்கியபின் அந்த உயர்ந்த பதவியை அடைவதற்காகவே பல்லாண்டு வனத்தில் தபஸிகளாய்த் திரிகிருர்கள் அல்லவா? ஹே! க்ருபா கடாட்சமுள்ள முனி சிரேஷ்டரே! உம்முடைய உபகாரம் ஈடற்றதாயிருக்கிறது. இதோ பாருங்கள் என்னுடைய இரண்டு சிறிய பிள்ளைகளை. அவர்களுக்கு இங்கே என்னைத்தவிர கதி ஒருவருமில்லை. இப்பொழுதே இவர்களை அநாதையாய் விட்டுவிட்டுத் தங்களுடன்வருவேனுனல் யார் இவர்களை ரக்ஷிப்பார். ஆகையால், தாங்கள் தயவுசெய்து 8-வருஷம் கழித்து வந்தால் தங்களுடன் வருவேன்: அதற்குள் இவர்களுக்குப் பொருள் தேட திறமை வந்துவிடும். இதுவே எனக்கு ஒரு பேருபகாரம்" என்ருன். இதைக் கேட்டவுடன் ஸாது, அவனுக்குப் பிள்ளைகளினிடத்தில் பற்று அதிகமாயிருப்பதையே கண்டாரே அல்லது, கடவுளிடத்தாசையாவது மோக்ஷசாம்ராஜ்யத்தை அடையவேண்டுமென்கிற விருப்பத்தையாவது அவனிடத்தில் சிறிதும் கண்டாரில்லை. ஆனுலும், அவன் விருப்பத்திற்கிசைய தான் 8-வருஷம் கழிந்தபின் வருவதாகச் சொன்னர்.

குறித்தகாலத்தில் அந்த ஸன்னியாசி திரும்பிவந்து அவனைப் பார்த்ததில், அந்தக் கடைக்காரன் மிக விசனத்துடன் தனக்கு இடையில் நேரிட்ட கஷ்டங்களையும், தன் பிள்ளைகளின் துர் நடத்தையையும், தான் அருமையாகத் தேடிவைத்த பொருள்களை அவர்கள் துன்மார்க்கத்தில் செலவழித்ததையும் சொல்லித் தன் பிள்ளைகளை நல்ல வழியில் கொண்டு வர வேருெருமார்க்கம் தோன்ருமையால் அவர்களுக்குக் கல்லியாணம் செய்தால் குடும்ப பாரம் உறைத்து நல்லவழியில் திரும்புவார்கள் ஆகையால் தான் அவர்களுக்கு விவாகம் செய்யப்போவதாகச் சொல்லி இந்தச் சுபகாரியத்தை நிறைவேற்ற பணம் அவசியம் வேண்டியதால் இன்னும் 5-வருஷம் கெடு கொடுக்க வேண்டுமென்று மன்ருடி கேட்டுக்கொண்டான்.

இதையெல்லாம் பொறுத்துக்கேட்ட அந்த முனி சிரேஷ்டர் இவனுக்கு நாளுக்குநாள் குடும்பத்தில் பற்று அதிகருத்திருப்பதைக் கண்டு, அவன்மீது இரக்கங்கொண்டு அவனிஷ்டப்படி திரும்பி வருவதாகச் சொன்னர்.

ஐந்து வருஷங்களும் சீக்கிரம் சென்றன. சொன்ன கெடுவில் மஹானும் அந்தக் கடைமுன் தோன்றினர். அந்தக் கடையோ ஒரு குடிசையாய் மாறி அதில் அவனுடைய மூத்த பையன் சொல்ப விலையுள்ள பண்டங்களை ஏழைகளுக்கு விற்பதைப் பார்த்தார். அவனை நெருங்கி, அவனுடைய தகப்பனர் எங்கேயென்று விசாரித்ததில் அந்தப் பையன் "சுவாமி! எங்கள் பிதா எங்களைத் துக்கசாகரத்தில் தள்ளிவிட்டுக் காலஞ்சென்று நாலுவருஷங்களாயின. நாங்கள் வறுமையால் வாடுகிருேம். முன்னிருந்த நேர்த்தியான கடை இப்பொழுதில்லை. நானே சில்லரைச் சாமான்களை விற்கிறேன். அதோபாருங்கள் என்னுடைய தம்பியை. அவன் உழுது கொண்டிருக்கிறன்" என்ருன். இதை யெல்லாம் மௌனமாய்க் கேட்ட அத்துறவி முக்காலமுணர்ந்தவராகையால் அந்த மனிதன் தன் இரண்டாவது குமாரனுல் வயலில் ஓட்டப்பட்ட எருதுகளில் ஒன்ருய்ப் பிறந்திருக்கிருன் என்பதை அறிந்து, எப்பொழுது கலப்பையினின்றும் எருதுகளை விடுவிப்பார்கள் என்று நன்பகல் வரைக்கும் காத்திருந்து, அண்டையில் ஒருவருமில்லாத தருணத்தில் மாடுகள் கட்டியிருக்கும் கொட்டகைக்குச் சென்று, தன் கையிலுள்ள கலசத்திலிருந்து சிறிது மந்திரதீர்த்தத்தை அம்மாட்டின் மீது தெளிக்கவே, அதற்குப் பூர்வஞானம் உதித்தது. மஹானுக்கும் தனக்கும் ஏற்பட்ட நிபந்தனையை அம்மாடு நினைத்து, தலை குனிந்து, "ஸ்வாமி! நீர் குறித்ததினத்தில் வந்தீர். தங்களுக்கு மறைவாயிருக்கும் பொருள் ஒன்றுமில்லை. எப்பக்கமும் வறுமை சூழ்ந்திருப்பதை அறியலாம். நான் பாடுபட்டுத் தேடிவைத்த பொருள் அனைத்தை

யும் இம்மூடர்களாகிய என் பிள்ளைகள் வாரிச்செல விட்டார்கள். இன்னும் இரண்டொரு வருஷத்தில் இவர்கள் சாப்பிடுவதற்கு வழியில்லாமல் தடுமாறுவார்களென்பதில் ஸந்தேகமில்லை. சுவாமி இச்சமயத்தில் இவர்கள் பொருட்டுச் சிலகாலம் உழுவதற்குதவி ஆபத்தினின்றும் இவர்களை நீக்க நினைக்கிறேன்" என்றது.

இதைக்கேட்ட அந்த ஸன்னியாஸி, இவனுக்கு எவ்வளவோ போதித்தும் பற்று அதிகமாயிருப்பதையும், அதை விட்டுவிட மனம் திடமாயில்லாததையும் தெரிந்து அவன்மீது கருணைகூர்ந்து சிலவருஷம் சென்றபின் வருவதாகச் சொன்னார்.

மறுபடியும் அக்கடையைத் தேடினார். கடையை அவர்காணாமல் வீட்டிற் போய்த்தேடவும் அங்குப் பசியால் இளைத்திருந்த ஒருநாய் அவரை எதிர்த்தது. உடனே வீட்டிற்குள்ளிருந்த ஜனங்களைக் கூப்பிடவே பெரியபிள்ளை வெளியில் வந்தான். குடும்பத்தின் யோக க்ஷேமத்தையும், அம்மாட்டைப்பற்றியும் விசாரித்ததில், அந்தப்பிள்ளை

"ஸ்வாமி! மாடு இறந்து வருஷம் ஒன்றாயிற்று. ஐயோ! எவ்வளவு நல்ல பிராணி. புஜிக்கும் ஆஹாரமோ கொஞ்சம். அது காலைமுதல் மாலைவரை நன்றாய் வருந்தி உழைக்கும். அதற்கீடான எருது கிடைப்பதரிது." என்றான். இதைக்கேட்டதும் அவர், தன்வரவைக்கண்டு குலைத்த நாய் வியாபாரி என்றும், வீட்டில் பாக்கியிருந்த சொத்துக்களை வெகு விசுவாஸத்தோடு பிறர் ஒருதுரும்புகூட எடுக்கவொட்டாமல் காத்துக்கொண் டிருப்பதையும் அறிந்தார்.

முற்பிறப்பில் ஏற்பட்ட நிபந்தனையை ஞாபகப்படுத்தும்பொருட்டு அந்நாய்க்குப் பூர்வஞானம் தோன்றும் வண்ணம் செய்வித்தார். உடனே அந்நாய் அவர் பாதத்தில் விழுந்து தனக்கு நேரிட்ட துக்கங்கள் அனைத்தையுஞ் சொல்லி அழுது, "ஸ்வாமி, என்னுடைய அதிருஷ்டஹீனர்களாகிய பிள்ளைகளுக்காக நான் தேடி வைத்த சொத்தில் மிஞ்சியதை, சுற்றுப் பக்கத்திலிருக்கும் திருடர்கள், அபகரியாமலிருக்கும் பொருட்டுச் சிலவருஷம் இங்கேயே திரிய தயவு செய்யவேண்டும்" என்று சொன்னான்.

அவனோடு வாதாடுவது வீண் என்று நினைத்து அவன் கேட்டுக்கொண்டபிரகாரம் திரும்பி வருவதாகச் சொன்னார்.

இன்னும் ஒருமுறை அவ்விடத்தை நாடிச்சென்றார். அங்கே கடையைக்காணாமல் புதிதாய் அமைக்கப்பட்ட இரண்டு சிறு குடிசையைக்கண்டு பக்கத்தில் விசாரித்ததில் இரண்டு சகோதரர்களும் தாயபாகத்திற்காக வழக்காடி பொருள் அனைத்தும் இழந்தார்களென்று தெரிந்து மெதுவாய் பிள்ளைகள் வசிக்கும் ஒரு வீட்டுக்குள் புகுந்தார். அங்கே நாயைக்காணவில்லை. அவ்வடிகள், யோகசித்தி பெற்றவராகையால் அந்தக்கடைக்காரன் ஒருவரும் அறியாமல் பலகாலமாய் பணத்தைச் சேகரித்துப் போட்டுவைத்திருந்த ஒரு பித்தளைக்குடத்தைச்சுற்றி வீட்டினுள்ளே ஒரு சுரங்கத்தில் பாம்பாயிருப்பதை அறிந்தார். அப்பொழுது அப்பிள்ளைகள் இருவரும் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டு வீட்டினின்றும் வெளியே வந்தார்கள்.

இச்சாதுவைப் பார்த்து அவர்களுள் பெரியவன் "அடா தம்பி, இந்தப் பாவியாகிய நாடோடி எப்பொழுது நம்வீட்டில் காலைவைத்தானோ அன்று தொட்டு நமக்குத் தரித்திரம் மேலிட்டு வருந்துகிறோம்" என்று சொல்லி இருவரும் அவரைப் பார்த்து "ஏ துஷ்டா, உடனே எங்கள் வீட்டை நாடாமல் ஓடிப்போ. இல்லாவிடில் இன்று உன் ஆயுள் முடியும்" என்று கூவினார்கள். அந்தத் தபசி சிறிதும் அஞ்சாராகி சாந்தமாய் அவர்களைப் பார்த்து "என் நண்பர்களே, அவ்வளவு வறுமை உங்களைப் பீடித்ததா. உங்களுக்குப் பணக்குறை மேலிட்டிருக்கிறதுபோல் தோன்றுகின்றது. அப்படியானால் நான் ஒன்று சொல்லுகிறேன். உங்கள் தகப்பனார் வழக்கமாய்த் தூங்கும் அறையிலிருக்கும் சுரங்கத்தில் புதையலிருக்கிறது. அதை யெடுத்து இருவரும் பங்கிட்டு உங்கள் கஷ்டத்தைத் தீர்த்துக்கொள்ளும்" என்றார். இதைக்கேட்ட மாத்திரத்தில் அதிக சந்தோஷத்துடன் அறைக்குட் சென்று சுரங்கத்தைத் தோண்டவும், ஒரு ஸர்ப்பம் இவர்களைச் சீறி வெளியே வந்தது. அவர்கள் பயந்து ஓடி வெளியேவந்து இந்தச்சாதுவானவர் ஒருபெரிய

மாயாவி யென்றும், போக்கிரி என்றும், தங்களைப் பாம்புக்குப் பலிகொடுக்க நினைத்தார் என்றெண்ணி, உடனே அவரைத் தண்டத்தால் புடைக்க எத்தனித்தார்கள். இவர்கள்கருத்தை யறிந்த சாதுஉடனேஅவர்களைப்பார்த்து, "என்னைப்பொய்யனென்று நினைக்கிறீர்போலும். அந்தக் குடத்தின்மேலிருக்கும் துருப்பிடித்த மூடியைப்பாரும். அதில் நீங்கள் இச்சிக்கும் சொத்துயிருக்கிறது. சர்ப்பத்தைக் கொன்று எடுத்துக்கொள்ளுங்கள்" என்றார். இதைக்கேட்ட மாத்திரம் சற்றுத் தூரத்தினின்றும் துவாரத்தை உற்று நோக்கிப் பார்த்ததில் அழுக்குப் படிந்த மூடியைக்கண்டதும், ஸன்னியாஸியைக் கொல்லவேண்டுமென்கிற கெட்டஎண்ணத்தைவிட்டுத் தங்கள் முழுக்கோபத்தையும் பாம்பின்மேல் தாக்கி அதைக் கொன்றுவிட்டார்கள். இவ்வுலகத்தில் கடைசியாயிருந்த பற்றினின்றும் விடுபட்ட அப்பாம்பின் ஜீவன் சன்னியாசியைப் பின்தொடர்ந்து வெகுகாலம் அவருக்குத் தொண்டு புரிந்து முடிவில் அவருடைய கருணையால், மோக்ஷபதவியை அடைந்தது.

"அற்றது பற்றெனில் உற்றது வீடு"

க. ராமஸ்வாமி அய்யங்கார், பீ.ஏ.,

படிக்கத்தகுந்த புத்தகங்கள்.—உலகத்தில் வழங்கும் புத்தகங்களில் சில, பால்யர்கள் படிக்கத் தகாதனவாய் இருக்கின்றன. ஆகையால், அப்படிப்பட்ட புத்தகங்களைப் படிக்க நாம் விருப்பம்கொள்ளலாகாது. அவைகளைப் படிப்பதனால், நம்முடைய புத்திக்குத்தோஷம் உண்டாகும். நாம் படிக்கத் தகுந்த புத்தகமென்று தெரியவந்தால், அது யாரால் செய்யப்பட்டது, அவர் எங்கே இருந்தவர், அவரைப்பற்றியும் அவர் செய்த நூலைப்பற்றியும் மனிதர்களுடைய அபிப்பிராயம் என்ன என்கிற ஸங்கதிகளை முதலில் அறியவேண்டும். அவைகளை அறிந்த பின்பு, அந்த நூல் என்ன காரணத்தினால் செய்யப்பட்டதென்றும், அந்த நூலாசிரியர் தன்னைக் குறித்தும் தன்னால் செய்யப்பட்ட புத்தகத்தைக் குறித்தும் என்ன சொல்லுகிறாரென்றும் பார்க்கவேண்டும். இப்படிப் பலவிதத்திலும் அது படிக்கத் தகுந்ததென்று தோன்றினால், அதைப் படிப்பதற்கு நம்முடைய காலத்தில் எது தகுதியான காலமாகத் தோன்றுகிறதோ அந்தக் காலத்தை ஏற்படுத்திக் கொண்டு, ஜனசங்கம் இல்லாத இடத்திற்போய் அதைப்படிக்க ஆரம்பிக்கவேண்டும்,

# நமது நோன்புகள்
## OUR OBSERVANCES
## V. மஹா சிவராத்திரி
## MAHASIVARATRI

சிவராத்திரி விரதம் ஸாதாரணமாகச்சிவனுக்கு மிகப் பிரீதியான நோன்பு. இது ஸாதாரணமாக ஒவ்வொரு மாதத்திலும் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியன்று அனுஷ்டிக்கப்படுவது. ஆகவே இது மாதம் ஒருமுறையும், சிற்சில ஸமயங்களில் மாதம் இருமுறையும் வருவது வழக்கம். மாசிமாதம் வரும் கிருஷ்ண சதுர்த்தசிக்கு மஹா சிவராத்திரி என்று பெயர். இதுவே எல்லா சிவராத்திரிகளிலும் முக்கியமானது. மாசிமாதத்தில் இரண்டு கிருஷ்ண சதுர்த்தசிகள் வந்தால் பஞ்சாங்கங்கள் ஒழுங்குப்படி முதலாவதாவது அல்லது இரண்டாவதாவது மஹாசிவராத்திரி எனக்கொண்டாடப்படும். பொதுவாகப் பின்னதையே மஹா சிவராத்திரி என்று மதிப்பது வழக்கம்.

இவ்விரதத்தை எவ்வாறு அனுஷ்டிப்பது? என்ற விஷயத்தை ஆராயப்புகுவோம். கிருஷ்ண சதுர்த்தசியன்று காலையில் எழுந்ததும் மனதில் தான் சிவராத்திரி விரதத்தை அன்று அனுஷ்டித்துத் தனது ஜன்மத்தைக்கிருதார்த்தம்செய்துகொள்ளப்போவதாக முதலில் விரதம் அனுஷ்டிப்பவன் ஒருவன் ஸங்கல்பம் செய்துகொள்ளவேண்டும். பின்னர் தான் செய்யவேண்டிய நித்ய கர்மானுஷ்டானத்தை விதிப்படி முடித்துவிட்டுச், சிவாலயம் சென்று தனது சிவபூஜையை அன்று சிவஸந்நிதானத்தில் செய்யவேண்டும். இது முடிந்ததும் பகவானிடம் தனது விரதம் யாதொரு குறைவும் இன்றி முடிவு பெறவேண்டும் என்று பிரார்த்தனை செய்துகொண்டு, விரதத்திற்கு வேண்டிய ஸாமான்களைச் சுத்தமனத்தோடும் சிரத்தையோடும் சேகரிக்கத் தொடங்கவேண்டும். இவைகளைக்கொண்டு அருகாமையிலுள்ள ஆலயத்தில் பூஜையை முதலில் விதிப்படி செய்விக்கவேண்டும். பின்னர் விரதம் அனுஷ்டிப்போன் பார்த்திபலிங்க பூஜை செய்வது வழக்கமாகில் அதைச் செய்யவேண்டும். பின்னர் பகல் முழுவதையும் சிவஸ்தோத்திரம் சிவகதாசிரவணம் இவைகளிலேயே போக்கவேண்டும். அன்று முழு

வதும் ஜலபானம்கூடச் செய்யாது பட்டினியாக இருக்கவேண்டும். சிவராத்திரி இரவில் ஜாமத்திற்கு ஒருதரம் முற்கூறியபடி விதிவத்தாகப் பார்த்திப லிங்க பூஜையைச் செய்து, ஆகாரம் நித்திரையின்றி மறுநாள் ஸூர்யோதயம் வரையில் நிர்வஹிக்க வேண்டும். மறுநாள் அமாவாஸையன்று, இரவில் பூஜைகள் செய்யுங்கால் ஸங்கல்பித்தபடி 12-பிராம மணர்களுக்குக் குறைபாது ஸமாராதனைசெய்து சிவநிர்மால்யம், பிராம்மணர்கள் கொடுக்கும் ஆசீர்வாத அக்ஷதை முதலியவற்றை ஏற்றுப், பின்னர் விரதம் அனுஷ்டிப்போன் தனது குடும்பத்தோடு போஜனம் செய்யவேண்டும். இதுவே பொதுவாகச் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கும் விதி. இம்மாதிரி ஒரு மஹா சிவராத்திரி தொடங்கி மறு மஹா சிவராத்திரிவரையில் வரும் மாஸசிவராத்திரிகளில் விரதம் விடாது அனுஷ்டித்து, மறு மஹாசிவராத்திரியில் விரதத்தை முடிக்கவேண்டியது. இம்மாதிரி சிவராத்திரிவிரத ஆரம்ப உத்யாபன விஷயமாக அனேக விதமான தானங்கள், ஸமாராதனைகள் கலசபூஜைகள் தெளிவாகச் சிவபுராணங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின்படி நடந்து வெளியேற சக்தியுடையவர்கள் சிரத்தையுடன் அவைகளை அனுஷ்டிப்பார்களாகில் சிறந்த பலன் உண்டாகும் என்பதற்கு ஸந்தேகமில்லை.

இனிச்சிவராத்திரி விரதத்தில் அடங்கியிருக்கும் உட்கருத்து விஷயமாகச் சற்று ஆராய்ச்சிகள் செய்வோம். பொதுவாகக் கூறுமிடத்துப் பக்ஷங்களில் முதல் பத்துநாள் இந்திரிய ஸம்பந்தமான திவஸங்கள், ஏகாதசிதான் பதினோராம் இந்திரியமாகிய மனஸுக்குரிய நாள். அன்று பத்து இந்திரிய வியாபாரங்களையும் அடக்கிப் பதினோராம் இந்திரியமாகிய மனதைச் செழிக்கச் செய்யவேண்டும். அதாவது பட்டினி முதலியவைகள் இருந்துகொண்டு மனதைப் பகவான் விஷயத்தில் செலுத்தும் ஓர் வேலையைமாத்திரம் கடைப்பிடிக்கவேண்டும். இவ்வாறு செய்தபின்பு பன்னிரண்டாம் விஷயமாகி ஜீவாத்மஸ்தானம் அடைய, விரதம் அனுஷ்டிப்போனுக்குச் சற்றுக்களைப்பாறும் தருணம் கிடைக்கும். இதுவே துவாதசி பாரணைசெய்து சற்று விச்ராந்தி அடைதல். ஜீவாத்மாவுக்குத் தனியாக இருப்பு இல்லை. ஆதலால் அங்கு அதிகநாழிகை மனதினல் தரிக்கமுடியாது. அதிலிருந்து 13-ம் ஸ்தானத்தில்பரம்பொருள் ஆனந்த பவனிவருவதைக்காண ஏகாதசியிற் செய்த அப்பியாஸ விசேஷத்தால் மனிதன் தூண்டப்பட்டுப் போவான். இது துவாதசி திரயோதசி ஸந்தியில் பகவான் பிரதோஷ உலாப்புறப்படல். இவ்வாறு ஜீவாத்ம ஸ்தானத்தில் தரியாது பகவத் அதீனமானதும் மனிதனுக்குப் பழக்க விசேஷத்தால் ஸமாதிகைகூடி துரிய ஜாக்கிரதை (அதாவது ஸதா பகவத் ஸ்வரூபத்தை மறவாதிருக்கும் தன்மை) வருகிறது. இதுவே சதுர்த்தசிதினம். இதனல் தான் அஞ்ஞானந்தகாரமாகிய தூக்கத்தில் மூழ்காது இத்தினம் இரவில்கூட விழித்துக்கொண்டு மனதைப் பகவானிடம் செலுத்தவேண்டியது என்று விதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு சிவராத்ரியில் மனம் செலுத்தும் பழக்க விசேஷத்தால், பர்வகாலத்தில் ஜீவன் சிவமாகி, ஜீவன் முக்தி பெறுவான். ஆகவே ஜீவன் முக்திக்கு முந்தியநிலை சிவராத்திரிநிலை. இந்த அரிய உண்மைகளைத்தான் ஏகாதசி, துவாதசி, திரயோதசி (பிரதோஷம்) சதுர்த்தசி (சிவராத்திரி) ஆகிய விரதங்களில் நமது பெரியோர்கள் அடக்கி இருக்கிறார்கள். இந்த உட்கருத்தை இனி விஸ்தரிப்பதற்கு நமக்கு யோக்கியதையில்லை. இதன் விவரங்களை ஸத்குரு மூலமாக ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளவேண்டியது. இங்குப் பொதுவாக நாம் சொல்லக் கூடியது யாதெனில், இங்குக் காட்டியிருக்கிறவரையில் இக்கருத்தை மனதில் அமைத்துக்கொண்டு இங்குக் கூறியிருக்கும் விரதங்களைச் சுத்தமனதோடும் சிரத்தையோடும் அனுஷ்டித்து வருவோமாகில் காலக்கிரமத்தில் விரதங்களின் கொடுமைகள் நமக்குத் தோற்றாமலும், இக்கருத்து வேறூன்றியும் வர நமக்கு மோக்ஷ பதவியை அடைவதற்கு அவசியம் வேண்டிய சாந்தி நமது சித்தத்தில் குடிகொள்ளும். பின்னர் ஆசாரியன் அனுக்கிரஹத்தால் பரமபதம் கைகூடும் என்பதற்கு என்ன ஸந்தேகம்?

‘ஸகல சதுர்த்தசிகளுக்கும் இவ்வுட்கருத்து இசையும் ஆதலின், சிவ ஸம்பிரதாயத்தில் கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசிகளை மாத்திரம் சிவராத்திரிகளாக மதிப்பானேன் ?’ என்ற சங்கை பிறக்கும். உடனே ‘சிவ உத்ஸவாதிகள் எல்லாம் சுக்கிலபக்ஷத்தில் நடக்கின்றன, பௌர்ணமிகள் தவறாது சிவன் கோயில்களில் சிறந்த உத்ஸவங்கள் நடைபெறுகின்றன’ என்ற விஷயங்கள் ஞாபகம் வந்துவிட்டால்,

'இந்தச் சிவராத்திரி விரதம் மாத்திரம் ஏன் கிருஷ்ணபக்ஷத்தில் அமைக்கப்படவேண்டும்' என்ற கேள்வி பிறந்து முற்கூறிய சங்கையைப் பலப்படுத்தும். இதற்குப் பரிஹாரம் பின் வருமாறு கூறலாம். சைவ ஒழுங்கு ஸாதாரணமாக இருபாகமாகக் காணப்படும். அவையாவன: ஜனஸமூகங்களுக்கு உபயோகப்படக்கூடிய பக்திபாகம், ஒவ்வொருவருக்கும் தனித்தனியே உபயோகப்படக்கூடிய ஞானபாகம் என்பவைகளே. இந்தப் பக்திபாகம் முக்கியமாக மனக்குதூஹலம் உண்டாக்கி மனதைச் சீர்திருத்திப்பகவானுக்கு அர்ப்பிதம்செய்யப் பக்குவமாக்குவது. இந்தப்பாகத்தைச் சேர்ந்தவையே சிவாலய உத்ஸவங்கள். சுருதிகளின்படி மனஸுக்கு அதிபதி சந்திரன் (சந்த்ரமா மனஸோஜாதஃ, என்பது சுருதி). ஆகையால் மனது தழைத்துக் குதூஹலம் அடைந்து பக்தியால் பக்குவமாவது, சுக்கிலபக்ஷத்தில் சந்திரன் வளர்ந்து பர்வத்தில் பூர்த்தியாவதோடு ஸம்பந்தமுடையது. இதனால் ஜனங்களுக்குப் பொதுவாகப் பக்தி உதித்து மனப்பக்குவம் வரும்படி செய்வதையே நோக்கமாக உடைய சிவாலய உத்ஸவங்கள் சுக்கிலபக்ஷத்திலேயே அமைக்கப்பட்டுப் பர்வங்களன்று அவை முடிவுபெறுகின்றன. சிவராத்திரி விரதமோ, உட்கருத்தில் காட்டியபடி ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக உபயோகப்படக்கூடிய ஞானபாகத்தைச் சேர்ந்தது. பக்தி பாகப்படி மனம் கனிந்த ஒருவன் ஞானபாகத்தில் விருத்தியடைந்து வருவானாகில் அவனுக்குப் பரம்பொருள் விஷயம் அதிகமாக விளங்கிக்கொண்டும், மனதின் காரியமான உலக விஷயங்கள் வரவர மறைந்துகொண்டும் வரும். அதாவது ஞானபாகத்தில் பழகுவோருக்கு மனது வரவர அடங்கிக்கொண்டேவரும். இது கிருஷ்ணபக்ஷத்தில் சந்திரன் குறைந்துவருவதோடு ஸம்பந்தப்பட்டது. ஆகவே ஞானபாகத்தில் பகவான் சிறப்பைக்கண்டு அவரோடு இரண்டறக்கலப்பதற்கு முந்திய நிலையாகிய ஸமாதிகாலத்தில் மனது மிகக்குறைந்து நிற்குமாதலின் சிவராத்திரியைக் கிருஷ்ண சதுர்த்தசியன்று அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பக்குவமனம் அடங்குவதை முக்கியலக்ஷணமாக உடைய விரதங்களுள் ஒன்றாகிய சிவராத்திரி கிருஷ்ணபக்ஷத்தில் அமைந்திருப்பது நியாயமே.

இவ்வளவு சிறப்பமைந்த சிவராத்திரியை அறியாமல் அனுஷ்டித்தபோதிலும் ஒருவனுக்கு மேன்மை உண்டாகும் என்று புராணங்கள் கூறும். இதற்குத் திருஷ்டாந்தமாகச் சிவபுராணங்களில் இரண்டு கதைகள் காணப்படுகின்றன. அவைகளைச் சுருக்கமாக எடுத்துக் கூறுவோம்.


முதல்கதை வேதநிதி என்ற துராத்தமா சிறப்படைந்ததைப்பற்றிக் கூறுவது. அது பின்வருமாறு. அவந்தி என்றபட்டணத்தில் ஸகல குணங்களும் அமைந்த தீக்ஷிதர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியும் மிகச்சிறந்த குணங்கள் வாய்ந்தவள். அவர்களுக்கு ஸுநிதி, வேதநிதி என்ற இரண்டுபிள்ளைகள் இருந்தனர். மூத்தவனாகிய ஸுநிதி தன் தாய் தகப்பன்மார்கள் போன்ற ஸன்மார்க்கியாகி அவர்களை மிக ஸந்தோஷப் படுத்திவந்தான். இளையவனாகிய வேதநிதியோ தாசிவீட்டிற்குப் போதல் முதலிய கெட்ட குணங்களிலேயே பழகிவரவரக்கொடியவனானான். தாய் தகப்பன்மார் இவனை எவ்வளவு கண்டித்தும், இவன் துன்மார்க்கத்தைவிட்டுத் திரும்பவே இல்லை. இப்படி இருக்கையில் அவந்தி தேசத்து அரசனுக்கு இந்தத் தீக்ஷிதரிடம் பிரீதி உண்டாக, அவன் இவருக்கு ஒருநாள் ஓர் விலையுயர்ந்த ரத்ன மோதிரத்தைக் கொடுத்தான். இதைத் தீக்ஷிதர் ரஹஸ்யமாகத் தம்மனைவியிடம் கொடுத்துப் பத்திரப்படுத்தி வைக்கச் சொன்னார். இதை எவ்வாறோ அறிந்த வேதநிதி, ஜாக்கிரதையாக இதைத் திருடித் தன் வேசிக்குக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டான். அதை அவள் போட்டுக்கொண்டு ராஜஸபைக்கு நாட்டியம் செய்யப் போயினள். அரசன் அவள் கைவிரல் மோதிரத்தைக் கவனித்துப்பார்க்க, அது தான் தீக்ஷிதருக்குக் கொடுத்தது என்று அவனுக்குத் தெரியவந்தது. உடனே அந்தத் தாசியை அரசன் 'இம்மோதிரம் உனக்கு எப்படிக் கிடைத்தது' என்று கேட்க, அவள் முதலில் பொய்சொன்னாள். பின்பு அரசன் பயமுறுத்திக் கேட்க, அவள் தீக்ஷிதர் பிள்ளை வேதநிதியிடமிருந்து தான் அதைப் பெற்றுக்கொண்டதாகச் சொன்னாள். உடனே அவளிடமிருந்து அரசன் மோதிரத்தைப் பிடுங்கிக்கொண்டு அவளை அனுப்பிவிட்டான். பின்னர் அரசன் தீக்ஷிதருக்கு ஆளனுப்பி வரவழைத்து 'நான் கொடுத்த மோதிரத்தைச் சற்றுக் கொண்டுவாரும். கூடியசீக்கிரத்தில் அதைத்திருப்பிக் கொடுத்து விடுகிறேன்.' என்று சொன்னான். தீக்ஷிதர் வீட்டிற்கு ஓடோடியும் வந்து மனைவியிடம் மோதிரத்

தைக்கேட்டார். மனைவி எவ்வளவு தேடியும் அவளுக்கு மோதிரம் அகப்படவில்லை. இந்த ஸங்கதியை மிகுந்த பரபரப்புடன் வந்து தீக்ஷிதர் அரசனிடம் தெரிவித்தார். அரசன் தீக்ஷிதரது மனஸ்தாபத்தைக்கண்டு இரங்கி, மோதிரம் தன்னிடம்வந்த விவரத்தைத் தெரிவித்து, அதை அவரிடம் ஒப்புவித்தான். தீக்ஷிதர் வீடுசென்று மனைவியைக் கண்டித்துவிட்டு, வேதநிதியை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டனர். அன்று சிவராத்திரிதினம். அன்றுமுழுவதும் எங்குத்திரிந்து பார்த்தும் வேதநிதிக்கு ஆகாரமே கிடைக்க வில்லை. பசியால் மிகவருந்தி நிற்கையில், ஸூர்யாஸ்தமன ஸமயத்தில் சிவபக்தர்கள் நிவேதன வஸ்துக்கள் பூஜாத்திரவியங்கள் முதலியவைகளை எடுத்துக்கொண்டு சிவாலயத்துள் புகுவதை வேதநிதி கண்டான். இவனும் சிவாலயத்துட் புகுந்து,'எப்பொழுது இவர்கள் போவார்கள்; நாம் இந்த வஸ்துக்களை உண்டு பசி தீரலாம்' என்ற ஆவலுடன் விழித்துக்கொண்டு அங்கு உட்கார்ந்திருந்தான். முதல்ஜாம பூஜையானதும் எல்லோரும்தமதுவீடுசென்றனர். கோயில் குருக்கள்களும் தமக்குக்கிடைத்த நிவேதன வஸ்துக்களை மூலஸ்தானத்தில் வைத்துவிட்டு நித்திரைசெய்யத் தொடங்கினர். எல்லோரும் நித்திரை செய்கையில் வேதநிதி எழுந்து மூலஸ்தானத்துள் போனான். அங்குத்தீபம் அணையும் தருணமாக இருந்தது. தன் திருட்டுவேலைக்கு ஸஹாயமாக இருப்பதற்காக அந்த அணையும் விளக்கை வேதநிதி தூண்டினான். இதுதான் இதுவரையில் அவன் செய்த ஸத்கிருத்தியம். வேண்டிய உணவுகளை எடுத்துக்கொண்டு மிகுந்த ஆவலுடன் வெளி ஏறுகையில் ஓர் குருக்களை வேதநிதி மிதிக்க, அவர் "திருடன்! திருடன்!!" என்று கூக்குரலிட்டுக் கொண்டெழுந்தார். எல்லோரும் எழுந்து வேதநிதியைத் துரத்தித் தெருவில் சென்றனர். இந்தச் சப்தத்தைக் கேட்டு இராஜஸேவகர்கள் தமது அம்புகளை விடுத்து வேதநிதியைக் கொன்று தள்ளினர். மஹா சிவராத்திரியன்று ஓர் ஜாமம் சிவஸந்நிதானத்தில் விழித்திருந்து சிவாலயத்தில் அணையும் விளக்கைத் தூண்டின புண்யத்தால் வேதநிதிக்குக் கலிங்கராஜ ஜன்மம் கிடைத்தது. அதிலிருந்து காலக்கிரமத்தில் அவன் முக்தியை அடைந்தான்.

இரண்டாவதுகதை வேடன் சிறப்படைந்ததைப் பற்றிக் கூறுவது. ஓர் காட்டில் குருத்ருஹன் என்ற ஒருவேடன் இருந்தான். அவன் வேட்டையாடி ஜீவஹிம்ஸைசெய்து மாம்ஸம் கொணர்ந்து தன் குடும்பத்தைஸம்ரக்ஷிப்பது வழக்கம். இப்படி இருக்கையில் ஓர் சிவராத்திரியன்று அவன் வேட்டைக்குப் புறப்பட்டுக் காடெங்கும் திரிந்தான். அன்று ஸூர்யாஸ்தமனம் வரையிலும் அவனுக்கு ஒரு மிருகமும் அகப்படவில்லை. ஸூர்யாஸ்தமனமானதும் இருள் மூடிக்கொண்டுவர அவன் வீடுநோக்கிப் புறப்பட்டான். 'நாம் ஆஹாரம் கொண்டுபோகாது வீடு போய் என்ன பயன்? நமது குடும்பம் கஷ்டப்படுவதைப் பார்த்துக்கொண்டுதானே இருக்கவேண்டும். இதைவிட வீடுபோகாது இங்கேயே இருக்கலாம்' என்று எண்ணமிட்டுக்கொண்டு வருகையில் இருள் நன்றாக மூடிக்கொண்டது. அப்பொழுது அவன் ஓர் குளக்கரை வந்து சேர்ந்தான். அங்குத் தீர்த்தம் குடித்துவிட்டு நிமிர்ந்தான். உடனே 'இங்கு மறைந்துகொண்டிருப்போம். ஏதாவது ஓர் ஜந்து இன்றிரவு தண்ணீர் குடிக்க வராமலா போகும்? அதைக்கொன்று எடுத்துக்கொண்டு வீடு செல்வோம்' என்று அவனுக்குத் தோன்றியது. கையிலிருந்த பாத்திரத்தில் தண்ணீரெடுத்துக்கொண்டு அவன் கரையிலேறினான். அப்பொழுது 'துஷ்டமிருகங்கள் வந்து நம்மை கொன்றுவிட்டால் என்னசெய்வது?' என்ற பயம் தோன்ற, அருகிலிருந்த மரத்தின்மீது ஏறிக்கொண்டு மிகுந்த ஜாக்கிரதையாக விழித்துக்கொண்டிருந்தான். முதல் ஜாமத்தில் ஓர் பெண்மான் வந்து தண்ணீர் குடிக்க இறங்கியது. வேடன் வில்லில் அம்பைவைத்துக் குறிபார்க்க மரம் அசைந்தது. உடனே அதிலிருந்து சில இலைகளும், வேடன் பாத்திரத்தில் இருந்து கொஞ்சம் தீர்த்தமும், மரத்தடியில் மறைந்துகிடந்த சிவலிங்கத்தின் தலையில் விழுந்தன. அந்த மரம் வில்வமரமாக இருந்தபடியால், வேடன் மஹாசிவராத்திரியன்று முதல்ஜாம பூஜை செய்தவனானான். இந்தச் சப்தத்தைக்கேட்ட பெண்மான் மிகுந்த ஸந்தோஷத்துடன், வேடனைநோக்கி 'நான் கிருதார்த்தனானேன். என்மாம்ஸம் நல்லவழியில் உபயோகப்படுகிறது. ஆனால் எனக்கு ஓர் கணவனும், சிலகுழந்தைகளும் உண்டு. அவைகளிடம் சென்று உத்தரவு பெற்றுக்கொண்டு நான்காம்ஜாமம் உன்னிடம் வந்துவிடுகிறேன்' என்றது. வேடன் முதலில் இந்த வார்த்தையை நம்பாமலிருக்க, பின்னர் மான்கூறிய உ

றுதிமொழியை நம்பிமானைப்போகவிட்டு, வேறு ஏதாவது மிருகம் வாராதா என்று விழித்துக் கொண்டிருந்தான். முதல்மானின் தங்கை தனது அக்காளைத்தேடிக்கொண்டு இரண்டாம்ஜாமத்தில் குளக்கரைக்குவர, முன்போல எல்லாம் முறையே நடந்தன. வேடன் இரண்டாம் ஜாம சிவபூஜை செய்தவனானான். மானும் முதல்மான் கூறியதுபோலக் கூற வேடன் அதையும் போகவிட்டான். மூன்றும் ஜாமத்தில் முன்வந்த இருமான்களின் கணவனாகிய ஆண்மான் தன் இரு பெண்சாதிகளையும் தேடிக்கொண்டு குளக்கரை வந்தது. முன் நடந்தவைகள் முறையே நடந்தேறின. வேடன் மூன்றும் ஜாம பூஜை செய்தவனானான். இந்த மானும் தன் நிலையைக்கூறி நான்காம் ஜாமம் வருவதாக வேடனிடம் விடைபெற்றுச் சென்றது. நான்காம் ஜாமம் இவைகள் வரவில்லை. வேடன் தான் ஏமாந்ததாக மதித்துக்கொண்டு மிகத்துக்கித்தான். ஸூர்யன் உதயமாயிற்று. எதிரே அருகாமையில் மூன்று மான்களும் அதன் குட்டிகளும் நிற்பதை வேடன் கண்டான். அவைகளுள் 'நான்தான் வேடனுக்கு இரையாகிக் கிருதார்த்தனாவேன்' என்று தர்மவிஷயமாகப் போட்டிவர, முடிவில் மூன்று மான்களும் வேடனிடம் வந்துநின்றன. முன்போல எல்லாம் நடக்க, வேடன் நான்காம் ஜாம பூஜைசெய்தவனானான். அப்பொழுது தம்மைச் சீக்கிரம் கொன்று உபயோகப்படுத்தும்படி அவைகள் வேடனை வேண்டிக்கொண்டன. சிவராத்திரி இரவு முழுவதும் விழித்திருந்து வேடன் சிவபூஜை செய்ததால் நிர்மலமாகிய மனது உடையவனாக இருந்தமையால், அவன் ஜீவஹிம்ஸை செய்யமாட்டேன் என்று விரதம் கொண்டு தான் இதுவரையில் செய்த பாபங்களை எண்ணி மனம் உருகினான். உடனே சிவபெருமான் பிரத்தியக்ஷமாகி மான்களுக்கு மோக்ஷம் கொடுத்து, வேடனுக்கு ஸத்புத்தி வரும்படி செய்து, குஹன் என்ற பெயரையும் அளித்து, அவனைப் பூமியில் கொஞ்சகாலம் இருந்து பின்னர் வரும் ராமசந்திர மூர்த்திக்குக் கைங்கரியம் செய்து கிருதார்த்தனாகித், தன் பதவியை அடையும்படி கட்டளையிட்டு மறைந்தார். மோக்ஷமடைந்த மூன்று மான்கள் மூன்று, மிருகசீர்ஷ (மான்தலை) நக்ஷத்திரங்களாக இன்னும் விளங்குகின்றன என்று புராணங்கள் கூறும்.

இவ்விருகதைகளும் சிவராத்திரி விரதத்தின் சிறப்பை நன்கு விளக்குகின்றன. இந்த வியாஸத்தை முடிக்கும் முன்னர் இந்த விரதத்திற்கு முக்கியமாகிய சிவலிங்கத்தின் உட்கருத்தைப்பற்றிச் சற்றுச் சுருக்கமாக ஆராய்வோம்.



சிவலிங்கத்தை நாம் எல்லோரும் பார்த்திருக்கிறோம். அதன் அடிபாகமாகிய பீடத்திற்கு ஆவடை என்றுபெயர். அதன் மேல்பாகத்திற்குப் பாணம் அல்லது லிங்கம் என்று பெயர். முதல் முதல் இதைப்பார்ப்பவர்களுக்கு இது ஒருரூபமாகக் கண்ணிற்குப் பட்டபோதிலும், ஸாதாரணமாகக்காணப் பட்டஒருரூபமும் இதில்இல்லை என்பதுதெரியவரும். இதனாலேயே பிரம்ம நிர்குண ஸகுண ஸ்வரூபங்கள் உடையது, அரூபமாயினும் ஸகலரூபங்களையும் அடக்கியுள்ளது, அதாவது ரூபாரூப ஸ்வரூபமானது என்பதைச் சிவலிங்கம் முதலில் நமது மனதிற்குக் கொண்டுவருகின்றது. மேலும் நமது வீட்டில் ஜ்யோதி என்ற சிறு பூஜாவிளக்கை நாம் கண்டிருக்கிறோம் அல்லவா? அதில் நிற்கும் திரியை இட்டு விளக்கேற்றினால் இந்தலிங்கம்போன்ற ஆகிருதிவரும். இதனால் பாணமானது மேல்நோக்கிய (ஊர்த்வமுக) தேஜஸ்ஸையும், ஆவடை என்பது அது புறப்

படும் பிரபஞ்சாதிகளையும் குறிக்கும். சிவலிங்கத்தின் மேல் பாகத்தில் விபூதி இட்டிருப்பது ஊர்த்வமுகமாகப் போய் அடையக் கூடியசாந்தி அல்லது நிர்விகல்ப ஸமாதிநிலையைக் குறிக்கின்றது. விபூதி சாம்பலாக இருப்பது நாம ரூபாதிகள் நசித்தநிலையையும், மூன்றாக இடுவது திரிகுணாதிகளின் இயல்பு நீங்கிய குணாதீதமான நிலையையும் குறிக்கின்றன. யோகிகளும் லிங்காகிருதியாக இருந்து நிஷ்டை செய்வது வழக்கம். இந்தஸமயத்தில் காலைமடித்து உட்காருவது போல உட்கார்ந்து மேல்முட்டுகளைத் தூக்கிக் கைகளால் அவை மார்புக்கு எதிரே நிற்கும்படி கட்டிப் பிடித்திருப்பதே, இந்த ஆகிருதி வர உட்காரவேண்டிய ஆஸனம். ஸந்யாஸிகளையும் இம்மாதிரி ஆஸனத்தில் உட்காரவைத்துத்தான் ஸமாதி வைப்பது. இந்தச் சிவலிங்கத்திற்கு முற்கூறிய சிறப்பு இருத்தலில் பெரியோர்கள் இந்து உருவத்தை இவ்வளவு மதிக்கின்றனர். லிங்கம் என்ற பதத்திற்குக் குறி என்று பொருள். எளிதில் அறியக்கூடாத வஸ்துவைக்காட்டும் அடையாளம் என்பது இதன் கருத்து. இந்த அர்த்த விஷயமாக ஓர் பெரியவர் 'ஸகலத் தோற்றம், அதாவது நாம ரூபாதிகள், கடந்து அப்பாற்பட்டுச் சேஷிப்பது எதுவோ அதுவே முடிவான மூலலிங்கம்' என்று கூறியிருக்கிறார். இவ்வித சிறந்த கருத்துக்கள் அடங்கிய இந்தச் சிவலிங்கத்தை * முற்கூறிய உட்கருத்துக்களை வைத்துக்கொண்டு ஆராதித்தால் நமது மனது நிர்மலமாகிச் சிறந்த ஆஸ்திக புத்தி அதில் பதிந்து, அப்பியாஸ விசேஷத்தால் பரமபதம் ஸித்திக்கும் என்பதற்கு ஸந்தேகம் இல்லை.

---

* இக்காலத்தில் பழயன பரீக்ஷகர்கள் என்ற ஒருகூட்டத்தார் கிளம்பி சிவலிங்க ஆராதனம் உண்டான வழிகளை ஆராய்ந்து வாயால் கூறத்தகாத மாதிரியான விஷயங்களை அதனுடன் ஸம்பந்தப்படுத்திக் கூறுகின்றனர். இந்த அருவருப்பான விஷயங்கள் சில காட்டாள் ஜாதிகளில் காணப்படுவதால், அவைகளைப் போன்ற சிவலிங்காராதனத்துடன் அவைகளை ஒட்டிப்பார்த்து இத்திறத்தார் மகிழ்ச்சி அடைகின்றனர் போலும். இவர்கள் கூறுவதைச் சைவஸித்தாந்திகளில் சிலர்ஒருவாறு அங்கீகரித்துக்கூறினாலும் கூறலாம். கேவலம் மோக்ஷப்பிரதமாகிய சிவலிங்க ஆராதனத்திற்கும் பழயன பரீக்ஷகர்கள் கூறும் கொடிய விஷயங்களுக்கும் யாதொரு ஸம்பந்தமும் இருக்க இடமே இல்லை. இந்த விஷயம் எடுத்து விஸ்தரிக்கத்தகாத அவ்வளவு கொடியது ஆதலின் இதில் ஆராய்ச்சி யொன்றும் செய்யாது முடிவுரையைக் கூறினோம்.

# இயற்கை அற்புதங்கள்

## WONDERS IN NATURE

### XV. தண்ணீர் : அதன் குணங்கள்

### WATER : ITS PROPERTIES

நீர்வாயு—Steam
சுருங்காமை—Incompressibility
அழுத்தமாற்றம்—Communication of pressure
மட்டமாகல்—Finding level
கீழ்நோக்க அழுத்தம்—Downward pressure
மேல்நோக்க அழுத்தம்—Upward pressure
பக்க அழுத்தம்—Sideways pressure
பரப்பு—Layer
உள் அழுத்தம்—Internal pressure
ஒட்டும் சக்தி—Adhesion
நழுவு சக்தி—Repulsion
தந்து எற்றம்—Capi'lary ascent
தந்து இறக்கம்—Capillary descent
தந்துகுணம்—Capillarity
குழிவான—Concave
திரண்ட—Convex
போல்—Bore
ஸஹஜவாயு—Air
பாரம்—Thrust

**தண்ணீர்** : என்பது நாம் கழுவுதல், குடித்தல், முதலியவைகளுக்கு ஸாதாரணமாக உபயோகப்படுத்தும் ஓர் திரவ வஸ்து. இது ஸர்வ ஸாதாரணமாக இருப்பதால் இதன் ஸம்பந்தமான அற்புதங்கள் நமக்கு வெளியாகாமல் இருக்கின்றன. இப்படி இருப்பினும் இதைப்பற்றிச்சிற்சில விஷயங்களை நாம் எல்லோரும் அறிந்துகொண்டிருக்கிறோம். அவைகளை முன்பு எடுத்துக்கூறி, நமக்கு ஸாதாரணமாகத் தெரியாத அற்புத விஷயங்களைப் பின்னர் எடுத்துக் கூறுவோம்.

தண்ணீர் திரவ வஸ்து. அது குவிந்து மணல் போல நிற்கமாட்டாது. எப்பொழுதும் அதற்குப் பாத்திர ஸஹாயம் வேண்டும். இல்லாவிடில் அது ஓடிப் பரந்துவிடும். பாத்திரத்திலும் அசைவற்று நிற்குங்கால் தண்ணீர் கூடியவரையில் அதன் கீழ் பாகத்தில் சென்று அமர்ந்து, தன் மேல்பாகத்தை மட்டமாக வைத்துக்கொள்ளும். வாயுவைப்போல அது பாத்திரத்தை நிரப்பும் தன்மை உடையதல்ல


தண்ணீர், அதிருக்கும் பாத்திரத்தின் ரூபமாகும். அதற்கு ஸ்வந்தமாக ரூபமில்லை. தண்ணீரைச் சிறு உருண்டையான துளிகளாகப் பிரிக்கலாம்; அவைகளைச் சேர்த்தால் அவைகள் ஒன்றாகிவிடும் தன்மை உடையன. தண்ணீரை அதிகமாகக் காய்ச்சினால் நீர்வாயுவாகிவிடும். இது சற்றுக் குளிர்ச்சி அடைந்தால் புகைரூபமாகிய நீராவியாகிவிடும்; இன்னும் அதிக குளிர்ச்சியில் அகப்பட்டால் மறுபடி தண்ணீராக மாறிவிடும். தண்ணீர் அதிகக் குளிர்ச்சியில் வைக்கப்பட்டால் செய்போல உரைந்து பனிக்கட்டி ஆகிவிடும்; இப்பனிக்கட்டி உஷ்ணத்துடன் ஸம்பந்தப்பட்டால் மறுபடியும் தண்ணீர் ஆகிவிடும். தண்ணீர் அநேக வஸ்துக்களைக் கரையச்செய்யும் சக்தியை உடையது. கரைந்த வஸ்துக்களை வேறுகப்பிரிக்க வேண்டுமாகில், அவை கரைந்திருக்கும் தண்ணீரைக் காய்ச்சி நீர்வாயுவாக ஓடச்செய்யவேண்டும். இவைகளே நமக்குத் தண்ணீரைப்பற்றி ஸாதாரணமாகத் தெரிந்தவை. இனி நமக்கு ஸாதாரணமாகத் தெரியாத அற்புதங்களை எடுத்து விவரிப்போம்.

முதலாவது தண்ணீரை எவ்வளவு தான் அமுக்கிய போதிலும் வாயுவைப்போல அளவில் குறையும்படி செய்யமுடியாது. இதற்குச் சுருங்காமை என்று பெயர். அரைப்படி ஜலத்தை அமுக்கி ஒரு கால்படியாக்க முடியாது. அமுக்கியதனால் அளவு குறையாமல் போனால் நமது அமுக்கும் பலம் என்னமாகப்போகிறது என்ற சங்கைபிறக்கும். இதற்கு ஓர் சோதனைசெய்து பார்ப்போம். ஓர்சிறிய ரப்பர் பந்தை எடுத்து அதில் சிறு துளைகள் 10-அல்லது 15-ஐ எல்லாப்பக்கங்களிலும் விடுவோம். பின்னர் ஓர் கட்டைவிரலால் மூடக்கூடிய பெரியதுளை ஒன்றும் அதில் விடுவோம். இந்தப்பந்தைத் தண்ணீருள் போட்டுக் கசக்கினால் அதிலுள்ள ஸஹஜவாயுவெல்லாம் குமிழிகளாக வெளிவரும். பின்னர் கையை விட்டால் அது நிறையத் தண்ணீர் ஏறிவிடும். இந்தப்பந்தை வெளியில் எடுத்து அகன்றதுளையை கட்டைவிரலால் மூடிக்கொண்டு அழுத்துவோம். உடனே எல்லாச் சிறுதுளைகள் வழியாகவும் தண்ணீர் நேராகப்பீரிட்டு எழும். இதனால் தண்ணீரை அழுத்தினால் அந்த அழுத்தம் அதனுள் எல்லாப் பாகத்திலும் பரவிசென்று, தாக்கும் இடங்களில் எல்லாம் அழுத்தத்தை உண்டாக்குகின்றதே ஒழியத் தண்ணீர் சுருங்கி அளவில் ஒருக்காலும் குறைவதில்லை என்பது வெளியாகும். ஆகவே ஓட்டைகள் இல்லாப் பாத்திரத்தில் தண்ணீரைவிட்டுப் பலமாக அழுத்தினால் பாத்திரத்தின் பக்கங்கள் எல்லாம் அழுத்தப்படுகின்றன. ஆகவே பாத்திரம் பலமானதாக இருப்பின் இதைத்தாங்கும். இல்லாவிடில் உடைந்துபோகத் தண்ணீர் வெளியில் ஓடிவருமே ஒழியத் தண்ணீர் ஒரு நாளும் அளவில் சுருங்காது. வேறொரு விஷயமும் முற்கூறிய சோதனையிலிருந்து வெளியாகின்றது. தண்ணீரை ஒரு பாகத்தில் அழுத்தினால் அந்த அழுத்தத்தை அது எல்லாப் பக்கங்களை நோக்கிக் கொண்டுபோகும் திறனுடையது என்பதே. இந்தச் சக்திக்கு அழுத்த மாற்றம் என்று பெயர். இது தண்ணீரின் சுருங்காமையால் உண்டாவதே ஒழிய வேறல்ல.

இரண்டாவது அற்புதகுணம் தண்ணீர் அசைவற்றிருக்குங்கால் அதன் மேல்பாகம் மட்டமாக இருப்பதே. ஒரு பாத்திரத்திலிருக்குங்கால் மாத்திரம் தான் தண்ணீர் மேல்பாகம் மட்டமாக இருக்கும் என்று எண்ணவேண்டாம். பெய்குழல்போன்ற வாய் அகன்ற பாத்திரம், சிறு நேரான நீண்டகுழாய், பாம்பு போன்றவளைந்த குழாய், வாய் குறுகி அடி அகன்ற பாத்திரம், இன்னும் இவைபோன்ற வேறு அநேக பாத்திரங்கள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். இவைகளின் அடிப்பாகங்கள் எல்லாம் ஒரேகுழாயால் ஓட்டை கொஞ்சமேனும் இன்றிச் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் வைத்துக்கொள்ளுவோம். இவைகளுள் போதுமான தண்ணீர்விட்டு அது அசைவற்றிருக்கும்படி செய்வோம். அப்பொழுது ஒவ்வொரு வித பாத்திரத்திலும் தண்ணீரின் மேல் பாகத்தை பார்த்தால் எல்லாம் ஒரேமட்டத்தில் காணப்படும். இந்தப் பாத்திரங்களை எப்படிச் சாய்ப்பினும் உயர்ந்த பாத்திரத்தில் தண்ணீர் தணிந்தும், தணிந்ததில் தண்ணீர் ஏறியும்விட, முடிவில் அசைவற்று நிற்குங்கால் எல்லா மேல் பாகங்களும் ஒரே மட்டத்திற்கு வந்து விடுகின்றன. ஆகவே குழாய் மூலமாக ஸம்பந்தம் உடைய அநேகவித பாத்திரங்களுள் தண்ணீரை விட்டால் அது அசைவற்று நிற்குங்கால், எல்லாப் பாத்திரங்களில் உள்ள மேல் பாகங்களும் ஒரே மட்டத்தில் வந்து நிற்கும். இதற்கு ஸாதாரண உதாரணம், கிட்டில், கண்டி முதலியவைகளில் உள்ள நீர்மட்டம் அவைகளின் மூக்குக்களில் உள்ள நீர்மட்டத்துடன் ஒன்றாக இருப்பதே.


முற்கூறிய சோதனையை வேறுவிதமாகச் செய்வோம். ஒரேகுழாயால் சேர்க்கப்பட்டுள்ள் அநேக பாத்திரங்களுள் சிறுகுழாயை ஓர் சடையால் நன்றாக மூடிவிட்டு அவைகளுள் தண்ணீரைவிடுவோம். மேலும் அந்தக்குழாய் மற்றைப் பாத்திரங்களை விட மிகத் தாழ்ந்ததாயும் நேராகவளைக்கப்பட்டதாயும் இருக்கட்டும். இப்பொழுது தண்ணீர் அடைக்கப்பட்ட பாத்திரம் தவிர எல்லாப் பாத்திரங்களுள்ளும் ஏறும். அடைக்கப்பட்ட பாத்திரத்துள் அடைபட்டிருக்கும் ஸஹஜவாயு தண்ணீரை உள்ளேறவிடமாட்டாது. இவ்வாறு பாத்திரங்கள் நிறையத் தண்ணீர் விட்டுவிட்டுத் தண்ணீர் அசைவற்று நின்றதும், அதன் மேல்பாகங்கள் ஒரே மட்டமாக இருப்பதையும் பார்த்துவிட்டு மெதுவாகச் சடையை எடுப்போம். உடனே தண்ணீர் அசையத்தொடங்கி சிற தாழ்ந்தகுழையை நோக்கி ஓடி அதன்வழியாக வெளியேவிழுகின்றது. எல்லாப் பாத்திரத்திலும் தண்ணீர் இறங்கிக்கொண்டே வருகின்றது. அவைகளின் மட்டம் சிறுகுழாய் மட்டம் வரும்வரையில் அசைந்து பின்னர் நிலைபெறுகின்றன. இதனால் குழாயால் சேர்க்கப்பட்டுள்ள அநேக பாத்திரங்களில் நீர்மேல்பாகம் மேலான விடத்திலிருந்து தாழ்ந்த விடத்திற்குத் தண்ணீர் ஓடும் சக்தியை உடையது. தண்ணீர் எக்காலத்திலும் தன்மட்டத்திற்குமேல் ஓடிச்செல்லாது என்பது விளங்கும். தண்ணீருக்கு உள்ள இந்தச் சக்தியை அனுஸரித்துத்தான் பெரிய பட்டணங்களில் அவைகளை விட உயர்ந்த மேல்பாகங்களை உடையஏரிகளிலிருந்து குழாய்கள்மூலமாகத் தண்ணீரைக் கொண்டுவருகிறார்கள். ஏரிமேல்பாகத்தை விடத் தாழ்ந்த பாகங்களில் இம்மாதிரிக் குழாய்களால் வரும் தண்ணீர் வேகமாக வந்துகொண்டும், அந்தப் பாகத்திற்கு அருகாமையில் வரவர வேகம் குறைந்து வந்துகொண்டும், அதைவிட மேலான பாகங்களில் தண்ணீரே வராமலும் இருக்கின்றன. இந்தக் குணத்திற்கு மட்டமாகல் என்று பெயர்.

இனித் தண்ணீரின் மூன்றாவது அற்புத குணத்தை எடுத்து விவரிப்போம். தண்ணீர் கனம் உடைய வஸ்து. ஆகவே அதன் உள் செல்லச்செல்ல அதன் கனத்தால் வரவர பாரம் அதிகரிக்கும். இதைச் சோதனை மூலமாகவும் காணலாம். ஓர் நீண்ட குழாயை எடுத்து அந்த ஒருபாகம் மிக நீளமாயும்,




மற்றைய பாகம் குறுகலாயும் இருக்கும்படி வளைப்போம். பின்னர் அதனுள் போதுமான பாதரஸத்தை விடுவோம். பாதரஸத்தின் மேல் பாகங்கள் இரண்டும் ஒரே மட்டத்தில் காணப்படும். நீண்ட பாகத்தைப் பிடித்துக்கொண்டு இதை மெதுவாகத் தண்ணீர் நிறைந்த உயர்ந்த கண்ணாடிப் பாத்திரத்துள் விடுவோம். கீழே போகப் போகக் குறுகல் பாகத்தில் பாதரஸ மேல் பாகம் வரவர அதிகமாகத் தாழ்ந்து கொண்டும் நீண்டபாகத்தில் பாதரஸ மேல் பாகம் உயர்ந்துகொண்டும் வரும். இதனால் தண்ணீருள் கீழே போகப்போக அழுத்தம் அதிகரிக்கிறது என்பது விளங்கும். இதற்குக் கீழ்நோக்க அழுத்தம் என்று பெயர்.

இவ்வாறு தண்ணீருள் கீழ்நோக்க அழுத்தம் அதன் கனத்தாலேயே இயற்கையால் அமைந்திருப்பின், தண்ணீரது அழுத்தமாற்றம் என்ற சக்தியால் அவ்விடத்திலேயேஸமமான எல்லாவித அழுத்தமும் இருத்தல் வேண்டும். இவைகளைச் சோதனைகள் மூலமாக வெளிப்படுத்துவோம்,



முதலில் தண்ணீரில் உள்ள மேல்நோக்க அழுத்தத்தைப்பற்றி எடுத்துக் கொள்ளுவோம். ஓர் சாண் குழாயை எடுத்துக்கொண்டு, அதன்வாயை மூடத்தக்க இலேசான வட்டத்தட்டைத் தயார் செய்து, அதன் மத்தியிலிருந்து நீண்டகயிறு கட்டி விடுவோம். இப்பொழுது அந்தத் தட்டால் குழாயை மூடி கயிற்றை அதனுள்ளாகவிட்டு மற்றைவாயின் வழியாக வெளிவரும்படி செய்து பிடித்துக்கொள்ளுவோம். தட்டுகீழேநிற்கும்படி குழாயை மேல்கீழாகப் பிடித்துக்கொண்டு சற்றுக்கயிற்றைவிடுவோம். அடித்தட்டு வேறாக விழுந்துவிடத் தொடங்குகிறது. மறுபடியும் தட்டை சேர்த்துப் பிடித்துக்கொண்டு குழாயைநேராக ஓர் கண்ணாடிப்பாத்திரத்திலுள்ள தண்ணீருள் ஆழமாக அழுத்திக் கயிற்றை விட்டுப் பார்ப்போம். தட்டு விழுவதே இல்லை. இதனால் தண்ணீருள் மேல்நோக்க அழுத்தம் இருக்கின்றதுஎன்பது வெளியாகும். இதன் அளவைக்காண வர்ணத் தண்ணீரைக் குழாயுள் விடுவோம். வர்ணத்தண்ணீர் மேல் பாகம் வெளித்தண்ணீரின் மேல்பாகத்தோடு ஒரேமட்டமாக வந்த உடன் அடித்தட்டு விழத்தொடங்குகிறது. இதனால் தட்டின்மேல் வெளிநீர் மேல்பாகம்வரையில் நிற்கக்கூடிய தண்ணீரின் கனம் எவ்வளவோ அவ்வளவுதான் தட்டில் மேல் தாக்கும் மேல்நோக்க அழுத்தத்தின் அளவும் என்பது விளங்கும். ஆனால் இந்த அளவுதான் தட்டின்மேல் தாக்கும் கீழ்நோக்க அழுத்தமும். ஆதலால் தண்ணீருள் ஒவ்வொரு பரப்பிலும் மேல்நோக்க அழுத்தம் இருக்கின்றது. அது அதன்மேல் உள்ள கீழ்நோக்க அழுத்த அளவிற்கு ஸமம் என்பது இச்சோதனையால் வெளியாகின்றது.



இனிப் பக்க அழுத்தங்களை எடுத்துக்கொள்ளுவோம். ஓர் உயர்ந்த பாத்திரத்தை எடுத்து அதன் பக்கத்தில் நேராக ஒன்றன்கீழ் ஒன்றாக ஐந்து துளைகள்விட்டு அவைகளைக் கண்ணாடிக்குழாய் ஏற்றப்பட்ட சடையால் அடைத்து, அக்கண்ணாடிக்குழாய்களை ரப்பர்குழாய், அடைப்பு, மூலமாக அடைக்கவும் திறக்கவும் வேண்டிய ஏற்பாடு செய்வோம். இந்தப் பாத்திரம் நிறையத் தண்ணீரைவிட்டு ஐந்துகுழாயையும் திறந்து விடுவோம். உடனே கீழ் குழாய் மூலமாகத் தண்ணீர் அதிவேகத்துடனும், மேலே போகப்போகத் தண்ணீர் குறைந்த வேகத்துடனும் வருவதைக் காணலாம். மேலும் மேல் குழாயில் வரும் தண்ணீர் உள்ளிருக்கும் தண்ணீர் மேல்பாகம் இறங்கி வரவர வேகம் குறைந்துவந்து முடிவில் நின்றுவிடுவதையும் காணலாம். இதனால் தண்ணீருள் பக்க அழுத்தங்கள் இருக்கின்றன என்பதும் அவை ஆழத்திற்கேற்ப கீழ்நோக்க அழுத்தத்தைப் போல மாறுகின்றன என்பதும் வெளியாகும்.

ஆகவே 'தண்ணீருள் ஓர் புள்ளியை எடுத்துக் கொண்டால் அதன்மேல் எல்லாப் பக்கங்களிலும் அழுத்தம் இருக்கின்றன. இவை அந்தப் புள்ளி

யின்மேலுள்ள தண்ணீரின் கனத்தால் உண்டாகும் கீழ் நோக்க அழுத்தத்தால் உண்டாகித் தண்ணீரின் அழுத்தமற்ற சக்தியால் ஸமமாக எல்லாப் பக்கங்களிலும் நோக்கும் அழுத்தமாக மாற்றப்படுகின்றன. அந்தப் புள்ளியில் மேல்நோக்க அழுத்தம், பக்க அழுத்தங்கள் காணப்படுகின்றன. இவைகள் ஒவ்வொன்றும் அந்தப் புள்ளியின் மேலுள்ள கீழ்நோக்க அழுத்தத்திற்கு ஸமம்' என்பவை விளங்கும். இந்த உள் அழுத்தம் தண்ணீரின் மூன்றாவது அற்புதகுணம்.

நான்காவது அற்புதகுணம் தண்ணீருக்கு உண்டு. இது மட்டமாகல் என்ற குணத்திற்கு விரோதமாக இருக்கும். இதை உணரப் பின்வரும் சோதனையைச் செய்வோம். ஒருகண்ணாடி பாத்திரத்திலுள்ள தண்ணீரில் அநேகவித போலுள்ள கண்ணாடிக் குழாய்களை விடுவோம். உடனே போல் குறைந்த குழாயுள் தண்ணீர் வெளிமட்டத்தைவிட அதிக உயர்ந்தும், போல் அதிகமாக, உள் தண்ணீர் வெளிமட்டத்தைவிட கொஞ்சம் உயர்ந்தும் காணப்படும். மயிரிழைப் போலுடைய குழாயுள் தண்ணீர் வெளிமட்டத்தைவிட அதிக உயரம் கிளம்பிநிற்கும். இதற்குக்காரணம் பின்வருமாறு. தண்ணீர் கண்ணாடியில் ஒட்டும் தன்மை உடையது. ஆதலால் குழாயின் போல் குறையக்குறைய அதன் பக்கங்கள் கிட்ட நெருங்கிவிடுகின்றன. உள்ளிருக்கும் தண்ணீரும் குறைந்து விடுகின்றது. ஆகவே ஒட்டும் சக்தி தண்ணீரின் கனத்தைவிட மிக அதிகமாகிவிடுகின்றது. சிறுபோலுடைய குழாயுள் ஒட்டும்சக்தி தண்ணீர் கனத்தைவிட அதிகப்பட தண்ணீரை மேல் தூக்கி நிறுத்திவிடுகிறது. மயிரிழைக்குழாயுள்ளோ இந்த ஒட்டும் சக்தி மிக அதிகமாகத் தண்ணீர் மிக உயர்ந்து நிற்கின்றது. போல் அதிகமான குழாயுள் பக்கங்கள் விலகியும் உள் தண்ணீர் அதிகமாயும இருப்பதால் ஒட்டும் சக்தி தண்ணீர் கனத்தைவிட அதிக ஏற்றமுடையதாக இராமல்போக, தண்ணீர் அதிக உயரம் ஏறுவதில்லை. இந்த ஏற்றம் குழாயின் போல் அதிகமாகக் குறைந்தவிடத்து நன்றாகக் காணப்படுவதால் இந்தக்குணத்திற்குத் தந்துஏற்றம் என்று பெயர்.

இதேமாதிரி தந்து இறக்கமும் தண்ணீர் விஷயத்தில் காணலாம். இது ஒட்டும் சக்தியே இல்லாததால் வருவது. ஓர் கண்ணாடிக்குழாயைத் தேங்காய் எண்ணெயில் தோய்த்து நன்றாக உதறிவிட்டுத் தண்ணீரில் விட்டால் உள் தண்ணீர் வெளிமட்டத்தைவிட சற்றுத் தாழ்ந்து நிற்கும். எண்ணெய்க்கும் தண்ணீருக்கும் ஒட்டும் சக்தி இல்லை. தண்ணீர் தனது கனத்தால் எண்ணெயோடு ஸம்பந்தப்பட்டவிடங்களில் நழுவிவிடுகின்றது. இந்த நழுவும் சக்தியால் தண்ணீர் அமுக்கப்படுகின்றது. குழாயின் போல் குறைந்தவிடத்து, நழுவும் சக்தி, குறைந்திருக்கும் தண்ணீரின் மேல்நோக்க அழுத்தத்தைவிட அதிகரிக்க உள் தண்ணீர் வெளிமட்டத்தைவிடக் கீழே அமுக்கப்படுகின்றது. குழாயின் போல் அதிகமாக இந்த நழுவும்சக்தி உள் தண்ணீரின் மேல் நோக்க அழுத்தத்தைவிட கொஞ்சம் அதிகமாக இருக்கின்றது. இதனால் உள் தண்ணீர் கொஞ்சம் தான் அமுக்கப்படுகின்றது. இந்த தாழ்வு அல்லது இறக்கமும் குழாய்களின் போல் அதிகக் குறைந்தவிடத்தே நன்றாகத் தெரிவதால் இந்தக் குணத்திற்குத் தந்து இறக்கம் என்று பெயர். வெறும் கண்ணாடிக் குழாயிலேயே தந்து இறக்கத்தைக் காணலாம். வெறும் கண்ணாடிக் குழாயை அதனோடு ஒட்டும் சக்தி இன்றி நழுவு சக்தி மிகுந்த பாதரஸத்தில் விடவேண்டியது. உடனே உள் பாதரஸம் வெளிமட்டத்தைவிடத் தாழ்ந்திருப்பதைக்காணலாம்.

இவ்விருகுணத்திற்கும் பொதுவாகத் தந்துகுணம் என்று பெயர். இதுவே நான்காவது குணம். கண்ணாடிப் பாத்திரத்திற்கும் தண்ணீருக்கு ஒட்டும் சக்தி இருத்தலால் ஸாதாரணமாக நீர் மேல்பாகம் பாத்திரத்தின் அருகில் சற்று உயர்ந்தும் மத்தியில் தணிந்து மட்டமாகவும் காணப்படும். அதாவது கண்ணாடிப் பாத்திரத்திலுள்ள தண்ணீரின் மேல்பாகம் (தந்து ஏற்றத்தால்) மேலிருந்து நோக்கில் சற்றுக் குழிவாக இருக்கும். கண்ணாடிப்பாத்திரத்தில் பாதரஸத்தைவிட்டால் நழுவும் சக்தியால் அதன்மேல் பாகம்பாத்திரத்தின் அருகில் தணிந்தும்மத்தியில் உயர்ந்து மட்டமாகவும் காணப்படும். அதாவது கண்ணாடிப் பாத்திரத்தில் உள்ள பாதரஸத்தின் மேல் பாகம் (தந்து இறக்கத்தால்) மேலிருந்து நோக்கில் திரண்டு இருக்கும். சாம்பல் நுனியை தண்ணீரில் நனைத்தால் அதில் ஈரம் ஏறுவது, ஒத்துகாகிதத்தில் மை ஏறுவது, மணல்குவியலைச் சுற்றிவிட்ட ஜலம் முழுவதையும் நனைப்பது, விளக்குத்திரியில் எண்ணெய் ஏறுவது, செடிகள் அடியில்விட்ட தண்ணீர் அவைகள் உச்சிவரை ஏறுவது, ஆகிய இவைகள் எல்லாம் தந்து வற்றகுணத்தால் உண்டாகும் தோற்றங்களே.

இங்குத் தண்ணீரின் நான்குகுணங்கள் எடுத்து விவரிக்கப்பட்டன. அவையாவன, சுருங்காமை (அழுத்தமாற்றம்), மட்டமாகல், உள் அழுத்தம், தந்துகுணம் ஆகிய இவைகளே. ஐந்தாவது முக்கிய குணம் ஒன்றிருக்கிறது. அதற்குத் தாங்குகுணம் என்று பெயர். இத்துடன் அநேக அற்புத விஷயங்கள் ஸம்பந்தப்பட்டிருப்பதால் இதை வேறாக எடுத்து அடுத்த ஸஞ்சிகையில் விவரிப்போம்.

# இந்துலேகை

(264-ம் பக்கத் தொடர்ச்சி)

## 3-ம் அத்தியாயம்

### கோபத்தினுற் செய்த சபதம்

பஞ்சுமீனனுக்கும் மாதவனுக்கும் நடந்த வாக்கு வாதத்தைப்பற்றி நாம் முதல் அத்தியாயத்திற் கூறியிருப்பது எல்லோருக்கும் ஞாபகமிருக்கும். அச்சண்டையின் காரணமாக பஞ்சுமீனனுக்குக் கோபம் மேலிட்டது. அவன் கண்களினின்றும் நெருப்புப்பொறி பறந்தன. அவன் சுபாவமாக அற்பத்திற்கெல்லாஞ் சினங்கொள்பவன். அப்பேர்ப் பட்டவனுக்கு இப்போது கேட்பானேன்? பேய்க்குக் கள்வார்த்தாப்போலிருந்தது. அவன் புத்தி தடுமாற்றங்கொண்டது. லக்ஷிமி கடாக்ஷம் பூர்ணமாய்ப் பொருந்திய செம்பேழியத்துப் பூவல்லி என்னும் வீட்டிற்கு அவன் எஜமானனுயிருந்தான். அவனுக்கு முன் அந்த எஜமான ஸ்தானத்திலிருந்தவர்களில் இரண்டுபேர் ஒரு சுதேச மன்னனின் கீழ்த் திவான் (மந்திரி) உத்தியோகம் பார்த்துவந்தவர்கள். பூர்வகாலந்தொட்டே இந்தப் பூவல்லிவீட்டார் ஐசுவரியத்திலுஞ் சிறப்பிலுஞ் செல்வாக்கிலுஞ் சிறந்தவர்களா யிருந்துவந்தனர். இந்தவம்சத்திற் பிறந்தவர்களின் சாமர்த்தியத்தினுலும் அதிர்ஷ்டத்தினுலும் இவ்வீட்டினது செல்வமுஞ் செல்வாக்கும் தினேதினே விருத்தியாயிற்று. ஆனுல் சிறிதுகாலமாக ஏதோ கொஞ்சம் அதிர்ஷ்டக்குறைவினுல் க்ஷீணதசையடைய வாரம்பித்ததெனினும் இன்னும் இது, தன் பூர்வ அந்தஸ்த்தினின்றும் அதிகமாய்த் தாழ்ந்துவிடவில்லை. நமது கதை யாரம்பிக்குங் காலத்தில் வருஷத்திற்கு நிலங்களிலிருந்து தானிய வகையில் 28,000-படியும் தோட்டந் துரவுகளிலிருந்து ரொக்கத்தில் ரூபா 10,000-மும் வருமான மிருந்தது. குடும்பம் பெரிதானதாலும் செலவும் அதற்குத் தக்கபடி அதிகமா யிருந்ததினுலும் வருஷவாரியில் செலவுபோக மீந்தது ரூபா 5,000-தான். பஞ்சுமீனன் ஒரு உலோபி. எச்சிற்கையால் காக்கையோட்டமாட்டான். ஆயினும் அவன் ஜெபம் இங்குச் சாயவில்லை. ஏனெனில் தர்மசிந்தையுந் தயாளகுணமும் ஒருங்கே அமையப் பெற்ற இவனது முன்னேர்கள், பிராமணர்களுக்குத் தினம் இரண்டு வேளைகளிலும் அன்னமளிக்கும் இரண்டு சத்திரங்களையும், சகல உற்சவாதிகளும் அதிக வைபவத்துடன் நடைபெறும் லக்ஷிமி கோவிலொன்றையுங் கட்டி வைத்துவிட்டுப் போயினர். இந்தத் தர்மங்களை நிறுத்த இவனுக்கு யாதொரு அதிகாரமுங் கிடையாது. இதுவுமல்லாமல், பெரியோர் காலந்தொட்டே குடும்பத்தார் வெகு டாம்பீகமானகுடித்தனஞ் செய்து வந்தனர். ஸ்திரீகள் எப்போதும் விலையுயர்ந்த பட்டாடைகளையே உடுத்தனர். ஸ்நானஞ் செய்வதற்கு எண்ணெய் முதலியன எப்போதுங் குறைக்கப்படாமல் அளவிற்கு மிஞ்சியே வாங்கப்பட்டு வந்தன. வீட்டில் ஸதா ஸர்வகாலமுஞ் சேவகர்கள் பலர் உழைத்து வந்தனர். இவற்றிலெல்லாஞ் செலவை இழுத்துப்பிடிக்க அவனுற் சாத்தியப்படவில்லை. ஆனபோதிலும், செலவு அதிகமாய்ப் பிடித்த வருஷத்தில் ரூ 5,000-த்திலிருந்து எடுப்பது அவனுக்கு எட்டிக்காயாயிருந்தது. இவ்வளவு உலோபத்தனத்திலும், அவன் தன் மனைவியாகிய குனி குட்டியம்மாளுக்கும் தன் குமாரியான லக்ஷிமி குட்டியம்மாளுக்கும் ரூ. 30,000-பெறும்படியான சொத்தை எழுதிவைத்தான். இந்த லக்ஷிமி குட்டியம்மாள் தான் இந்துலேகையின் தாயார். அவன் மனைவியும், அவன் சென்னையினின்று வந்தபோது அவனது குமாரனுகிய கோவிந்த குட்டிமீனனும், இந்துலேகையும் அவளது தாயும் எல்லாரும் பஞ்சுமீனனுடன் பூவரங்கிலிருக்கும் அவனது வீட்டில்வசித்துவந்தனர். அவனுக்கு இரண்டு மூன்று வீடுகளிருந்தன. எல்லாம் இரண்டு மாடிகளையுடையன. இந்த இருப்பிடத்திற்கருகில்தான் ஸ்நானலயம், குளம், தேவாலயம், பிராமணர்களுக்கான அன்னசத்திரம் முதலியவைகளிருந்தன. இப்பூவரங்கு வீட்டிற்கு இருநூறு, முந்நூறு கஜங்களுக்கப்பால்தானிருந்தது பூவல்லி வீடும். ஆனுல் இரண்டிற்குஞ் சேர்த்து ஒரே மதில்சுவர்தான் போடப்பட்டிருந்தது.

நமது கதை தொடங்குங் காலத்தில் பஞ்சுமீனனுக்கு வயது எழுபதாயிற்று. அவனது சிற்றப்பன்மார்களில் ஒருவர் திவான் உத்தியோகத்திலிருந்தபோது, அவன் ஒரு தாசீல்தாரனுயிருந்தான். இப்போது அவன் வேலையைவிட்டு முப்பது வருஷகாலமாய்விட்டது. அவன் கண்ணுக்கழகாயிருப்பான். தேகம் பெருமனுயுங் குள்ளமாயும் அமையப்

பெற்றவன். தலையோ வழுக்குத்தலை. வாயில் மேல்வரிசையில் மூன்று பற்களும் கீழ்வரிசையில் ஐந்து பற்களுந்தான் போயிருந்தன. அவன் இடுப்பில் தங்கபெல்டு போட்டிருந்தான். தங்கத்திற்கட்டப்பட்ட உத்திராக்ஷமாலையொன்று அவன் கழுத்தில் தொங்கிற்று. தலையில் ஒரு கம்பளிக்குல்லாவுங் கையில் வெள்ளிப்பிடிபோட்ட தடியொன்றுமிருந்தன. அவன் தாசில் உத்தியோகம் பார்த்தானென்று நாம் கூறியிருப்பதைக்கொண்டு அவனுக்கு ஆங்கிலபாஷை தெரியுமென்று நமது நண்பர்கள் அபிப்பிராயப்படலாகாது. ஆங்கிலத்திலொரு அக்ஷரங்கூட அவனுக்குத் தெரியாது. அவன் உண்மையில் தயை, தாக்ஷிணியம், அன்பு முதலிய நற்குணங்களை யுடையவனாயினும், அவனுக்குங் கோபத்திற்கும் வெகு சிநேகம். நண்பர்கள் ஒருவரைவிட்டொருவர் பிரிந்திருப்பது துர்லபம்; இதனுடன் வயதுமாய்விட்டபடியால் கேட்கவேண்டுமோ? யாரைக் கண்டாலும் எரிந்து விழுவான். எப்போது பார்த்தாலும் முகத்தில் எள்ளுங் கொள்ளும் வெடிக்கும். சாந்தமென்பது ஒருவேளையுங் கிடையாது. இவைகளுடன் கிழநச்சுங் கூடச்சேர்ந்தது. அவன் சிரித்த முகத்துடன் பேசுவது இந்துலேகை யொருவளுடன்தான். இதற்குக் காரணம் உயிரோடிருக்கும்போது பேஷ்கார் உத்தியோகம் பார்த்துவந்தத் தன் குமாரனாகிய கிருஷ்ண மீனனிடமிருந்த அன்போ அல்லது இந்துலேகையின் உத்தம குணங்களோ என்பது புலப்படவில்லை. இவைகளிலேதாவதொன்று தான் இருக்கவேண்டும். பஞ்சுமீனனுக்கு அவனுடைய முன்கோபம் அவனுக்கே நன்றாய்த் தெரியுமாதலால், இந்துலேகையின் முன்னிலையில் எங்கே தனக்குக் கோபம் வந்துவிடப்போகிறதோவெனப் பயந்து அவளைப் பார்க்க அவன் அவளுடைய வீட்டிற்குப் போவதில்லை. ஆனபோதிலும் தினத்திற்குக் குறைந்தபக்ஷம் இரண்டு மூன்று தடவை யவளைப்பற்றி விசாரித்துக் கொண்டே யிருப்பான். இந்துலேகையைத் தவிரப் பூவரங்கிலாகட்டும், பூவல்லியிலாகட்டும் வசிப்பவர்களில் ஒருவராவது அவனுடைய கோபத்திற்காளாகாமல் ஒரு தினமாவது கழிப்பதில்லை. மாதவனுக்கும் அவனுக்கும் வாக்குவாதம் நடந்தபோது காலை சுமார் 6-மணி இருக்கும். இந்தச் சச்சரவு முடிந்தவுடன் பஞ்சுமீனன் கோபாக்கிராந்தனாய்ப் பூவரங்கிலிருக்குந் தனது வீட்டிற்குப் போய்த் தாழ்வாரத்தில் தன் குமாரத்தி லக்ஷிமிகுட்டி மாத்திரமிருப்பதைக்கண்டு "அந்த மூட ஈன ஜாதிப்பயலைப் பார்த்தாயா? சண்டாளன்! நீசன்! ஒரு காசுக்கு முதவாத தாதலை! அவன் என்னிடம் எவ்வளவு அவமரியாதையாய்ப் பேசினான் தெரியுமா? என்னைக் கொஞ்சங்கூட லக்ஷியம் பண்ணாமற் பேசினான் துஷ்டன்." என்று உளறினான்.

"யார்?" என்று லக்ஷிமிகுட்டி கேட்டாள்.

"யார்? மாதவன் தான்."

"என்ன, மாதவனா?" என்றாள் லக்ஷிமி.

"ஆம், மாதவனென்று நான் முன்னமே சொல்லவில்லையா?" என்று பதைபதைத்து விடைகூறினான் பஞ்சுமீனன்.

பிறகு மாதவன் கூறினவற்றைக்கூடக் கொஞ்சம் சுவயமாய்க் கலந்து ஜாஸ்தியாக்கிச் சொன்னான். அவன் இதைத் தன் மகளிடஞ் சொல்லிக்கொண்டிருந்தபோது, கேசவன் நம்பூதிரி ஓர் அறையிலிருந்து வெளிவந்து எல்லாவற்றையுங் கேட்டுக்கொண்டிருந்தான். பஞ்சுமீனன் திரும்பி யவளைப்பார்த்து "இக்கீழ்மகனுக்கு என்னுயிருள்ளமட்டும் நான் இந்துலேகையை மணம் புரிவிப்பதில்லை. என்ன, லக்ஷிமிகுட்டி, மௌனஞ் சாதிக்கிறாய்?"

"நான் என்ன சொல்வது?" என்றாள் லக்ஷிமிகுட்டி.

"இன்னும் மாதவன்மீது நீ அவ்வளவு அன்பு பாராட்டுகிறாயா? சொல், என்ன, அவனது கட்டழகில் நீ மயங்கிவிட்டனைபோலும். இல்லாவிட்டால், நீ இவ்வாறு வாய்புதைத்து நிற்பதின் அருத்தமென்ன? நீங்களெல்லாரும் அற்பபுத்தியுடையவர்கள். பாரபுத்தி யென்பதே லவலேசமுங் கிடையாது. உங்கள் தலைகளையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து ஒரே நொறுக்காய் நொறுக்கிவிட்டாலும் என் ஆத்திரந் தீராது." என்று கூறினான் பஞ்சுமீனன்.

"மாதவன் எப்படிப் போனாலெனக்கென்ன? இந்த விஷயமாய் நான் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை.

ஆனால், நான் சொல்லவேண்டியது கொஞ்சமிருக்கிறது. நான் வழிபடும் பகவதிதேவி சாக்ஷியாய் நான் இந்துலேகையை மாதவனுக்கு மணம் புரிவிப்பதில்லை. இது சத்தியம்."

இச்சபதஞ் செய்தானோ, இல்லையோ, உடனே

பஞ்சமீனனுக்குப் பூர்வஞானம் வந்துவிட்டது. தான் முன்பின் ஆராயாதுசெய்த சபதத்தைப்பற்றி நினைத்து நினைத்து அனலிட்ட மெழுகுபோல் மன முருகுவானாயினான். இந்துலேகையின் புத்தி சாதுரியத்தையும் அவள் மனதின் வலிமையையுந் தீரத்தையும் அவன் நன்றாய் அறிவான். மாதவனுக்கும் அவ்விளங்கொடிக்கும் பரஸ்பரம் உள்ளநேசமுமவனுக்குத் தெரியும். ஆதலால் தன் சபதம் நிறைவேறுமோ, நிறைவேறாதோ வெனப் பெரிதுங் கிலேசப்பட்டான். தன் வார்த்தை பொய்யானால்தான் மிகவும் அவமானப்படவேண்டியிருக்குமேயென்று பெரிதும் வருத்தமுற்றான். இவ்விதமான எண்ணங்களால் மனதைப் புண்படுத்திக்கொண்டு தாழ்வாரத்தில் ஒரு பலகையின்மீது உட்கார்ந்திருக்கும்போது, ஒருமணிநேரங் கழித்துத் திடீரென அவனுக்கு ஓர் எண்ணந் தோன்றிற்று. உடனே கேசவன் நம்பூதிரியை யழைத்துவரும்படி ஒரு ஆளையனுப்பினான்.

நம்பூதிரி வந்து பலகையின்மீது உட்கார்ந்தவுடன் பஞ்சமீனன் அவனருகிற் சென்று அவனது காதில் வெகு இரகசியமான சில வார்த்தைகளைச் சொன்னான், "என் அருமை நண்பா, அன்றைக்கு மூர்க்கிலத்த நம்பூதிரியைப்பற்றி என்னிடம் நீ பேசிக்கொண்டிருந்தாயே, அப்போது நான் இந்துலேகையைப்பற்றி அவன் கேள்விப்பட்டிருக்கிறானென்றும் அவளை மணம்புரிய அவன் அதிக ஆவல் கொண்டிருக்கிறானென்றுஞ் சொன்னதாக எனக்கு நினைவிருக்கிறது. அவன் கண்ணுக்கழகாயிருப்பானா? தெரியுமா உனக்கு?"

"அவன், அழகில் மன்மதனையும் பழிப்பவன். அவன் முகம் நல்ல தங்க வர்ணத்தையுடையது. இந்துலேகையின் முகத்தைக்காட்டிலும் எத்தனையோமடங்கு அதிக அழகு வாய்ந்ததென்றால் அவன் முகம், அதைப்பற்றித் திரும்பியுஞ் சொலலவேண்டுமா? நான் இதுவரையில் அத்தகைய சுந்தர புருஷனைக் கண்டதேயில்லை." என்று தன்னாலானவரையில் வஞ்சனையின்றிப் புளுகினான் கேசவன்.

"இந்துலேகை யவனைப்பார்த்தால் அவனிடங்காதல் கொள்வாளென்பது உனக்கு நிச்சயமா?" என்று கேட்டான் பஞ்சமீனன்.

கேசவ நம்பூதிரி பூணூலைக் கையிற் பிடித்துக்கொண்டு "நான் இந்த யக்யோபவீத சாக்ஷியாய்ச் சொல்லுகிறேன். அவனைக்கண்ட அத்தக்ஷணமே அவள் அவனை விவாகஞ் செய்துகொள்ள பேராவாக் கொள்வாளென்பதிற் யாதொரு ஐயமுமில்லை. வீண் வார்த்தையிலென்ன பிரயோசனம். அவனை நீர் நேரில் பார்த்தால் எல்லா சங்கதிகளும் காதலாமலகம்போல் வெளிச்சமாய்த் தெரியும்." என்றுவாய் கூசாமற் பதிலுரைத்தான் கேசவன்.

"அதற்கென்ன? அப்படியே வரவழைத்துவிடுகிறேன்."

"அவனை இங்குக் கொஞ்சகாலம் வரவழைக்க உன்னால் முடியுமா?" என்று ஆவலுடன் கேட்டான் பஞ்சமீனன்.

"அவன் இங்குவந்தால் இந்துலேகை மாதவன் மீது வைத்திருக்குங் காதலை யொழிப்பாளென்பது என்ன நிச்சயம்?" என்றான் பஞ்சமீனன்.

கேசவன் நம்பூதிரி மறுபடியும் பூணூலைக்கையிற் பிடித்துக்கொண்டு, "நான் பிராமணனாயிருப்பது உண்மையானால், அவள் மாதவனை மறந்து நம்பூதிரியை மணம் புரிவாளென்பதும் உண்மையே. எனக்கு இதிற் கிஞ்சித்தாயினுஞ் சந்தேகங்கிடையாது." என்றான் கேசவன்.

பஞ்சமீனன் ஆனந்தக்கடலில் மூழ்கினவனாய், "அப்படியானால் அவனை இங்கு வரும்படி எழுது. ஆனால் மூடத்தனமான தொன்றுமெழுதாதே, உனக்குத்தான் இந்துலேகையின் குணவிசயங்கள் நன்றாய்த் தெரியுமே. ஆகையால் ஜாக்கிரதையாய் எழுது. கடைசியில் நாமிருவரும் அவமானப்படாமலிருக்கும் விதமாய்க் காரியத்தை நடத்து. இங்கு வந்து இரண்டு மூன்று தினங்கள் தங்கியிருக்கும்படிக்கு நம்பூதிரிக்கெழுது." என்று குதூகலத்துடன் சொன்னான் பஞ்சமீனன்.

"உண்மையில், எல்லாவற்றிற்கும் ஈசனொருவனிருக்கிறான். இந்துலேகை அடையப்போகும் சுகத்திற்கோர் அளவில்லை. அவளது குடும்பம் நல்ல ஸ்திதியிலிருக்குமானால், எனக்கும் நல்லகாலந்தான். இதோ போய் உடனே எழுதுகிறேன்." என்றுரைத்தான் கேசவன்.

"பத்திரம், கடிதமெழுதுவதில் ஜாக்கிரதையாயிரு இந்துலேகைக்கு ஆங்கிலபாஷை முதலியவை நன்றாய்த் தெரியும். பிடித்த பிடியை விடாது அடம் பண்ணுவாள். அப்புறம் நம்முடைய ஜெபமொன்றுஞ்சாயாது. எல்லாம் நம்பூதிரியால் தான் ஆகவேண்டும். அவனுடைய நடவடிக்கைகளால் அவ

னேதான் இந்துலேகையின் மனதைத் திருப்பிக் கொள்ளவேண்டும். இதைத்தவிர வேறு வழி யொன்றையுங் காணேம்.'' என்றுன் பஞ்சுமீனன்.

"நம்பூதிரி அவளுடன் ஒரு மணிநேரம் பேசிய பின், இந்துலேகை யவன்மீது காதற்கொள்ளாள் என்பது நிஜமானல், கீழ்த்திசையிலுதிக்குஞ் சூரியன் மேற்றிசையி லுதிப்பானென்பதும் உண்மையே' என்றுன் கேசவன் நம்பூதிரி.

"அவ்வளவு தைரியமாய்ச்சொல்லுகிறுயே என்ன? நம்பூதிரி அவ்வளவு கட்டழகு உடையவனு?'' என ஆவலுடன் வினவினன் பஞ்சுமீனன்.

"இந்த விஷயத்திற் கிஞ்சித்தும் ஐயமில்லை. நான் இதோபோய் உடனே எழுதுகிறேன்" என்றுன் கேசவன் நம்பூதிரி.

"என்ன, நான் சொன்னது தெரிந்ததா? அதே மாதிரி செய்யவேண்டும்'' என்றுன் பஞ்சுமீனன்.

---

தள்ளக்கூடாத சங்கடத்துக்குத் துக்கப்பட்டுலாபமென்ன:—இதைத்தான் பெரியோர்கள் "தெய்வசங்கற்பம்'' என்பார்கள். மானிடர்களாகிய நம்மால் இதை அகற்றமுடியாது, தெய்வம் தான் செய்வதைச் செய்தே தீரும். மானிடர்களாகிய நம்மால் எது செய்யக்கூடுமோ அதைச் செய்துவிட்டு நாம் துக்கப்படாமலிருக்கவேண்டும். இனிமேல் இதிலிருப்பது ஈசன்செயல் என்று எல்லாவற்றையும் தெய்வத்தின் கையில் ஒப்பித்துவிட்டு நாம் துக்கப்படாமலிருக்கவேண்டும். சிறுவயதில் இதன் உண்மை நமக்கு அவ்வளவு செவ்வையாக விளங்கமாட்டாது. வயது செல்லச் செல்ல நமக்குத் தெய்வபக்தியும், தெய்வத்தின்கடாக்ஷமும் அதிகமாகவே, இதன் உண்மை விளங்கும். வீணுன ஏக்கத்துடன் விசாரமும் துக்கமுமடைந்து தீராத்துன்பத்தை யகற்றமுயலுவதைவிட எல்லாம் தெய்வசங்கற்பம் என்று தெய்வத்தின் மேல் பழியைப்போட்டு நமது துயரத்தைவிட்டு நீங்கிச் சுகமாக வாழ்வது எவ்வளவு மேன்மை? இதே விஷயத்தைத்தான் பகவத்கீதை முதலான கிரந்தங்கள் நாம் துயரப்படும்பொழுது நாம் ஈசுவரனையே துணையாக அடையவேண்டுமென்று முறையிடுகின்றன.

## சிறுவர்களுக்கான பக்கங்கள்

### CHILDREN'S PAGES

---

கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமா?—கரும்பு தின்னுவது மிகக் கடினம். அது பலமான கழியாக இருப்பதால் அது தின்னத்தின்னப் பல்வலி எடுக்கும். அஜாக்கிரதையாய்க் கணு முதலியவற்றைக் கடித்துவிடுவோமாகில் நமது பற்களிலிருந்து ரத்தம் வந்தாலும் வரும். இவ்வளவு கஷ்டமான வேலையாகிலும் அதைத் தின்றால் அதன் சாறு மிகத் தித்திப்பாயும் பசி தாக முதலியவற்றைச் சாந்தம் செய்வதாயும் இருக்கின்றது. மேலும் வாழை மரத்தை வெட்டிவரும் கத்திகூராகிவருவதுபோல்கரும்புதின்னப் பற்களில் உள்ள அழுக்குக்கள் எல்லாம் போய்ப் பற்குச்சி போட்டுப் பல் தேய்த்துவிட்டாற்போல சுத்தமாகிவிடும். கஷ்டமான வேலைகளை செய்து முடிப்பதற்கு ஜனங்கள் பொதுவாகக் கூலி கேட்பது வழக்கம். இதன்படி கரும்புதின்ன ஏன் கூலி கேட்பதில்லை? அந்த வேலை கஷ்டமான வேலையாயினும் அதைச் செய்வதினுலேயே செய்பவனுக்குத் தித்திப்பான ஆஹாரமும் பானமும் கிடைக்கிறது. ஆகையால் இதைச்செய்ய ஒருவரும் கூலி கேட்பதில்லை. இதுபோலவேதான் காற்றக்காலங்களில் குடை பிடிக்கும்பொழுதும், குடையை அக்காலங்களில் கையில்நிலை பெறும்படி பிடிப்பது மிகக் கஷ்டமாயினும், அது வெயில் அல்லது மழையிலிருந்து நம்மைக் காப்பாற்றுவதால் அந்தக் கஷ்டத்தைப் பாராட்டாது நாம் அதையும்பிடித்துப் போகிறோம்.

இதுபோலவேதான் ஸன்மார்க்கத்தில் பழகுவதிலும், சிற்றின்பங்கள் நிறைந்த இப்பாழுலகில் ஸன்மார்க்கத்தில் நிலைபெற்று நடப்பது மிகக்கடினம். 'நன்மை விதைத்தால் நன்மை விளையும்' என்ற பழமொழி ஒரே ஜன்மத்தில் பெரும்பாலும் உண்மையாகக் காணப்படுவதில்லை. அவனவன் கர்மானுஸாரம் அனேக ஜன்மங்களில்தான் அதன் உண்மை வெளியாகும். ஒரு ஜன்மத்தில் உள்ளவைகளை நோக்கில் ஸன்மார்க்கத்தில் நடப்பவர்களுக்கு இஹலோக ஸுகம் குறைவாகவும், துன்மார்க்கிகளுக்கு இது அதிகமாயும் காணப்படும். தருமபுத்திரர் ஸீதை முதலியவர்கள் பட்ட கஷ்டங்களையும் பின்னர் அவர்கள் மனம் நொந்து வாழ்நாட்களை முடித்

ததையும், துரியோதனுதிகள் இராவணன் முதலியோர் இருந்தவரையில் ஸுகமாக இருந்ததோடும், முடிவில் வீரராகப் போர்க்களத்தில் முன்வைத்த கால் பின்வைக்காது கீர்த்திபெற இறந்ததோடும் ஒப்பிட்டால் நாம் முற்கூறியதின் உண்மை நன்ருக வெளியாகும். இதனுல் ஸாதாரண ஜனங்களால் எளிதில் ஸன்மார்க்கத்தில் நிலைபெற முடியாது. ஸன்மார்க்கத்தில் நிலைபெற்று நடப்பது இவ்வளவு கடினமாயினும், அதில் சற்றுப் பழகினுல் அதனுல் நமது மனதிற்கு வரும் சாந்தம், விசாலம், ஸந்தோஷம் சற்று வெளியாகும். இம்மார்க்கத்தில் பழகுவதால் உண்டாகும் கஷ்டங்களுக்கு இவைகளே தகுந்த பரிஹாரமாகும். ஆகையால் ஸன்மார்க்கத்தால் எவ்வளவு கஷ்டம் உண்டானபோதிலும், அதில் நடைபெறுவதற்கு எவ்வளவு தடை ஏற்பட்ட போதிலும் அதனுல் மனதிற்கு வரும் மேன்மையை அறிந்த ஒவ்வொருவனும் அந்தக்கஷ்டத்தைத்தாங்கிக்கொண்டு வேறு பலன் ஒன்றையும் அபேக்ஷிக்காது ஸன்மார்க்கத்தில்விடாது முயலுவான். ஸன்மார்க்கக் கரும்பைத்தின்னக் கூலியும் கேட்பாருண்டா? அது கரும்பென்று உணர்ச்சி மாத்திரம் ஒருவனுக்கு இருந்தால் போதும்.

***

ஆகவே கரும்புதின்னக் கூலியும் வேண்டுமோ? என்ற பழமொழிக்கு ஒருவேலையைச் செய்வதே ஒருவனுக்குச் சிறந்த பலனைக்கொடுக்குமாயின் அதைச் செய்வதற்கு ஒருவனும் கூலிகேட்கமாட்டான் என்பது பொருள்.

வாயிலாநாயனுர் திவ்யகதை.—இப்பொழுதுதான் திருமயிலை அறுபத்துமூவர் உத்ஸவம் நடந்தேறியது. இந்த ஸந்தர்ப்பத்தில் அறுபத்து மூவருள் ஒருவராயும் திருமயிலையில் அவதரித்தவராயும் உள்ள வாயிலாநாயனுரைப்பற்றிக் கூறி ஆனந்திப்போம்.

வருஷங்களில் ருதுக்கள் எவ்வாறிருக்கின்றனவோ, அவ்வாறே மத விஷயங்களிலும் தகுந்த காலங்கள் உண்டு. எவ்வாறு வஸந்தருதுவில் செடிகொடிவர்க்கங்கள் தழைத்து ஓங்கி அழகிய புஷ்பங்களைத் தாங்கி நிற்பதும் அல்லாமல் வழியிலுள் புற்பூண்டுகளுங்கூடப் புஷ்பித்து ஆனந்தகரமாக விளங்குகின்றனவோ, அவ்வாறே கடைசிப்பாண்டியர்கள் காலத்தில் ஏற்பட்ட சிவமதக்கிளர்ச்சியில் தென் இந்தியாவில் ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் மஹான்கள் கிளம்பினர். இவர்கள் ஸகல ஜாதியார்களிடத்திலிருந்தும் கிளம்பி நமது நாட்டைப் புனிதமாக்கினர். நந்தன் முதலிய இத்தகைய மஹான்களை நாம் எல்லோரும் மிகுந்த மனஉருக்கம் பக்தி முதலியவைகளுடன் இன்னமும் மறவாது ஞாபகத்தில் வைத்திருக்கிறேம். நமது கதாநாயகராகிய வாயிலார் இந்தக்கிளர்ச்சிக் காலத்தில் திருமயிலையில் வேளாளர் குலத்தில் உதித்தவர். அவர் வாழ்க்கைத்தொழில் பகவந் ஆராதன மாத்திரமாயிருந்தபடியால் அவர் வாழ்நாளில் அற்புதவிஷயங்கள் ஒன்றும் ஸம்பவிக்கவில்லை. இந்தத் தொழில், பெரும்பாலார்க்கும் மிகஸாரமற்றதாகத் தோன்றிய போதிலும், நாயனுர் ஆயுள்முழுவதைக் கவர்ந்து அவருக்குப்பேரானந்தத்தை அளித்துக்கொண்டு வந்தது.

வாயிலாரது பூஜை மிக அற்புதமானது. ஊரிலுள்ள கோயிலுக்கு அவர் போனவரேயல்லர். அங்கு நடக்கும் விஷயங்கள் அவர் மனேநிலைக்குத் தாழ்ந்தவைகளாகவே அவருக்குப்பட்டபடியால் அவர் ஓர் பெரிய கோயில் கட்டினர். அதைப்போன்ற சிறந்தகோயில் இவ்வுலகில் எங்கும் இல்லை. அதற்கு அநேகம் பொற்கோபுரங்களை அமைத்தார். வெள்ளிச்சுவர், ரத்னஸ்தம்பங்கள் முதலியவைகளோடுகூடி விஸ்தாரமானய மண்டபங்களை அங்கு அமைத்தார். நல்ல ஒழுங்காக அந்தக் கோயில் கட்டப்பட்டிருந்தது. அதைச்சுற்றிப் பஞ்சலோகங்களால் செய்த ஐந்து பிரகாரங்கள் இயற்றி அவைகளுள் வெளிச்சுவரை இரும்பாலேயும், உள்சுவரை பொன்னுலேயும் அமைத்தார். அந்தக் கோயிலுள் மாம்பழம் பிரமாணமாக உள்ள ரத்னங்கள் மூலமாகப் பிரகாசம் உண்டாக்கினரே ஒழிய, ஸாதாரண தீபங்களை அவர் அங்குப் போடவில்லை. கண்ணுடிகளை விசித்திரமாக ஒழுங்குபடுத்தி வைத்துக் கோயில் வைபவங்கள் மிகச் சிறப்புற்று விளங்கும்படி செய்தார். இந்தக் கோயிலின் மத்தியில்தான் கைலாஸத்திற்கு ஸமமாகிய மூலஸ்தானத்தை அமைத்தார். இதில் பகவத் ஸ்வரூபமான மூல லிங்கம் அமைக்கப்பட்டு" விலை உயர்ந்த ஆபரணங்கள், நல்ல பரிமளம் வீசும் புஷ்பங்கள் ஆகிய இவைகளால் அனந்தமாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. இந்த லிங்கத்தின் இருபுறத்திலும் இரண்டு கல்பக விருக்ஷங்கள் அமைக்கப்பட அவைகள் தமது திவ்ய கந்தத்தைக் கோயிலெங்கும் பரவச்செய்தன. இவர் கட்டிய கோயிலின் பெருமையை மனிதர்கள் நாவால்

எவ்வளவு எடுத்துச் சொல்லியும் அதன் லவலேசத்தைக்கூட உள்ளபடி வர்ணிக்கமுடியாது.

இவ்வளவு சிறந்த கோயிலைக்கட்டப் போதுமான திரவ்யம் வாயிலாருக்கு எங்குக் கிடைத்தது? அவர் எங்கு இதைக்கட்டினார்? என்ற சங்கை எல்லோருக்கும் பிறக்கும். அவர் திரவ்யத்தால் இக்கோயிலைக் கட்டவில்லை. அவர் கற்பனாசக்தியே இதற்கு முக்கிய ஸாதனம். இந்த கற்பனாசக்தி முற்கூறியபடி ஒழுங்காகத் தொழிற்படுவதற்கு அபூர்வ திரவ்யமாகிய பகவத் பக்தியே அவருக்கு மூலபலமாக இருந்தது. இவ்வற்புதக் கோயிலை அவர் தமது மனதிலேயே கட்டிக்கொண்டார். அவர் இந்தக் கோயிலிலுள்ள பரம்பொருளோடேயே ஸதா இணைபிரியாதிருப்பார். தமது சாப்பாடு, தூக்கம், தொழில் முதலியவைகளைக்கூட மறந்து, இராப்பகல் ஓய்வு ஒழிவு இன்றி இப்பகவானுக்குப் பூஜைகளை நடத்துவார். இரவானாலும் பகலானாலும் ஸரி, இடி இடித்தாலும் மழைபெய்தாலும் ஸரி, ஒன்றையும் கவனியாது இவர் தமது பகவத்பூஜையை விடாது நடத்திப் பரவசயாகி, தமது கோயில் பரம்பொருள் எல்லாவற்றையும் மறந்து தான் மாத்திரமாகச் சேவித்து அசைவற்றிருப்பார். வரவரப் பழக்க விசேஷத்தால் இவர் மானஸபூஜை பழுத்து ஞானநிஷ்டையாக, விக்கிரஹம் மறைந்து தானே பரம்பொருளாகச் சேவித்து நின்றார். நாயன்மார்கள் திவ்ய சரிதைகளை எழுதிய சேக்கிழார்,

‘மறவாமை யானமைத்த
மனக்கோயி லுள்ளிருத்தி
யுறவாதி தனையுணரு
மொளிவிளக்குச் சுடரேற்றி
யிறவாத வானந்த
மெனுந்திருமஞ் சனமாட்டி
யறவாணர்க் கன்பென்னு
மமுதமைத்தர்ச் சனைசெய்வார்.

ஆனந்த பரவசமாகக் கூறுகிறார். அவரது மௌனமான மானஸபூஜையின் சிறப்பு காலக்கிரமத்தில் பலர் அறிய வெளிவர, அவர் விதேக முக்திபெற்றதும் ஸமாதிசெய்யப்பெற்று நாயன்மார்களுள் ஒருவராக மதிக்கப்பெற்றார்’ என்று புராணங்கள் கூறும். இப்பொழுது திருமயிலை அம்பாள் ஸந்நிதிக் கெதிரில் பிராகாரத்தில் வாயிலாநாயனார் கோயில் இருப்பதை யாவரும் காணலாம்.

இதுவே மானஸபூஜையின் சிறப்பு. நண்பர்களே! பரமபதம் இவ்வளவு எளிதில் கிடைக்கக்கூடியதாயினும், எவ்வளவு சிரமஸாத்யமாகவும் இருக்கிறது பாருங்கள்.



# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## சகுந்தலை அல்லது பிரிவினிலை



### 1. கடிதம் வரைந்த காதை

காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—ஓதுகலை
எண்ணிரண்டுமொன்றுமதியென்முகத்தாய்நோ
கண்ணிரண்டுமொன்றையே காண. [க்கறான்

என்பது நன்னெறி. தருமவழியின்கண் உண்டாகும் அமுதமூட்டிய நூலில் காணப்பட்ட அப்பாடலின் கருத்து ஒவ்வோர் பெண்டிரின் மனத்திலுமிருப்பின் உலகிற்கு ஸுகமன்றித் துக்கமெங்குண்டாகும்? கணவன் சொற்கிணங்கி அவன் சொல்லிய வண்ணம் நடக்கும் பெண்டிர் இக்காலத்து கிடைப்பதரிதென்பர்—அது எம்முறையன்று, தருமவழியில் நடப்பின், முதலில் இன்பமடைந்த காலத்தில் மாத்திரம் தமது வழியென அதைக்கொண்டு, நடுவில் ஏதோ தமது கரும விசேஷத்தால் துன்பமுண்டாகுமெனில், தருமவழியில், விட்டுவிடலாமோ? தமக்கு வேண்டிய காலத்தில் தருமம், மற்றையகாலத்தில் அது வேண்டாமென்பது ஒரே தன்மையான குணமுடைமையில்லாமையைக் குறிக்கும். ஆதலால் கஷ்டம், ஸுகம் இவற்றை எண்ணாது, கணவனது எண்ணத்தை எக்காலத்தும், எவ்விடத்தும் ஒற்று நடப்பின், இடையே சில துன்பம் அடைந்தாலும், முடிவில் ஸுகமடையாமலிருக்கமுடியாது. அதுமாத்திரமன்றிக் கணவன் மூலமாகத் தனது முக்தி மார்க்கமறியும் ஸாதனமாதலால் அவன் கருத்தில் தான் ஒருமித்ததும், இருகண்ணும் ஒரேபொருளை நோக்குதல் போல் இரு

வரும் முக்திமார்க்கத்தை நோக்கலாகும். இவ்வித அம்ருதமூட்டிய இப்பாடலிதன் கருத்தென சகுந்தலையின் சரிதத்தை யாம் இனிக்கூறுவோம்.

மாலினி என்னு மாற்றின்னோரம். அயோத்தியா நகர்க்கு அருகாமை: பூவுங்காயும் நிறைந்து சீழ் உதிர்ந்து மனதை இழுக்கும் இடம். வரிசை வரிசையாக வளர்ந்துயர்ந்த மரங்களின் அடர்த்தியால் மயங்கி விளங்கும் தவவனம். இதனிடத்திருப்பது கண்வமாமுனிவரது ஆச்ரமம். மோனத்திலிருக்க மனத்தையூட்டுமிடத்து பெண்டிருமிருப்பரோ? அழதமிக்கு ஆர்வமடைந்த பெண்டிருரையும் வீடிங்கிருத்தலாமோ? மெல்லிய உடம்பு இக்கரடு முரடான விடத்திலிருக்கக்காரணமு முண்டோ என ஸந்தேஹ முண்டாகலாம். நம்மாலது ஒழிக்கமுடியும் என்று சொல்லவில்லை. ஆயினும் இப்பெண்டிர் யார் மொழியைக்கேட்டு அவ்வாறு ப்ரமை அடைகிறார்கள்?

“பாழும்சேனை யிங்குப் புகுந்து நம்மை என் பரிதவிக்கச் செய்யவேண்டும். ப்ராஹ்மணர்களது தவத்தொழிலைக் காவாது தமது விளையாட்டென்னும் அஹங்காரத்திற்குட்பட்டுத் தவஞ்செய்யு மிக்காட்டை நாசம் செய்வது அரசற்கு இயல்பாமா?” என்றொருவன் கூற, மற்றொருவன் “அடே! முழுமூடனாகி மொழிகின்ற உரை நன்றாக விருக்கின்றது! தவத்தினரைக் காக்கும் பொருட்டுத் தனது சேனை பரிவாரத்துடன் வந்து கொடிய மிருகங்களை வேட்டையாடி நம்மவர் பயமின்றித் தவஞ்செய்ய செய்யும் வினை அரசரியல்பன்றோ?” என்றான். இதற்குள் கொடியுங் குடையுங்கொண்ட தேரொன்று கடகடவென்று சுழன்றங்கு வந்தது. “ஹே! அரசர்க்கரச துஷ்யந்த! நீடுழி வாழ்க. செங்கோலோங்குக” வென்றனர் அவர். தேர்க்குள் இருந்த மன்னனும் “தவமுனிவர்களே! உமது முனித்தலைவர் கண்வரிங்கிருக்கின்றனரோ” என்றனர். “கண்வர் தமது ஆச்ரமத்தில் இப்பொழுதிலர். அவர் சகுந்தலையை வந்தவர்க்கு விருந்தோம்பச் சொல்லிவிட்டு லோமதீர்த்தக்கரைக்கு அதன்” துன்பமொழிக்கச் சென்றுள்ளார்” என்றனர். “ஸரி யான் அவளைக்கண்டு செல்வன். ஆயினும், யான் விசாரித்ததாக நீங்கள் கண்வமாமுனிவர்க்குக் கூறுவீராக.” என்றனன் மன்னன்.

தேர் நில்லாது ஓடி அங்கடைந்தது. துஷ்யந்தன் தன்னுடுப்புக்களைக் களைந்துவிட்டு ஸாதாரண ஆடையுடன் கீழிறங்கி “ஸாரதி! நீ சென்று குதிரைக்கு நீராட்டிச் சீராட்டு, யான் வந்துவிடுவேன்” என்றதும் தேரைக்கடத்தும் பாகனும் சென்றான். இடையே எதிர்புறத்து சகுந்தலை தன்னினத்தாரோடு விளையாடுவதைக் கண்ணுற்ற மன்னன் “இவள் பார்ப்பனப்பெண் என்பது ஸரியோ? கண்வரது புதல்விதானோ?” என ஐயமுற்றதன்றித் தனக்குந் தெரியாதவள்பால் இதயம் இழுக்கப்பட்டவனானான். இதனிடை ஓர் வண்டு சகுந்தலையின் முகத்திற் கொட்டியது. ஹா! என்றவள் அலறியதும், அவள் நேசர்கள் “ஏன் கஷ்டமடைகின்றனை? நமது நாட்டரசன் துஷ்யந்தனே நம்மைக் காப்பாற்றவோன். அவனைத்தான் நீ அபயமென்றடைய வேண்டும்” என்றனர். என்றதும் யார் அவ்விடம் வந்தது? துஷ்யந்தனைக் கண்டதும் அவர்க்கு அச்சமும் நாணமுமுண்டாவது பெண்டிரது இயல்பன்றோ?

“இப்பெண் யார், யான் அறியேன்” என்றான் துஷ்யந்தன். “உமது ஆச்ரமங்களில் வைதிக ஒழுக்கங்களும் அவற்றிற்கு வேண்டிய உபகரணங்களும் நன்றாய் நடக்கின்றனவா?” எனக் கேட்டனன் மன்னன். “முழுமணிப்பூணிற்கு பூண் வேண்டா” இயற்கை அழகே அழகு. காட்டில் வாழும் இப்பெண்ணின் சிற்றுடையிலும் இவள் அழகு விளங்குகின்றது. வீட்டிலுயர்பதவியிலிருக்கும் அழகெல்லாம் இவருடைய வடிவின்முன் சூரியனைக்கண்ட பனிபோல் இன்றாய் விடும்” என்றெண்ணிக்கொண்டவனாய் மற்றும் அவளைப்பற்றி யோசனை செய்வதில்லை என்று மன உறுதி செய்துக்கொண்டான். ஆயின் பெண்வடிவைக் கண்டு மயங்காதவரெவர். மற்றுமவளையே நோக்கி நோக்கி மனமயர்ந்தான். அவள் மனமுழுதும் நோக்கவும் வெட்கமுற்றனன். பார்ப்பனன் மகள்மேல் மனதைச் செலுத்துவது அழகன்றெனத் தன்னைத் தானே நிந்தித்துக்கொண்டான். ஆயினும் மனமடங்கவில்லை. பொறுக்கமுடியாது வாய்துடித்தது.

இதற்குள் வந்தவர்கள் சகுந்தலையை அவ்வனத்திற்கு வந்த மனிதற்கு முகமன் முதலிய அளிக்கும்படி சொல்லினார்கள். அதுமாத்திரமன்றி வந்த மனிதனை ஆதரிக்கவேண்டியது தமது கடமை எனக்கூறி அங்குட்கார்ந்தனர். இடையே அரசன் “உம்மிடையுள்ள இப்பெண்மணி யார்?” என வினவினான். பெண்களும், காம்பீர்யமும் வீர்யமுமுள்ள மனிதனிங்குவரக் காரணமின்னதென்று அறியாது மயங்கியதன்றிச் சகுந்தலைக்கு ஏதோ தனக்கிதுவரைக் காணாத சில எண்ணங்கள் மனத்திலுண்டானதாகப்பட்டது. ஆனால் அரசனுக்கு யாரும் பதில் கூறவில்லை. மறுபடியும் மன்னன் “யான் புருவம்சத்தரசரால் வனத்திலிருக்கும் முனிவரது யாகம் முதலியவைகளைப் பரிசீலனஞ்செய்ய நியமிக்கப்பட்டவன்—” எனக் கூறுநிற்புழி சகுந்தலை ஏதோ மனவாட்டமடைந்ததாகக் காணப்பட்டாள். வந்தவற்கும் ஏதோ மனோவியாதி இருந்ததாகவும் கண்டார். அவர்க்கும் தெரியாது அவர் மனத்துவகை உண்டாகியது.

இன்னமும் அரசன் கேள்விக்கு விடையில்லை. மற்றும் அரசன் "பிரமசாரியாகிய காச்யபர்க்குப் பெண் குழந்தையுமுண்டோ?" எனக்கேட்டனன். "அதெல்லாம் ஒன்றுமின்று. விச்வாமித்திரர் என்னும் அரசமுனிவரின் புதல்வியிவள். காச்யபர் அவளை வளர்த்ததினால் வளர்த்த தந்தை ஆனார் ஒழிய, இவள் விச்வாமித்திரர்க்கு மேனகை என்னும் அப்ஸர ஸ்திரீயிடம் பிறந்தவள்" என்ற விடையுடனே கிடைத்தது. நெருப்பென கிட்டக் நெருங்க முடியாது ஜ்வலித்த வஸ்துவானது அடையக் குளிர்ச்சியும் இனிமையும் அளிக்கும் மாணிக்கம்போல் விளங்கியதாக அம்மன்னன் ஆர்வமுற்றான். "இழந்தமணி புற்றரவு எதிர்த்ததென"லானான். அடையமுடியா பார்ப்பணக்குலத்து மங்கை எனப்பட்டவள் அரசவம்சத்து வந்த அணங்கானது அவனுக்கு அன்பூட்டியதன்றி ஆசையையும் பெருகச்செய்தது.

இதற்குள் தேர்ப்பாகன் தேரோடு எதிர்வந்து நின்றனன். சகுந்தலையின் நிலைமையைப் பக்கலிருந்து நன்றாயறிந்தவர்கள் அவள் ஏதோ ஓர்வகையான மயக்கத்துட்பட்டதாக நன்கு அறிந்திருப்பர். ஆயினும் மன்னன்பால் பார்வை முற்றும் கொண்டிருப்பினும் அவனை நேராகப் பார்க்க வெட்கமுற்றாள். சற்றுப் பார்த்ததும் இருவர் கண்ணும் ஒன்றாயது. இருவர் மனமும் ஒன்றாயதென்னும் குறியை அவர் கண்ணே காட்டும். அரசன் தேரேறிச் சென்றனன்.

கண்ட மன்னன்மேல் தனக்கென்ன எண்ணம் உண்டானதென்று சகுந்தலைக்கே தெரியவில்லையாயினும் அவள் ஹ்ருதயம் பொங்கிப் பொங்கி புகைந்துக்கொண்டேயிருந்தது. மனோவியாதிபட்ட மடந்தை எனக் காட்டிக்கொள்ளக் கூடாதென்னுமெண்ணமே அதை முழுதும் காட்டியது. தனது நேசர்கள் என்ன செய்தும் அவள் மனம் அமைதியடையவில்லை. உடம்பில் உஷ்ணமும் காங்கையும் பொறுப்பதரிதாயிற்று. தாமரைக்குளமும், பூவும் சாந்தமும் குளிர்ச்சியளிக்கவுமில்லை. சந்திரனும் காற்றும் சூரிய ஜ்வாலையாகவே அவளுக்குப்பட்டது. "வெப்புநோயர் நீரில்மூழ்கின் வெம்மையாறுமேகொலாம்?" ச்வரமடைந்தவர் குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்தால் சாந்தியுண்டாமோ? மதிமயங்கி மன்னன்பால் கொண்ட ஆசைப்பெருக்கம் பித்தம்போல் விரிந்திடில் என் செய்வது? பாழும் மன்னன் செய்த படுவினை ஈது என்று பக்கத்திருந்தவர்கள் எண்ணி, சகுந்தலையைத் தன் ஆசைபாய்ந்த மன்னர்க்கு ஓர் கடிதம் எழுதம்படிக் கூறினள். இனி ஒளித்தலிற் பயனில்லை என தாமரையிலையில் தன் நகத்தால் கடிதம் எழுதத் தலைப்பட்டாள்.

# விசேஷ வர்த்தமானங்கள்

## GENERAL NEWS

மிளகு.—*மிளகுக்கொடி மலையாளதேசத்திற்கே யுரித்தானது. மேற்கு மலைத்தொடர்ச்சியின் அடிவாரத்திலுள்ள பெருங்காடுகளில் அது தானகவே வளர்வதை நாம் இன்னும் காணலாம். அங்கிருந்துமிளகுக் கொடி ஒருபக்கத்தில் வயநாடு, கூர்கு என்னும் பிரதேசங்களின் திக்கில் பரவியும் மற்றொரு பக்கத்தில் மேற்குக் கடலுக்கும் மலையடிவாரத்திற்குமுள்ள பிரதேசங்களில் பரவியும் இருக்கிறது. ஆகவே மரங்கள் நிரம்பியுள்ள ஒவ்வொரு தோட்டத்திலும் மிளகுக்கொடி பயிராக்கப்படுகிறது. ஆனால் ஆதியில் மலையாளத்திலேயே மிளகு பயிராக்கப்பட்ட போதிலும் தற்காலத்தில் வேற்று தேசங்களிலும் பயிராக்கப்படுகிறது. இப்பொழுது ஆஸ்திரேலியாகண்டம் வரையில் பரவியுள்ள தீவுகளில் ஏராளமாக மிளகு உண்டாகிறது. மிளகு முற்காலத்தில் முக்கியமாய் விலையாகிய இடம் இந்தியா. இப்பொழுது அது மிகுதியாக விலையாகுமிடம் சிங்கப்பூர். தலைச்சேரியிலிருந்து ஏற்றுமதியாகுவதைவிட நூற்றுக்கணக்கான மடங்கு அதிகமாய் மிளகு சிங்கப்பூரிலிருந்து ஏற்றுமதியாகிறது. இவ்வாறு மலையாளம் மிகவும் பின்தங்கிய போதிலும், தலைச்சேரி மிளகு மற்றெந்த மிளகைக்காட்டிலும் மிகச்சிறந்ததென்றே இன்னும் மதிக்கப்படுகிறது. அம்மிளகு இந்தியாவின் மேற்குக் கடற்கரையிலே தான் செவ்வையாகப் பயிராகிறது.

சரித்திர ஆராய்ச்சி செய்கையில் இந்துதேச வாழ்க்கையை மிளகு முறைப்படுத்தியது போல மற்றெந்தச் செடியும் செய்யவில்லை யென்று நாம் அறிகிறோம். ஐரோப்பிய பிரயாணிகளையும், வியாபாரிகளையும் இந்தியாவைப்பற்றி அதியில் கவனிக்கும்படி செய்தது மிளகே. மிளகின் விலையைக் குறைக்க வேண்டு மென்றே தான் வாஸ்கோடிகாமா என்பவர் குட்ஹோப் என்னும் முனை வழியாக இந்திய மேற்குச்சமுத்திரத்திற்குச் சுற்றுப்பிரயாணஞ் செய்தார், அப்போது தான் போர்த்துக்கேசியர் மேற்குக் கடற்கரையில் குடியேறினர்கள். அதற்குக் கொஞ்ச காலத்திற்குப் பிறகு டச்சுக்காரர்கள் ஐரோப்பாவில் மிளகைத் தாங்களே முழுவதும் வியாபாரஞ் செய்தார்கள். ஆனால் அவர்கள் மிளகை அதிக விலைக்கு விற்றதினால், லண்டன் நகரத்திலுள்ள சில பெரிய வியாபாரிகள் ஒன்றுசேர்ந்து இந்தியாவுடன் நேரே வியாபாரஞ்செய்யத் தீர்மானித்து 'ஈஸ்ட் இந்தியா கம்பெனி' என்னும் சங்கத்தை ஸ்தாபித்தார்கள்.

* கவர்ன்மென்டு பாடனிஸ்டு, மிஸ்டர் பார்பர் ஆங்கிலத்தில் எழுதியதின் மொழிபெயர்ப்பு.

ஆகவே, இந்தியாவில் முதல் முதல் பிரிட்டிஷ்காரர்கள் வந்து குடியேறியதற்குக் காரணம் மிளகே. இந்துதேச சரித்திரத்தில் நாம்படிக்கும் தீராப்போர்கள் அடக்கப்பெற்று, வேறுபட்டிருந்த அநேக ஜாதியர்கள் ஒரே யாட்சிக்குள்ளாகியதற்குக் காரணமும் மிளகே.

மிளகுக்கொடியைப் பயிராக்குவது வெகு சுலபம். அது படரும் மரத்தில் சற்றுப்படர ஆரம்பித்தவுடனே அதை யதிகமாய்க் கவனிக்கவேண்டியதில்லை. ஆனால் அதைப் பயிர்செய்வதில் எவ்வளவு அஜாக்கிரதையாயும் அசட்டையாயுமிருந்தபோதிலும் ஒவ்வொரு வருஷமும் நன்றாக விளைந்து அதைப் பயிர்செய்வோர் ஒவ்வொருவருக்கும் நல்லலாபத்தைக் கொடுக்கிறது. ஆனால் ஒரே தோட்டத்தில் மிளகு வெவ்வேறு விதமாக வளர்கிறதென்பது யாவர்க்குந் தெரிந்த விஷயமே. சில கொடிகள் நன்றாக வளர்கின்றன. சில அவ்வளவு நன்றாகவளர்வதில்லை. சில கொடிகளில் மிளகு மிகுதியாய்க் காய்க்கிறது. சில கொடிகளில் மிகவும் சுவல்பமாய்க் காய்க்கிறது. மிளகைப் பயிராக்குவோர் மிளகுக் கொடிகளை நன்றாகப் பயிராக்கும் விதத்தை யறிந்துகொள்ளும்பொருட்டுக் கவர்ன்மெண்டார் தலிப்பரம்பா என்னுமிடத்தில் ஓர் மிளகுத் தோட்டத்தை யேற்படுத்தியிருக்கிறார்கள். இப்பொழுது, பயிரிடுவதற்கு முன் உயர்ந்தவிதமான மிளகுக்கொடி எவ்வாறு பயிரிட்டால் வளருமென்பதை நிர்ணயித்துப் பயிரிடுவது வெகு சுலபம். இதைப்பற்றி யறியவேண்டுவோர் அந்தக் கவர்ன்மெண்டு தோட்டத்து மானேஜருக்கு எழுதிக்கேட்டால், அவர் சந்தோஷமாய்ப் பதிலெழுதுவார். நல்ல கொடிகளைப் பயிராக்குவதில் எவ்வளவு சிரமமிருக்கிறதோ அவ்வளவுசிரமம் தாழ்ந்த கொடிகளைப் பயிராக்குவதிலுமிருக்கிறது. ஆனால் அதைச் சிரத்தையுடன் வளர்ப்பின் ஒவ்வொரு வருஷமும் மிகவும் ஏராளமாய் விளையுமென்பதற்கு ஐயமில்லை. மிளகு விளைவதற்கு அதிக காலம்பிடிக்கிறதென்பதுண்மையே. ஆகையால் அதைப் பயிராக்குவதில் சிரமப்படுவது பிரயோசனமில்லையென்று சிலர் சொல்லக்கூடும். ஆனால் பிரயோஜனமற்ற ஒருமரத்தை வளர்ப்பதைக் காட்டிலும், காலமாகியபோதிலும் நல்ல பலத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு மரத்தைவளர்ப்பது நலமல்லவா? ஆகை~~யால் உங்கள் மக்களின் நிமித்தம்~~ வளர்வதில் தாமதிக்கும் மிளகைப்பற்றி நீங்கள் அதிகமாய் கவனிக்கவேண்டியது இன்றியமையாததே. ஏனெனின் மிளகு நல்ல லாபத்தைக் கொடுக்கக்கூடியது. மிக்சிறந்த கொடிகளின் கீழ் ஒவ்வொரு வருஷமும் நன்றாக மண்ணைக் கொத்தித் தோட்டத்தில் இருக்கக்கூடிய மண்ணோடு இலைகலந்த எருவையெடுத்து வீட்டுப் புறங்கடையிலுள்ள கூளங்குப்பைகளுடன் சேர்த்து மிளகுக்கொடி படரும் மரத்தின் அடியில் பரப்பி ஓர் பாத்தியாகக் கட்டவேண்டும். மலையாள தேசத்தார் அவர்கள் பயிராக்கும் மிளகுக்கொடியிலிருந்து அடையும் மிளகைவிட ஐரோப்பிய சாகுபடிக்காரர்கள் அதிகமாய் அடைகிறார்களென்பது நாம் விசனிக்கவேண்டிய விஷயமன்றோ? முற்காலத்தில் உலகத்தில் மிளகு மிகவும் விலையாகிய இடம் இந்தியாவாயிருந்தது போக, இப்பொழுது வேறிடத்தில் மிளகு அதிகமாய் விலையாவது நமக்குச் சிறப்பன்றன்றோ?

***

ஓர்தமாஷுக்கு 3 மாச தண்டனை.—ஓர் பாம்பாட்டி வேடிக்கை காட்டிக்கொண்டு இருக்கையில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ஒருவன் கழுத்தில் நல்ல பாம்பை மாலையாகப்போட அது உடனே அவனைக் கடித்துவிட்டது. அவன் சில நிமிஷத்தில் மாண்டானாம். அதன்நிமித்தம் ராய்ப்பூர் ஹாடி மாஜிஸ்டிரேட் பாம்பாட்டியை மூன்றுமாச தண்டனை விதித்தாராம்.

***

மருதாணி.—இதன் இலையைப் பெண்கள் காசுக்கட்டி முதலியவைகளோடு அரைத்து நகத்துக்குச் சாயம் ஏற்றுவதுண்டு. அரேபியா முதலிய துருக்கர் வசிக்கும் தேசங்களில் இந்தப் பயிரில் அதிக வியாபாரம் நடக்கிறது. இது சாதாரணமாய் நமது ராஜதானியில் வேலிக்காகப் பயிரிடப்படுகிறது. இதன் கிளைகளை வெட்டிப் புதைத்தாலே வேரூன்றி துளிர்க்கும். இது மரமாகாமல் செடியாகவே இருக்கும். வாசனையுள்ள இதன் புஷ்பங்களிலிருந்து தைலம் செய்யப்படுகிறது. இதை உபயோகிப்பதால் தேகத்துக்குக் குளிர்ச்சியும் ஆரோக்கியமுமுண்டாகும். வியர்வை அதிகமாய் வரும் குணத்தைக் கண்டிக்கக்கூடியதாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் அரேபியா, ஈஜிப்ட், ஆப்பிரிக்கா முதலான இடங்களில் ஜனங்கள் இந்தப்பயிரினால் லாபமடைவதுபோல நாமும் தைலம், அத்தர் முதலியவைகள் செய்துவிற்றால் லாபம் அடையலாம்.

296 e

# விவேக போதினி

## ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை 1908-ம் ஹூ முதல் பிரசுரமாகிவருகிறது. யாவராலும் சிலாகிக்கப்பெற்றது

இப்பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோர்களைக்கொண்டே, இதன் பெருமையை நன்கு அறியலாம். மிகவும் சுலபமான நடையில் எழுதப்படுகிறது. சிறுவர்கள் சிறுமிகள்கூட உத்ஸாகத்துடன் வாசிக்கக்கூடியது. ஒவ்வொரு மாதமும் ஒழுங்காகப் பிரசுரமாகிறது. சித்திரப்படங்கள் ஒவ்வோர் சஞ்சிகையிலும் உபயோகிக்கப்படுகின்றன. எத்திறத்தாரும் வாங்கி வாசித்து நற்பயனடையும் பொருட்டே சந்தாத்துகையும் மிகவும் ஸுலபமாய் வைக்கப்பட்டிருக்கிறது. [இம்மாதிரி யாவருக்கும் உபயோகத்தையும் உத்ஸாஹத்தையும் கொடுக்கக்கூடிய பத்திரிகை இன்னமும் எவராலும் பதிப்பிக்கப்படவில்லையென்று தைரியமாய்ச் சொல்லுவோம்.

## இப்பத்திரிகையில் பிரசுரமாகும் விஷயங்கள்

1. நீதிகளைக் கற்பிக்கக்கூடிய பொது விஷயங்கள்.
2. பொது நன்மைக்காகப் பாடுபட்ட மஹான்களின் ஜீவிய சரிதைகள்.
3. இயற்கை அற்புதங்கள்.
4. உலக ஒழுக்கங்கள்.
5. கல்வியபிவிருத்திக்குரிய பாஷா விஷயங்கள்.
6. வியவஸாயம், கைத்தொழில், வியாபார விஷயங்கள்.
7. தக்க நிபுணர்களைக்கொண்டு எழுதப்பட்டு வரும் உயர்தரமான நாவல்கள், நாடகங்கள்.
8. சிறுவர்க்காகவென்று எழுதப்படும் நீதியைப் புகட்டும் சிறந்த கதைகள்.
9. ஸ்திரீகளுக்கேற்ற நற்போதங்கள்.
10. சாஸ்திரீகமான விசேஷ வர்த்தமானங்கள்.

## தபாற்கூலி உள்பட சந்தா விபரம்

| இந்தியா, பர்மா, சிலோன், | | | | பினங்கு, சிங்கப்பூர், நெடால், ஆ. இடங்களுக்கு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஒரு வருஷத்துக்கு | ரூ. 3 | 0 | 0 | ஒரு வருஷத்துக்கு | ரூ. 4 | 8 | 0 |
| ஆறு மாதத்திற்கு | ,, 1 | 12 | 0 | ஆறு மாதத்திற்கு | ,, 2 | 4 | 0 |
| தனிப்பிரதி | ,, 0 | 5 | 0 | தனிப்பிரதி | ,, 0 | 6 | 0 |

☞ சந்தாத்தொகை முன்பணமாகத்தான் அனுப்பவேண்டும். அல்லது, முதல் ஸஞ்சிகையை ஒரு வருஷத்துக்கு, அல்லது ஆறு மாத சந்தாவுக்கு வி. பி. மூலமாய் அனுப்பிப் பெற்றுக்கொள்ளப்படும்.

இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு மட்டுமே எங்களிட சொந்தப்புத்தகங்களும், இன்னும் அநேக தமிழ்ப் புத்தகங்களும் குறைந்தவிலைக்கு அனுப்பப்படும். ஆகையால், இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு எப்பொழுதும் நஷ்டமில்லை. பத்திரிகையின் அபிவிருத்தி விஷயமாய் எழுதப்படும் நிருபங்களை எங்களால் இயன்றமட்டில் கவனித்து, முடிந்தவரையில் சீர்திருத்தமுயலுவோம். மற்றும் வேண்டிய விபரங்கள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர், "விவேக-போதினி" ஆபீஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

# நமது பத்திரிகைக்கு விஷயதானம் செய்யும் கனவான்களில் சிலர் :—

ம-ா-ா-ஸ்ரீ, மஹா மஹோபாத்யாயர் பண்டித-ஸ்ரீ வே. சாமிநாதய்யரவர்கள்.
,, மஹா மஹோபாத்யாயர் பண்டித-ஸ்ரீ சந்திரசேகர சாஸ்திரிகளவர்கள்.
,, கனம் ஆர். ரகுநாதராவ் அவர்கள், திவான் பஹதூர், ஸி.எஸ். ஐ.
,, பண்டித-ச. ம. நடேச சாஸ்திரியாரவர்கள்.
,, டி. செல்வகேசவராய முதலியார் அவர்கள், எம்.ஏ.
,, த. கனகஸுந்தரம் பிள்ளை அவர்கள், பி.ஏ.
,, டி. ஏ. கோபிநாத ராவ் அவர்கள், எம்.ஏ.
,, வ. சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள், எம்.ஏ.
,, பி. வி. ஸ்வாமி ராவ் அவர்கள், எம்.ஏ.
,, எஸ். குப்புஸாமி சாஸ்திரிகள் அவர்கள், எம்.ஏ.
,, டி. எஸ். சுப்பிரமணிய அய்யரவர்கள், எ.ம்.ஏ., எல்.டி.
,, ஏ. பஞ்சாபகேசய்யர் அவர்கள், எம்.ஏ., எல்.டி.
,, எஸ. அப்பாஸாமி அய்யர் அவர்கள், எம்.ஏ., எல்.டி.
,, மஹேச குமார சர்மா அவர்கள்.
,, ஏ. எஸ். கஸ்தூரிரங்கய்யர் அவர்கள், பி.ஏ., எல்.டி.
,, வ. சேஷகிரி சாஸ்திரியார் அவர்கள்.
,, வி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், பி.ஏ.
,, ஜே. ஆர். ரங்கராஜு அவர்கள்.
,, ஏ. மாதவய்யா அவர்கள், பி.ஏ.
,, எஸ். சிதம்பர அய்யர் அவர்கள்.
,, கே. நாராயண அய்யர் அவர்கள், பி.ஏ., எம்.பி., ஸி.எம்.
,, பண்டித-ஸ்ரீ கோபாலகிருஷ்ண அய்யர் அவர்கள்.
,, ஜ. வே. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், பி. ஏ.
,, ஸி. ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள், பி. ஏ.
,, வி. ஜி. சுப்பய்யர் அவர்கள், பி. ஏ., எல்.டி.
,, ஜீ. சுந்தரேச அய்யரவர்கள், பி.ஏ., எல்.டி.
,, ஜீ. தாதாசாரியாரவர்கள், பி. ஏ.
,, ப. சம்பந்த முதலியாரவர்கள், பி.ஏ., பி.எல்.
,, ஆ. நரஸிம்மய்யங்கார் அவர்கள், எம்.ஏ., பி.எல்.
,, ப. கிருஷ்ணஸாமி சாஸ்திரி அவர்கள், பி.ஏ., பி. எல்.
,, டி. எஸ். நாராயண சாஸ்திரியாரவர்கள், பி.ஏ., பி.எல்.
,, எஸ். ஈ. சங்கர அய்யர் அவர்கள, பி.ஏ., பி.எல்.
,, என். ஆர். கே. தாதாசாரியார் அவர்கள், பி.ஏ., பி.எல்.
,, ஸி. சுந்தரம் அய்யர் அவர்கள், பி.ஏ.
,, ஸி. எஸ். சுந்தரம் அய்யர் அவர்கள், பி.ஏ., எல்.டி.
,, த. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி.ஏ.
,, ஸி. பி. வெங்கிடராமய்யரவர்கள், பி.ஏ.
,, வி. கே. விரராகவாசாரியார் அவர்கள், பி.ஏ.

குறிப்பு:—இன்னும் அனேகம் நிபுணர்களும், ஸ்திரீகளும் நமது பத்திரிகைக்கு வியாஸங்கள் எழுதுகிறார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டபடியாலும், இங்கு இடம் இல்லாமை பற்றியும் அவர்கள் பெயர்கள் இவ்விடம் அச்சிடப்படவில்லை.

## POST CARDS

### White and Double Coloured

Neatly printed with the words Post Card and with attractive Coat-of-arms. Cards are sufficiently thick and have a smooth writing surface.—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **White Cards per** | 100 | ... | 0 | 2 | 6 |
| do do | 1000 | ... | 1 | 6 | 0 |
| **Double Color cards per** | 100 | ... | 0 | 2 | 0 |
| do do | 1000 | ... | 1 | 2 | 0 |

NOTE:—Special rates for quantities over 5000 cards—Sample cards forwarded on receipt of one anna Postage Stamps.

THE GENERAL SUPPLIES Co.,
*Mylapore, Madras.*

---

## துரைத்தன விளக்கம்

## Elements of Civics for India

(in Tamil)

*Approved by the Text-Book Committee*, Madras, *for Elementary & Training Schools* (Vide *Fort Saint George* Gazette Dec. 21, 1909.)

"துரைத்தன விளக்கம்" என்ற நூல் துரைத்தனத்தாருடைய நன்மைகளையும், குடிகள் அவர்களுக்குச் செய்யும் உதவிகளையும், ஷை நன்மைகள் அளிக்கப்படும் விதங்களையும், இந்தியாவின் சுருக்கமான சரித்திரத்தையும் முறையே தெரிவிப்பனவாகிய நான்கு பாகங்கள் இப்புஸ்தகத்தில் அமைந்துள்ளன, புஸ்தகத்திலுள்ள விஷயங்கள் படிப்பவர் மனதில் நன்றாகப் பதியும்பொருட்டு, சுமார் 50-பொருத்தமான சித்திரப்படங்களும், தேசப்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உபாத்தியாயர்கள், மாணாக்கர்கள், குடித்தனக்காரர்கள் பெண்பாலார்கள் யாவருக்கும் இப்புத்தகம் அவசியமென்றே நினைக்கிறார்கள். விலை ரூபாய் ஒன்று.

ராப்பர் பைண்டு அணா 12.

## 1910-ம் வருஷத்திய

### ஜ்யோதிர் விலாஸ பாக்கட் டைரி

இதில் யாவருக்கும் உபயோகமான அநேக விஷயங்கள் தமிழில் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த டைரியின் மேன்மையைக் குறித்து அநேக கல்விமான்கள் மிகவும் சிலாகித்து நற்சாக்ஷி பத்திரங்கள் அளித்திருக்கிறார்கள். அழகாய் அச்சிட்டுப் பைண்டு செய்திருக்கிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாதாரண பைண்டு | ... | ... | 0 | 4 | 0 |
| பிளாப், பென்சலுடன் | ... | ... | 0 | 6 | 0 |

## "விவேக போதினி"

### சந்தாதாரர்க்கு மாத்திரம் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும் புத்தகங்கள் :—

பண்டித நடேசசாஸ்திரியார் இயற்றிய ஸ்ரீமத் வால்மீகி ராமாயண வசனம்.—பால காண்டம் ரூ 1-12. அயோத்தியா காண்டம் ரூ 3. ஆரண்ய காண்டம் ரூ 1-12. கிஷ்கிந்தா காண்டம் ரூ 1-12.

சந்தாதாரர்க்கு மாத்திரம் ரூ **6-8.**

தீனதயாளு 3-ம் பதிப்பு.—பண்டித நடேச சாஸ்திரியார் இயற்றியது. பள்ளிக்கூடங்களுக்கு உபயோகத்துக்காகவென்று 8 அணா விலைக்குக் குறைக்கப்பட்டது நமது சந்தாதார்க்கு மாத்திரம் அணா **6**

தேக தத்வசாஸ்திரம்.—தேக உறுப்புகளின் அமைப்பும், தொழிலும் விலை ரூ 2-8.

சந்தாதாரர்க்கு மாத்திரம் ரூ **1-12.**

நீதிவிவாத மஞ்சரி.-(இந்தியன் பினல்கோட் சட்டம், சாக்ஷி சட்டம், அடிதண்டனைச்சட்டம் இவை வியாக்கியானங்களுடன், ... ரூ 2-8

சந்தாதாரர்க்குமாத்திரம் ரூ **1-12**

கவனிப்பு.—மற்றும் ஜாப்தாவில் கண்ட புத்தகங்களுக்கு ஆர்டர் செய்யும் சந்தாதாரர்க்கும் ரூபாயிக்கு 1-அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்

---

## 'ஸாவரன்' பல்பொடி

## THE 'SOVEREIGN' TOOTH-POWDER

இப்பற்பொடி இதன் பேருக்கேற்ப மிகவும் குணத்தைக் கொடுக்கக்கூடியது. பல்வலியை நீக்கி, ஈறுகளைப் பலப்படுத்தும். துர்க்கந்தத்தை நீக்கி மனோஹரமான வாஸனையை உண்டாக்கும். விலையும் குறைவுதான்.

### விலைவிபரம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஒரு பாட்டில் | ... | ... | ... | 0 | 2 | 6 |
| ஒரு டெஜன் | ... | ... | ... | 1 | 8 | 0 |
| மூன்று டெஜன் | ... | ... | ... | 4 | 2 | 0 |
| ஆறு டெஜன் | ... | ... | ... | 7 | 8 | 0 |
| பன்னிரண்டுடெஜன் அல்லது ஒரு குரோஸ் | | | | 14 | 0 | 0 |

ஆறு டெஜன், ஒரு குரோஸ் ஆர்டர் செய்வோர்க்குப் பாக்கிங் இனாமாகச் செய்து கொடுக்கப்படும். அரை டெஜனுக்குக்குறைந்தஆர்டர்கள் அனுப்பமுடியாது. மாதிரிப் பற்பொடி வேண்டுவோர் ½-அணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்பற்பொடி நம்மிடம் மாத்திரமே கிடைக்கும். ஒவ்வொரு பார்ஸலும் மிகுந்த ஜாக்கிரதையுடன் பாக்கிங் செய்து அனுப்பப்படும்.

---

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், மதராஸ்.

# மிகவும் முக்கியமான பதிப்புகள்

## இங்கிலீஷ் வைத்திய சங்கிரகம்

## Compendium of English Medical Science

இதை இயற்றியவர் காலஞ்சென்ற M. ஜகந்நாத நாயுடு. இவர் மைசூர் அரண்மனையில் கௌரவம் பொருந்திய ஸர்ஜனும், திருவனந்தபுரத்து ஆயுள் வேதபாடசாலை தலைவராயும், சென்னை மெடிகல் காலேஜில் உபாத்தியாயருமாயிருந்தவர். யாவருக்கும் உபயோகமாகும்படி எழுதப்பட்டிருக்கிறது. விலை ரூபா 3—8—0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

இப்புத்தகம் 7-பாகங்கள் கொண்டது

முதல் பாகம்.—சரீரம்—மனுஷ சரீரத்தின் ஏற்பாடு அதாவது சரீரத்தின் உறுப்புகள் அவைகளின் ஒவ்வொன்றின் தொழில்கள்.

இரண்டாம் பாகம்.—சரீர வியாபாரம்—மானிட சரீரத்தின் உறுப்புகளின் சுகஸ்திதி.

மூன்றாம் பாகம்.—துணபாடம்—ஒவ்வொரு பதார்த்தத்தின் குணம் பிரயோசனம் தோஷம் அதனைப் பிரயோகிக்கின்ற கிரமம், ஒருவேளைக்கு உபயோகிக்கவேண்டிய பிரமாணம்.

நான்காம் பாகம்.—ஔஷத வைத்தியம்—வியாதிகளின் விபரம் ஒவ்வொன்றும் விமரிசையாக அனுபோகமானவரையில் எடுத்துக்காட்டி அவ்வியாதிக்குத்தக்கபடி ஔஷதம் உபயோகிக்கக் கைவல்லியமானது. இதில் வியாதிகளின் குணங்களை விமரிசையாய்ச் சொல்லியிருக்கிறது.

ஐந்தாம் பாகம்.—ஸஸ்திரீகம்—இரணவைத்தியம் இதில் நமக்குக்கொஞ்சம் ஞானமிருக்கவேண்டுவதவசியம்.

ஆறாம் பாகம்.—பிரசவ வைத்தியம்—இதினுள் கர்ப்ப உற்பத்திமுதல் பிரஸவகாலம்வரை நடந்துகொள்ளுகிறவிதம் அவர்களுக்கு அந்தந்தக் காலத்தில் ஏற்படும் வியாதிகளுக்குத் தகுந்த பரிகாரம், மற்றும் பிரஸவகாலத்தில் ஸ்திரீகளுக்கு இருக்கவேண்டிய கிரமம், புருஷாள் கவனிக்கவேண்டிய விதிகள், சிசு உற்பத்தியானதும் அதைக் கவனிக்கவேண்டிய விதங்கள்.

ஏழாம் பாகம்.—சுகபரிபாலனம்--நாம் உட்கொள்ளும் வஸ்துகளினுடையவும் மப்பு விஷயங்களில் உடுக்கும் வஸ்திரம் ஜலபானாதிகள் வகைரா இப்புத்தகம் ஒன்று ஒவ்வோர் குடும்பத்துக்கும் அத்தியாவசியமானது.

## விவசாய போதினி

அவசியம் குடித்தனக்காரர் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய ஓர் அருமையான புத்தகம். அநேக சித்திரப் படங்களுடன் கூடியது.—

இப்புத்தகத்தில் நிலங்கள் சம்பந்தமான விஷயங்களும், கருவிகள் எருக்கள் சம்பந்தமான சாஸ்திர நுட்பங்களும், சகலவித நன்செய், புன்செய் தோட்டக்கால் பயிர்களின் சாகுபடிகளும் விவசாய சீர்திருத்தத்திற்கு வேண்டிய முக்கிய சாதனங்களும் காட்டப்பட்டிருக்கின்றன.

கனம் மாஜிஹைகோர்ட்ஜட்ஜ் சுப்பிரமணிய அய்யர், திவான் பஹதூர் ரெகுநாதராவ், கனம் P.S. சிவஸ்வாமி அய்யர், விவசாய காலேஜ் உதவி தலைமை உபாத்தியாயர், சைதாபேட்டை கவர்ன்மெண்டு பண்ணை மானேஜர், சுதேசமித்திரன் பத்திராதிபர் கனம் ஜி. சுப்பிரமணிய அய்யர் முதலிய பெரியோர்களும், விவசாய சாஸ்திர வல்லோர்களும் நற்சாக்ஷிப்பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆங்கிலேய சுதேசப்பத்திரிகைகளாலும் நன்கு மதிக்கப்பட்டிருக்கிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| போர்ட்பயிண்டு செய்தது | ரூ. | 1 | 4 | 0 |
| காலிகோ | ,, | 2 | 0 | 0 |
| பருத்திப்பயிர் சாகுபடி | | 0 | 4 | 0 |

நன்றாய்ப் பார்வையிட்டு நல்ல காகிதத்தில்
தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு


மூவர் தேவாரம்-பண்முறை—1044-பக்கம் 3 0 0

இப்பதிப்பில் (1) சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவார வரலாறும், (3) தேவாரப்பண் அட்டவணையும், (4) தேவாரப் பாடல்பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவார ஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக் குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப்பொதுப் பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச்செய்த மூத்த திருப்பதிகமும் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

நாலாயிர திவ்யப்ரபந்தம்.—640 பக்கம் ரூ. 3 0 0

இப்பதிப்பில் (1) ஆழ்வார்களின் காலவைபவக் குறிப்பும், (2) ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களின் அட்டவணையும், (4) அந்தத் தேசங்களின் வைபவக் குறிப்பும், (5) பாசுரங்களின் முதலடி அகராதியும், (6) பாடபேதக் குறிப்புகளும் சேர்த்துப் பல பிரதிகளுடன் ஒத்திட்டுப்பார்த்து, நன்றாய் அச்சிடப் பெற்றுளது.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், மதராஸ்



ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாள்



ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதீ ஸ்வாமிகள்

பிரசுரம் செய்பவர்கள்:—ஜெனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், மதராஸ்.